# குயில்கள்



PDF Reducer Demo

கோகிலா மகேந்திரன்

மாதா - அமரர் திருமதி. சி. செல்லமுத்து
பிதா - அமரர் திரு. செ. சிவசுப்பிரமணியம்
(முன்னை நாள் அதிபர், தெல்லிப்பழை
சைவப்பிரகாச வித்தியாசாலை)
குரு - அமரர். செ. கதிரேசர்பிள்ளை
(நாடகாசிரியர், நெறியாளர், கவிஞர்)
ஆகிய மூன்று தெய்வங்களுக்கு
இந் நூல்
சமர்ப்பணம்.

## உள்ளே............


| | |
|---|---|
| சிலரின் கருத்துக்கள்...... | - IV |
| உங்களுடன் ஒரு நிமிடம்......... | - VI |
| நூலாசிரியரின் ஏனைய நாடக முயற்சிகள்....... | - VIII |
| பதிப்புரை.......... | - XIV |
| தான் கெடு பள்ளம்....... | - 1 |
| ஆலயம்.......... | - 18 |
| வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்........ | - 47 |
| குருவி கூவ மறந்ததோ......... | - 70 |
| இருட்டுக்குள் சுருட்டி........... | - 90 |
| பெண்ணின் எதிரி............ | - 112 |
| ஞான விளக்கு........... | - 131 |
| பாரதி மீண்டும் வருகிறான்.......... | - 150 |




## சிலரின் கருத்துக்கள்........

"திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களைக் கடந்த ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக அவர் செல்வி. கோகிலா சிவசுப்பிரமணியம் ஆகத் திகழ்ந்த காலத்திலிருந்து அவதானித்து வந்துள்ளேன். மகாஜனக் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவியாக அவர் திகழ்ந்த காலப்பகுதியில் நாடக நடிகையாக மேடைகளில் தோற்றம் தந்தவர் அவர். இலங்கைக் கலைக் கழக நாடகப் போட்டியில் மகாஜனா முதலிடங்களைப் பெற்றுத்திகழ்ந்த அக் காலப் பகுதியில் அவ் வெற்றிகளுக்குக் காரண கர்த்தாக்களாகத் திகழ்ந்தவர்களில் செல்வி. கோகிலாவும் ஒருவர்.

இன்றைய ஈழத்தின் முதல் வரிசைப் படைப்பாளிகளில் ஒருவராகக் கருதத் தகும் தகுதியை ஈட்டிக் கொண்டுள்ளார்."

பேராசிரியர். கலாநிதி. சு. வித்தியானந்தன்
8. 5. 1986.

"Mrs. Kohila Mahendran is one of the three authors who have been studied in a dissertation submitted recently to the University of Jaffna in the degree of Master of Philosophy. She is also a talented dramatist.

Mrs. Kohila is the secretary of lyceum of literary and Aesthetic studies, Tellippalai and the President of Solaikuyil Avaikkattu Kalam which trains students in Dramatic arts.

At present, she is a Visiting Lecturer in Drama & Theatre arts in the University of Jaffna. She speaks, writes, and reads English well. Therefore, she is able to deliver lectures on European Theatre to students in the Department of Fine Arts."

Professor. A. Sanmugadas
Dean, Faculty of Arts
University of Jaffna
30. 04. 1997.

"Miss. Kohila Sivasubramaniam impressed me as an extremely capable and hard working student. She was generally at the top of her class and her academic record was very good indeed. She excelled in the out of class activities of the college as well. She is easily one of the very best products of Mahajana College."

T. T. Jeyaratnam J. P
Retired Principal
17. 10. 1975

"கோகிலா மகேந்திரன் தமது படைப்புக்கள் மூலம் பெண்ணியத்திற்கு முழுமையான பங்களிப்பைச் செய்திருக்கிறார்."

செங்கையாழியான்
(வீரகேசரி 11. 7. 1997.)

புதிய தலைமுறையின் நவீன சிந்தனையாளராக நான் கோகிலாவைக் காணுகிறேன். அவரின் இலக்கிய நேர்மை மெச்சத் தக்கது.

டொமினிக் ஜீவா
(தினகரன் 2. 5. 1989)

"Kohila Mahendran writes with psychological depth. She is my favorite among the women writers in Sri Lanka writing in Tamil. She has an intellectual approach, artistic ability and psychological insight"

K. S. Sivakumaran
(In his interview with Robinson)
1989



## *உங்களுடன் ஒரு நிமிடம்..........*

"வாயில் பெரிது; மதில்கள், நிலம் பெரிது;
கோயில் பெரிது; வகுப் பறைகள், கூடங்கள்
ஆயும் இடம், நூலகம், அரங்கு, மண்டபங்கள், யாவும் பெரிதே "
என்று மஹாகவி அவர்களால் பாடப்பட்ட மகாஜனக் கல்லூரியில்,

"வந்து குவிந்து வளரும் இளையவர்கள்
சிந்தை தெளிந்து திரு மனிதர் ஆம் படிக்காய்"

அதை நெறிப்படுத்திய அமரர். மகாஜனாவின் சிற்பி, திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் தலைமைத்துவப் பொற்காலத்தில், அங்கு படிக்க நேர்ந்தது எனது அதிர்ஷ்டம்.

அக்காலத்தில் அக் கல்லூரியின் ஆசிரியர்கள் "எதையும் கடைந்தெடுத்து ஊட்டுகிற வன்மை புதிது" ஆக இருந்தமையால், நான் நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டேன். குறிப்பாக, ஆசிரியர், செ. கதிரேசர்பிள்ளை அவர்களின், "வருந்தி உதவுகிற தன்மை புதிது" ஆக இருந்தமையால் நான் வளர்ந்தேன்.

1966 முதல் இன்றுவரையான எனது நாடகத்துறை ஈடுபாட்டின் ஒரு பிரதிபலிப்பாக இந் நூல் வருகிறது. எனது பன்னிரண்டாவது நூலாகிய இதன் தலைப்பு 'குயில்கள்' , கோகிலம் என்றால் குயில். வசந்தகால வருகையை அறிவிப்பதற்காகக் கூவும் குயிலின் குரல் இனிமையில் துன்பங்களை மறந்து போகாத மனிதர் இல்லை. குயிலின் குரலில் கனிவான மிருதுத்தனம் ரஸமாய் இறங்கியிருக்கும். நாடகக் கலை, மனிதமனப்பாங்கு, விழுமியங்களில் அத்தகைய செம்மையை ஏற்படுத்தக் கூடியது. தெல்லிப்பழை சோலைக் குயில் அவைக் காற்றுக்களம் என்ற அமைப்பினூடாக எனது நாடக அனுபவங்களைப் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் நான் பகிர்ந்து கொண்டுள்ளேன்.

ஒருவன் தன்னைச் சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டிய இடத்தை அரங்கு வழங்குவதனால், அரங்கச் செயற்பாடுகளினூடாக நான் உள ஆரோக்கியப் படிகளில் மேலே ஏறியிருப்பதாய் உணர்கிறேன். எனது உதவியால் வேறு யாரும் வளர்ந்துள்ளனரா என்பதை அவர்களே கூறவேண்டும். ஆயினும் நான் கற்பித்த அல்லது அதிபராக இருந்த பாடசாலைகளில் எல்லாம் மாணவர்களை இத்துறை நோக்கி ஈர்த்துள்ளேன் என்பது எனது மனச்சாட்சிக்கு நிறைவுதரும் விடயம். நாடகத்துறையில் என்னிடம் பயின்ற மாணவர் பலரும் உள்ளத்தில் எனக்கு மிக நெருக்கமாய் வந்து விட்டமையை - விஞ்ஞானத்துறையில் என்னிடம் பயின்றவர்களை விட - உணர்ந்து நான் சிலிர்த்துப் போன கணங்கள் பல.

கல்லூரி நிலைக்குப் பிறகு, அரங்கத்துறையில் எனக்கு ஆசிரியர்களாய் அமைந்த பேராசிரியர். சு. வித்தியானந்தன், பேராசிரியர். கா. சிவத்தம்பி, குழந்தை. ம. சண்முகலிங்கம், கலாநிதி. சி. மௌனகுரு

ஆகியோரையும் இவ்விடத்தில் மிகுந்த நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

எமது அரங்கச் செயற்பாடுகள் அனைத்திலும் எனக்குப் பக்க பலமாய் நின்று ஊக்கு வித்த தெல்லிப்பழை கலை இலக்கியக்கள நண்பர்களும் தெல்லிப்பழை சோலைக் குயில் அவைக் காற்றுக்கள நண்பர்களும் என்னால் மறக்கப்பட முடியாதவர்கள்.

எனது நாடகங்கள் பலவற்றில் கவிஞர். சோ. ப. அவர்களின் கவிதைகளை மிகத் தாராளமாகவே பயன்படுத்தியுள்ளேன். அந்தப் பொழுதுகளில் எனது செயற்பாட்டை எந்தக் கேள்வியுமின்றி ஏற்றுக் கொண்ட கவிஞர் அவர்கள் என்றும் எனது நன் மதிப்புக்கு உரியவர்.

யாழ்ப்பாணத் தெருக்களில் பலமுறை நின்ற இடத்திலெல்லாம் நெருப்புப் பிடித்த போதும், நான் இன்னும் இந்த மண்ணில் சுய பிரக்ஞையுடன் வாழ்ந்து வருவதில் எமது குடும்ப அங்கத்தவர்களின் பங்குப் பணி பெரியது. வீட்டுச் சுமைகள் என்னை அழுத்தாமல் காத்தவர்களில் எனது தாயாருக்குப் பிறகு எனது சிறியதாயார் முக்கியமானவர். கல்வி, கலை, இலக்கிய, உளவியல் செயற்பாடுகளில் நான் ஈடுபடுவதற்குத் தேவையான நேர ஒதுக்கீடு எனது கணவரின் ஒத்துழைப்பாலுந்தான் சாத்தியப்படுகிறது. மகன் பிரவீணன் எனது இதயத்திற்குச் சலங்கை கட்டியவன். எனது செயற்பாடுகள் அனைத்திற்கும் மிக நேர்மையான விமர்சகன். அவனது வருகையின் பின்னரே எனது உயிர்ப்பூ விரிந்து மணம் பரப்பத் தொடங்கியது. இவையெல்லாம் வெறும் வாழ்க்கை விபத்துக்கள் என்று கருத முடியவில்லை. அதற்கு மேல் ஏதோ ஒன்று இருக்கிறது. அந்த ஒன்று எதுவாயினும் அதற்குத் தலை வணங்குகிறேன்.

நிறைவாக, இந்நூல் வெளிவருவதற்குத் தேவையான நிதித் தேவையின் ஒரு பகுதியைப் பெற்றுத் தந்த யாழ். இலக்கிய வட்டத்திற்கும் குறிப்பாகச் செங்கை ஆழியான் அவர்களுக்கும் 'நான் நன்றி மறக்க மாட்டேன்' என்பதைச் சொல்லி பதிப்புரை தந்த புத்தொளி ந.சிவபாதம் அவர்களுக்கு நன்றி கூறி, இந்த நூலை அழகுறவும், விரைவாகவும் அச்சடித்துத் தந்த டெக்னோவா நிறுவனத்தாருக்கும் குறிப்பாக எழுத்தாளர் க.சட்டநாதன் அவர்களுக்கும் திரு ஏ.ஜே. கனகரத்னா, திரு.மு.பிரணவன் ஆகியோருக்கும் என் அன்பைக் கூறி உங்களை உள்ளே செல்லுமாறு அன்புடன் வழி விடுகிறேன்.

வன்னியசிங்கம் வீதி
இணுவில் தெற்கு
சுன்னாகம்

கோகிலா மகேந்திரன்
26. 12. 2001



## நூலாசிரியரின் ஏனைய நாடக முயற்சிகள்

- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற இல்ல நாடகப் போட்டியில் சின்னையா இல்லம் தயாரித்த 'ஐயை' நாடகத்தில், 'ஐயை' யாக நடித்தமை - 1966
- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் கவிஞர். செ. கதிரேசர் பிள்ளை அவர்களின் 'அம்பையின் வஞ்சினம்' நாடகத்தில் நடித்தமை.இது இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப்போட்டியில் முதற் பரிசு பெற்றது. - 1967
- கவிஞர். செ. கதிரேசர் பிள்ளை அவர்களின் கோமகளும் குருமகளும் நாடகத்தில்,குரு மகளாகப் பிரதான பாத்திரத்தில் நடித்தமை. இதுவும் இலங்கைக் கலைக் கழக நாடகக் குழுவினர் நடத்திய அகிலஇலங்கைப் பாடசாலை களுக்கான நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்றது. - 1968
- பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் நடத்திய விடுதிகளுக் கிடையிலான நாடகப் போட்டியில் விஜயவர்த்தனா விடுதிக்காக நடித்து, அவ்வருடத்துக்குரிய சிறந்த நடிகைக் குரிய விருது பெற்றமை. - 1973
- பொலிகண்டி இ. த. க பாடசாலையின் நவராத்திரி விழாவில் "பட்டர் பெருமான்" என்ற நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. - 1975
- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நவராத்திரி விழாவை ஒட்டித் தயாரித்த திரு. கே. சோமசுந்தரம் அவர்களின் "காலனை வென்ற காலன்" நாடகத்தில் நாரதராக நடித்தமை. - 1979
- கீரிமலை நகுலேஸ்வர ம. வியின் வெள்ளி விழா நிகழ்வுகளின் போது, திரு. கே. சோமசுந்தரம் அவர்களின் "காலனை வென்ற காலன்" என்ற நாடகத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. - 1980
- கவிஞர். செ. கதிரேசர் பிள்ளை அவர்களின் 'கோமகளும் குரு மகளும்' நாடகத்தை மகாஜனக் கல்லூரியில் மீண்டும் நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. இது கீழ்ப்

பிரிவுக்கான இல்ல நாடகப் போட்டியில் அவ்வருடம் முதலிடம் பெற்றது. - 1982

- 'தரிசனங்கள்' என்ற நாடகத்தை மகாஜனக் கல்லூரியில் எழுதி, நெறிப்படுத்தி மேடையிட்டமை. ஆசிரியரின் சிறுகதை ஒன்றைக் கருப்பொருளாகக் கொண்டிருந்த இந்த நாடகம், மேற்பிரிவுக்கான இல்ல நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றது. - 1982

- 'பட்டங்கள் மீண்டும் பறக்கும்' என்ற நாடகத்தை மகாஜனக் கல்லூரியில் ஜெயரத்தினம் நினைவு நாள் விழாவுக்காக எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. இதுவும் ஆசிரியரின் பரிசு பெற்ற சிறுகதை ஒன்றைக் கருப்பொருளாகக் கொண்டது. - 1985

- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவியவர் நினைவு நாள் விழாவில் மேடை ஏறிய "முரண்பாடுகள்" என்ற இசை நடன நாடகத்தை நெறியாள்கை செய்தமை. - 1986

- தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் செயலாளராக இருந்து அதன் நாடக முயற்சிகளில் இணைந்து கொண்டமை. - 1986 முதல் இன்று வரை

- மகாஜனக் கல்லூரியின் ஜெயரத்தினம் நினைவு நாள் விழாவுக்காகத் 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற சிறுவர் நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. - 1989

- யாழ். பல்கலைக்கழகமும், கலாச்சாரப் பேரவையும் இணைந்து நடத்திய ஒரு வருட நாடக டிப்ளோமாப் பயிற்சி நெறியில் இணைந்து பேராசிரியர். சு. வித்தியானந்தன், பேராசிரியர். கா. சிவத்தம்பி, குழந்தை. ம. சண்முகலிங்கம், கலாநிதி. சி. மௌனகுரு, திரு. வி. வி. வைரமுத்து போன்றோரிடம் நாடகம் பயின்றமை. - 1987, 1988

- வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தேர்வுக்காகப் 'பௌர்ணமி நாள்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்ததுடன் தானும் பிரதான பாத்திரத்தில் நடித்தமை. - 1991

- வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான ஆசிரியர் தரத்தில் தோற்றிச் சித்தி யடைந்தமை. உப பாடம் - பண்ணிசை - 1991



- மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில், 'மீண்டும் நிலவு பொழியும்' என்ற நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. அம்பனைக் கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்கள் நடித்த இந்த நாடகத்தில் நூலாசிரியரும் பிரதான பாகத்தில் நடித்தார் - 1991

- பண்டத்தரிப்புக் கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் 'கோமகளும் குரு மகளும்' என்ற கவிஞர். செ. கதிரேசர் பிள்ளையின் நாடகத்தை நெறியாள்கை செய்து மேடையிட்டுக் கோட்ட மட்டப் பரிசை வென்றமை. - 1992

- வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் பாடப் பரீட்சைகளில் பரீட்சகராகப் பணி புரிந்தமை. - 1992 முதல் இன்று வரை

- வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்குத் தோற்றும் 5ம்தர, ஆசிரியர் தரப் பரீட்சார்த்திகளுக்கான பயிற்சி வகுப்புகளிலும், வதிவிடப் பயிற்சிகளிலும் விரிவுரையாற்றியமையும், செய்முறை வகுப்புகள் நடத்தியமையும். - 1992 முதல் இன்று வரை

- க. பொ. த உயர் தரப்பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கற்பித்தமை. யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. - 1991 முதல் 1994 வரை

- தெல்லிப்பழை சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் தலைவராக இருந்து பல மாணவர்கள் நாடகத்துறையில் வளர உதவியமை - 1990 முதல் இன்றுவரை

- தொலைக்கல்விப் பயிற்சி மூலம் பயிற்றப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு நாடகத்துறைப் பகுதி நேரப் போதனாசிரியராகப் பணியாற்றியமை - புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி நிலையம் - 1991, 1992, 1993.

- யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத் துறை, பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட "கற்கை நெறியாக அரங்கு" என்ற கருத்தரங்கில் சிறுவர் அரங்கு தொடர்பான கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றியமை – 1993-

- ஆசிரியர் தின விழாவுக்காக மலையும் மடற்பனையும் என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மானிப்பாய் மெமோரியல் கல்லூரி மண்டபத்தில் மேடை ஏற்றியமையும், பல ஆசிரியர்களை இதில் நடிக்க வைத்தமையும் -1993-

- தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறையினர் 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் மத்திய கல்லூரியில் நடத்திய முரண்பாடு தீர்வுக் கல்விச் செயலமர்வின் இறுதிநாள் ' முரண்பாடுகள்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து, செயலமர்வில் பங்கு பற்றியோருடன் இணைந்து நடித்தமை -1997-

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில், நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான வருகை விரிவுரையாளராகப் பணி புரிந்தமை. -1996,1997-

- கைதடி முதியோர் பாதுகாப்பு இல்லத்தில் ஒரு நாடக நிகழ்வை நிகழ்த்தி, முதியோரையும் அதில் பங்கு கொள்ளச் செய்தமை - 1999,

- தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட மல்லிகா மாப்பிள்ளை ஸ்ரோர்ஸ் நாடகத்தை நெறியாள்கை செய்தமை -1998

- இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் சோ.பத்மநாதனின் வடக்கிருத்தல் கவிதை நூல் அறிமுக விழாவில், அவரது "பாலாய் நிலவு பொழியும் " என்ற கவிதையை நாடகப் பண்புகளுடன் தயாரித்து நெறியாள்கை செய்து மேடையேற்றியமை. -1999-

- "நாடகத்தின் இயல்பும் குணாதிசயங்களும்" என்ற தலைப்பில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் உரையாற்றியமை -1993

- ஆசிரியர் தின விழாவுக்காக 'ஆசிரிய வாண்மை' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மருதனார் மடத்தில் இயங்கிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் மேடை ஏற்றியமை -1994-



- ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரின் பரிசளிப்பு வைபவ நிகழ்வில், நாடக வளர்ச்சியின் வெட்டு முகத்தோற்ற மொன்றைக் கலை நிகழ்வாகத் தயாரித்து அளித்தமை 1998

- வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலா அவர்களை வரவேற்கும் பொருட்டு, வட இலங்கைச் சங்கீத சபை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் "இலக்குப் புள்ளி" என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து, இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றியமை. -1999

- நாடக கலா வித்தகர் பட்டத்துக்கான வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைக்குப் பரீட்சகராகப் பணியாற்றியமை, - 2000 முதல் இன்று வரை

- மான்செஸ்ரர் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு ஜேம்ஸ் தோம்சன் அவர்கள் நடத்திய பிரயோக அரங்குப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டமையும் அந்த அறிவை ஆசிரியர் மாணவருடன் பகிர்ந்து கொண்டமையும். -2001-

- நாடகம், கலை, சிகிச்சை என்ற கட்டுரையைப் பேராசியர் அ.சண்முகதாஸ் அவர்களின் 'சண்முக தரிசனம்' என்ற மணிவிழா மலருக்கு எழுதியமையும்,அவ்விடயம் பற்றிப் பல மேடைகளில் உரையாற்றியமையும் -2001

- ஆரம்பக் கல்வி ஆசிரியருக்குச் சிறுவர் அரங்கு தொடர்பான பயிற்சிகளை ஆசிரியர் நிலையம் ஊடாக வழங்கியமை. -2001-

- மந்திரக் கடை (Magic Shop) என்ற நாடகச் சிகிச்சை முறையைச் செயல் முறையில் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்தமை - 2001

## பதிப்புரை

1965ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். இலக்கிய வட்டம் இன்று வரை யாழ் மாவட்ட எழுத்தாளர்களுக்குப் பல்வேறு வகைகளிலும் உதவி வருகிறது. அவர்களை ஊக்குவித்தும் வருகிறது.

2001ம் ஆண்டில், வடக்கின் புனர்வாழ்வு அமைச்சு, எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்காக, இலக்கிய வட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது. திருமதி. கோகிலா மகேந்திரனின் குயில்கள் என்ற நாடகநூல் வெளிவருவதற்கு அந்த நிதியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த நூல் யாழ். இலக்கிய வட்ட வெளியீடாக வருவதில் வட்டம் மகிழ்ச்சி அடைகிறது. திருமதி. கோகிலா அவர்கள் 1973 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம் எனப் பல துறைகளிலும் இடைவிடாது முயற்சி எடுத்து, ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் முன்னணியில் விளங்குவது பற்றி யாழ். இலக்கிய வட்டம் பெருமை கொள்கிறது.

இதுவரை பதினொரு நூல்களை வெளியிட்டு ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்திருக்கும் திருமதி. கோகிலா மகேந்திரன் பன்னிரண்டாவது நூலாக இந்நூலை வெளியிடுவதில் யாழ் இலக்கிய வட்டம் உவகையுறுகிறது.

இந் நூல் வெளிவர ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கிய வடக்கின் புனர் வாழ்வு அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு யாழ் இலக்கிய வட்டம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.

யாழ் இலக்கிய வட்டம்
யாழ்ப்பாணம்
26.12.01,

புத்தொளி. ந. சிவபாதம்
பொருளாளர்.

# தான் கெடு பள்ளம்

**முதல் மேடையேற்றம்**

1988 தமிழ்த் தினப் போட்டி – பண்டத்தரிப்புக் கோட்ட மட்டத்தில் முதலிடம்.

**இரண்டாவது மேடையேற்றம்**

1988 புரட்டாதி – சரஸ்வதி பூஜை - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபம்

**மூன்றாவது மேடையேற்றம்**

1989-10-20 பலாலி ஆசிரியர் கலாசாலைத் தமிழ் விழா.

**நான்காவது மேடையேற்றம்**

1994 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபம்.

முதல் மூன்று மேடையேற்றங்களினதும் நெறியாயாளர் திருமதி. கோகிலா மகேந்திரன்.

நான்காவது மேடையேற்ற நெறியாளர்
செல்வி. காயத்திரி இராஜரட்ணம்
[25 நிமிட சிறுவர் நாடகம்]

# தான் கெடு பள்ளம்

[பாடகர் குழு வரிசையாய் வந்து, மேடையின் கீழே பார்வையாளருக்கு முன்னே, அவர்களைப் பார்த்து அமரல்.]

[நடிகர் ஒருவர் மேடையின் பின்புறமிருந்து, "தான் கெடு பள்ளம் சிறுவர் நாடகம்" என்ற அட்டையைத் தாங்கிய வண்ணம் DC க்கு வருதல்.]

[ஏனைய நடிகர்கள் அனைவரும் பல வேறு திசைகளிலுமி ருந்து ஓடி வந்து மேடையில் ஏறுதல், கூடிக் கதைத்தல் ஊமம்.]

பாடகர்:- தத்தித் தகணக சொம்தரி கிடதக –
(2 முறை)
தகதித் தகணக சொம்தரி கிடதக –
(2 முறை)
தாதா கிறதக சொம் - (2 முறை)
தாதா கிறதக சொம் – (2 முறை)
[நடிகர் நாலு குழுக்களாகப் பிரிந்து, இத்தாளத்துக்குத் தமக்குள் கதைப்பதாக ஊமம் செய்தல்]
[பின்னர் எல்லோரும் உறை நிலைக்கு வருதல். உறை நிலைக்கு வரும் கணப்பொழுது பின்னணி இசை மூலம் உணர்த்தப்படும்.]

உரைஞர் 1:- [உறைநிலையில் இருந்து விடுபட்டு] இப்ப இண்டேவல் நேரம். இண்டேவல் எண்டாலே இவைக்குக் கதைக்கிறதுதான் வேலை.





உரை 2:- கதை யெண்டாலோ, பூராயம் பிடிக்கிற கதை!

உரை 3:- தெரியாமல் தான் கேக்கிறன். நீங்கள் இப்ப வேறை என்ன செய்யப் போறியள்? ஆ ... ?

உரை 1:- நான் படிக்கப் போறன்.
[படிப்பது போல ஊமம் நிகழ்த்துகிறார்.]
[கதைத்துக் கொண்டிருந்தவர்கள் .அடிபடுவது போல ஊமம் நிகழ்த்துகிறார்கள்.]

பாடகர்:- தத்தித் தகணக சொம்தரி கிடதக –
(2 முறை)
தகதித் தகணக சொம்தரி கிடதக –
(2 முறை)
தாகி ஜெனுத ஜெனு
தாகி ஜெனுத ஜெனு
தாதா கிறதக சொம் - (2 முறை)
தாதா கிறதக சொம் - (2 முறை)

அடிவாங்கி நொந்து வந்தவர்:-
இவையள் அடிபடினம்.நான் படிக்கப் போறன்.

உரை 1:- எனக்குப் படிச்சு அலுத்துப் போச்சு. நான் அடிபடப்போறன்.

பாடகர் 1:- இண்டைக்குக் காலமை அசெம்பிளியிலை, ரீச்சர் ஒரு கதை சொன்னவை எல்லே. உங்களுக்கு ஞாபகம் இருக்கே?
[நடிகர் எல்லோரும் யோசிக்கும் உறைநிலைக்கு மாறுதல்.]

பாடகர் 2:- நாடகம் நல்லதோர் ஊடகம் தம்பி.

உரை 2:- உவை என்ன பாடினம்?

பாடகர்:- நாடகம் நல்லதோர் ஊடகம் தம்பி
நன்மையும் தீமையும் சொல்லிடத் தம்பி,
ஆடலும் பாடலும் இணைந்தது தம்பி,
அருமையான விளையாட்டுத் தம்பி,
இசையுண்டு;
உரையுண்டு;
இசையுண்டு. உரையுண்டு, சித்திரம் உண்டு
எல்லா விதமான கலைகளும் உண்டு.
நிகழ்த்துவோர் சுவைப்போர் ஒன்றாகக் கூடி
நிறைவான எதிர்கால நன்மையை நாடி
சிறுவரின் நாடகம் சிறப்பாகச் செய்ய
சிந்தனையில் நல்ல கருத்துக்கள் தோன்ற
(நாடகம்)
மேடையில்;
அலங்காரம்;
மேடையில் அலங்காரம் மிகையாக உண்டு
ஆடைகள் பலநிறம் அழகிது பாரும்
சாடையாய்த் தமிழிலே மழலையும் உண்டு
சோடை போகா தெங்கள் நடிப்புமே இங்கு
சிறுவரின் நாடகம் சிறப்பாகச் செய்வோம்
பெருமதி கண்டு ரசிப்பீர் எம்மை.
[இப் பாடலுக்கு நடிகர்களில் ஒரு சோடி வலைப் பந்து விளையாடல், ஒரு சோடி கயிறிழுத்தல், ஒருவர் படித்தல், ஒருவர் பாடத்தை மூட்டையாய்ச் சுமத்தல், ஒரு சோடி மாங்கொட்டை போட்டு விளையாடல் போன்ற ஊமங்கள்.]





உரை 3:- ஐடியா .... எடி யோய் ... நாங்கள் ரீச்சர் சொன்ன கதையை ஒரு நாடகமாய் நடிப்பம், என்ன?

எல்லாரும்:- ஓ .......

உரை 4:- [சபையைப் பார்த்து]
உங்களுக்கும் நாடகம் எண்டால் விருப்பமெல்லே? விருப்பமான ஆக்கள் வாங்கோவன், நடிப்பம்.

நடிகர் 1:- கா ....... கா....... கா...... [கத்திக் காட்டி] நான் தான் காகம்.

நடிகர் 2:- கூ ....... கூ ....... கூ ...... [குயில் போலக் கூவி] நான் தான் காகம்.
[எல்லோரும் பலமாகச் சிரித்து உறை நிலைக்கு வந்த பிறகு]

உரை 1:- ஓமடி, உவளின்ரை நிறத்துக்கு உவள் தான் காகம். எங்கை ஒருக்காத் தத்தித் தத்தி நடந்து காட்டு பாப்பம்.

நடிகர் 1:- கா ..... கா .... கா ....
[பறந்து நடந்து காட்டுதல்]

பாடகர் 2:- சோக்காத்தான் இருக்குது.

நடிகர் 3:- ஆர் நரி!

உரை 2:- சீ ..... இவன் நரிக்குப் பொருத்தமில்லை.
[அவர் ஏமாற்றமுடன் திரும்பிப் போதல்]

அந்தா நிக்கிறான் முழியைப் பிரட்டிக்கொண்டு. அவன் தான் நரி.
[அவர் நரி போல நடந்து ஊளையிட்டுக் காட்டுதல்.]

உரை 3:- முந்தி ஒருக்காக் காகத்தாரிட்டை வடை பறிச்சனீர் எல்லே ... அதை ஒருக்காச் செய்து காட்டும்.
[நரி ஊளையிட்டு நடித்துக் காட்டல்]

எல்லாரும்:- றைற் .... உவர் தான் நரி.

உரை 4:- மானுக்கு ஒரு சாதுவை விடுவம், மச்சம் தின்னாத சாது.
[எல்லோரும் தமக்குள் அடிபடுதல், இறுதியில் ஒருவர் முன் வருதல்.]

நடிகர் 3:- நான் ....?

உரை 1:- ஓ ..... உது பாவத்தார். உதை விடுவம். எங்கை ஒருக்கா மான் மாதிரித் துள்ளு பாப்பம்.
[மான் துள்ள மற்றவர் சரி பார்த்தல் ஊமம்]

எல்லாரும்:- றைற் இவர் தான் மான்.

உரை 5:- எல்லோரும் போய் நாடகம் நடிக்க ஆயத்தமாய் வாங்கோ.
[எல்லோரும் ஓடி, வெளிக்கிட்டுத் திரும்பி வருதல், ஊமம்]





உரை 1:- ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு காடு இருந்தது.
(காடு அமைதல்)
அந்தக் காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்தன.

பாடகர்:- தக தகிட
தக தகிட (20 முறை)
[வேடமிட்ட பல மிருகங்களும் நடந்து வருதல்]

உரை 2:- அங்கே ஒரு காகமும் மானும் நண்பர்களாய் இருந்தன.

பாடகர்:- கறுப்புக் காக்கை நானல்லவோ ஏலே லங்கடி ஏலோ
புள்ளி மானும் நானல்லவோ ஏலேலங்கடி ஏலோ
நண்பர்களாய் நாம் சேர்ந்தோம் ஏலேலங்கடி ஏலோ
நல்ல இணை நாமல்லவோ ஏலேலங்கடி ஏலோ
பாட்டுக்கள் பாடுவமே ஏலேலங்கடி ஏலோ
ஆட்டங்கள் ஆடுவமே ஏலேலங்கடி ஏலோ
பட்சணங்கள் தின்றிடுவோம் ஏலேலங்கடி ஏலோ
பசும் புல்லை உண்ணுவமே ஏலேலங்கடி ஏலோ
மரத்தினிலே தூங்கிடுவேன் ஏலேலங்கடி ஏலோ
மண்ணினிலே உறங்கிடுவேன் ஏலேலங்கடி ஏலோ
ஆபத்தில் உதவிடுவோம் ஏலேலங்கடி ஏலோ
அரிய நட்புக் காத்திடுவோம் ஏலேலங்கடி ஏலோ
[காகமும் மானும் பாடி ஆடுவர்]

[சில வேளைகளில் மற்ற நடிகரெல்லாம் மரங்களாய் நிற்பர்.சில வேளைகளில் வேறு விலங்குகளாய் அபிநயிப்பர்.]

**காகம்:-** கா ..... கா ..... கா ..... என்ன யோசிக்கிறாய்?

**மான்:-** நான் காலமை மேயப் போகேக்கை நரி அண்ணாச்சியைக் கண்டனான்.

**காகம்:-** ம் ...... ம் .... எந்த நரி? எட்டாப்பழம் புளிக்கும் எண்ட நரியோ?

**மான்:-** ஓ ....... அவர் எங்களோடை நட்பாய் இருக்க விரும்பிறார்.

**காகம்:-** அவர் தன்ரை நரிப்புத்தியைக் காட்டுவார் பிறகு!

**மான்:-** சீ ...... சீ ..... அவர் நல்லவர். பாவம். முந்தி உன்னட்டை வடை பறிச்சவர் எண்டு உனக்கு அவரிலை சரியான கோபம் என்ன?

**காகம்:-** அவர் ஆனானப்பட்ட சிங்கராசாவையே ஏமாத்தினவர் முந்தி ஒருக்கா.

**மான்:-** அவர் இப்ப மாறிட்டார்.

**காகம்:-** இப்ப எண்டால் .....?

**மான்:-** (வாலைப் பிடித்துக் காட்டி) வால் அறுந்தாப் பிறகு .......



**காகம்:-** முன் பின் பழக்கமில்லாதவனை நம்பப் பிடாது.

**உரை 1:-** குலம் கோத்திரம் தெரியாமல் சிநேகிதம் வைக்கப் பிடாது.

**மான்:-** குலம் என்ன குலம்? சாதி இரண்டு தான்.

**உரை 2:-** ஔவையார் சொல்லிப் போட்டார்.

**உரை 3:-** பாரதியாரும் சொல்லிப் போட்டார்.

**பாடகர்:-** சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர் .......
சாதிகள் இல்லையடி பாப்பா .......
(மற்றவர் அனைவரும் உறை நிலையில் நிற்க, ஒருவர் பாரதி போல நடிப்பார்.)

**காகம்:-** சரி .... நீ ..... இவ்வளவு தூரம் சொல்லுற படியால் சேர்த்துக்கொள்ளுவம்.

**மான்:-** நீ எனக்கு எப்பிடிச் சிநேகிதனோ அப்பிடி அவனும் இருக்கட்டன்.

**நரி:-** [மிருதங்க லயம் ஒன்றுக்குக் கம்பீரமாக நடந்து வந்து] குட் மோர்னிங்!

**காகமும் மானும்:-** குட் மோர்னிங், குட்மோர்னிங்!!

**நரி:-** இனிமேல் நாங்கள் பிறெண்ட்ஸ் தானே! விளையாடுவம் வாறியளோ?

**காகம்:-** விளையாட்டெண்டா எனக்கும் விருப்பந்தான். என்ன விளையாடுவம்?

**நரி:-** தாச்சி மறிப்பம்.

**காகம்:-** ஓ ........ அதிலைதான் நல்லா அளாப்பலாம்.

**நரி:-** நான் இப்ப ஏமாத்திறதே இல்லை.

**காகம்:-** முந்தி, ஆட்டுக்குட்டின்ரை தலையிலை ஏறிக் கிணறு பாயேக்கை ....

**நரி:-** *சீ* ..... *சீ* .... உது ஆற்றை கதை? என்ரை கோவக் காறர் வேணுமெண்டு கட்டி விட்ட கதையெல்லோ!

**உரை 4:-** பாம்பு தோலைக் கழற்றி விட்டது.

**உரை 1:-** ஆனால் பரிசுத்தவான் ஆகிவிட்டதோ தெரியவில்லை.
[நரி நடுவில் நிற்க, எல்லாரும் வட்டமாய் நடந்து நரியைப் பரிசோதித்துப் பார்த்தல். ஒருவர் வெப்பமானி வைத்து அளத்தல், ஒருவர் நாடி பிடித்தல், ஒருவர் ஸ்டெதஸ் கோப்பினால் சோதித்தல், வால் அறுந்திருப்பதைப் பார்த்துச் சிரித்தல்]

**பாடகர்:-** தகதகிட, தகதகிட (20 முறை)



**எல்லாரும்:-** பொறுத்திருந்து பாப்பம்.

**மான்:-** [DC க்கு வந்து சபையைப் பார்த்து]
உங்களுக்கு விளையாட விருப்பமெல்லே.
வாருங்கோவன் விளையாடுவம்.
[சபையில் இருந்து சிலர் வந்து மேடையில் ஏறல்]

**பாடகர்:-** தாச் சொணங்கிட ததிங்க தத்துமி
தாச் சொணங்கிட ததிங்க தத்துமி
(20 முறை)
[எல்லோரும் சோடி சோடியாய்த் தாச்சி மறித்தல், ஒருவர் கிளியாய் நிற்றல் ஊமம் முடிய உறை நிலை]

**காகம்:-** இருளுது மழை வரப்போகுது ......

**மான்:-** மழை தூறுது ......

**எல்லாரும்:-** மின்னல், மின்னல், மின்னல்!
காது வெடிக்கும் படி, இடி, இடி, இடி!
காற்று, புயலாய், சுழன்று, வருகிறது!
ஸ் .... ஸ் ....... ஸ் ....... ஸ் ........
மழையோ, பெரிதாய், பொழிந்து,
அலைகிறது!
(எல்லோரும் வட்டமாய் நின்று பெருமழையின் ஒலிவிளைவை ஏற்படுத்துவர்)

**மான்:-** (நடுங்கியபடி) சூ ..... நல்லா நனைஞ்சு போனன். பசிக்குது .... குளிருது ....

நரி:- அங்கை ஒரு இடத்திலை நனையாத புல்லிருக்குது ..... வா, காட்டுறன்.

பாடகர்:- தக தகிட, தகதகிட ........ (20 முறை)
[நரியும் அதன் பின்னே மானும் நடந்து போதல்]

உரை 1:- மானை அழைத்துச் சென்று ஒரு கொல்லையைக் காட்டியது நரி.

உரை 2:- அன்று முதல் அந்த மான் தினமும் அங்கே போய்ப் பயிரை மேயும்.

உரை 3:- தோட்டக்காரன் பார்த்து விட்டு அங்கே வலை விரித்தான்.

தோட்டக்காரன்:- [தோட்டம் முழுவதும் நடந்து அவதானித்த பிறகு]
இந்த மான் ஒண்டு எப்பவும் இஞ்சை வந்து பயிர் எல்லாத்தையும் மேயுது. வரட்டும் இண்டைக்கு!

பாடகர்:- மான் ஒன்று பயிரைத்தான் தினம் வந்து மேயும்
வரட்டுமே இன்றைக்குப் பார்ப்பேனே நானும்
வலை ஒன்றை விரித்தேனே அகப்பட்டு வீழும்
வருந்தாத வருத்தங்கள் வர இன்றே சாகும்.
[தோட்டக்காரன் வந்து வலை விரித்தல், வெளியேசெல்லல்.மான் வந்து மேய்தல், வலையில் விழுதல் ஊமம்]



மான்:- ஐயோ, ஐயோ, வலையிலை விழுந்திட்டன். என்னை யாரும் காப்பாத்துங்கோவன். நரி அண்ணாச்சி, காக்காத் தங்கச்சீ ..... நரி அண்ணாச்சீ ........ காக்காத் தங்கச்சீ ........ ஐயோ ஐயோ
[வலையில் துடிப்பதான ஊமம்]

நரி:- (வந்து எட்டிப் பார்த்து விட்டு, இரகசியமாய்ச் சபைக்கு)
அச்சா இவன் அகப்பட்டுப் போனான். நான் ஒளிஞ்சிருப்பம். சாகட்டும் எலும்பு நல்லாயிருக்கும். மான் இறைச்சி நல்ல ருசி உங்களுக்குத் தெரியுமே, நல்... ல் .. ல...ருசி
[வாயூறி நாக்கால் உதட்டை நனைத்தல்]

மான்:- [நரியைக் கண்டு விட்டு] நரியண்ணை, நரியண்ணை நல்ல நேரத்திலை வந்தியள் .... என்னை விடுவிச்சு விடுங்கோ!

உரை 1:- உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.

உரை 2:- நரி அண்ணா பரிசுத்தவான் ஆகிவிட்டாரோ இல்லையோ என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

நரி:- ஐயோ, ஐயோ, இண்டைக்குவெள்ளிக்கிழமை விரதநாள். நான் தோல் வலையிலை முட்டிறதில்லை. நாளைக் கெண்டால் நான் என்னவும் செய்வன். சிநேகிதனுக்காக உயிரையே விடக்கூடிய ஆள் நான் .... ஓ ...!

**உரை 3:-** பாம்பு தோலைக் கழற்றினாலும், பரிசுத்தவான் ஆகிறதில்லை. பார்த்தீர்களா?
[நரி போய்ப் பற்றையில் மறைந்திருக்கிறது]

**உரை 4:-** அன்றிரவு படுக்கைக்கு மான் வரவில்லை என்று கண்டு, அதைத் தேடி வருகிறது காகம்.

**உரை 1:-** உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.

**காகம்:-** கா ........ கா ....... கா ........
[எல்லா இடமும் தேடிப்பார்க்கிறது. இறுதியில் மானை வலையில் கண்டு ஓடி வந்து]
சிநேகிதா, உனக்கு ஏன் இந்தத் துன்பம் வந்தது?

**மான்:-** (அழுதபடி) உன்ரை சொல்லைக் கேளாத படியால் தான் வந்தது.

**காகம்:-** உன்ரை சிநேகிதன் நரி எங்கை?

**மான்:-** அவன் என்ரை இறைச்சியைச் சாப்பிட எங்கை யேனும் ஒளிச்சிருப்பன். என்னை எப்பிடியாவது விடுவிச்சு விடு காக்காத் தங்கச்சீ ...!
[காகம் ஓடி ஆடி முயற்சி செய்யும் ஊமம்]

**காகம்:-** [எட்டிப்பார்த்து] அதோ, தோட்டக் காரன் வாறான்.





**மான்:-** [அந்தரப் பட்டுப் பதறி] ஐயோ, ஐயோ நான் என்ன செய்ய?
[தோட்டக் காரன் UL இல் வருதல், நீண்ட தூர நடை ஊமம்]

**காகம்:-** நான் ஒரு யோசனை சொல்லிறன். நீ இப்ப மூச்சை அடக்கிக் கொண்டு செத்தவன் போலக் கிட! தோட்டக்காரன் நீ செத்துப் போனாய் எண்டு நினைச்சு கட்டின வலையை அவிட்டுச் சுருட்டிக் கொண்டு போவன். அப்ப நான் கா..... கா... எண்டு கத்துவன். நீ எழும்பி ஓடு .... என்ன ..... சரியே?

**உரை 2:-** காகம் மானின் கண்ணைக் கொத்திக் கொண்டு இருந்தது.

**உரை 3:-** தோட்டக்காரன் மான் செத்தது என நினைத்து விட்டான்.

**பாடகர்:-**
நான் விரித்த ஓகோ வலையினிலே ஓகோ
ஓகோ
அகப்பட்டு விட்டார் மான்பிள்ளை ஓகோ
ஓகோ
பயிரெல்லாம் மேயும் மான்பிள்ளை ஓகோ
ஓகோ
படுபாவி செத்து ஒழிந்தானே ஓகோ ஓகோ
காகந்தான் கண்ணைக் கொத்திறதே ஓகோ
ஓகோ
கரைச்சல்தான் இனிமேல் தீர்ந்ததுவே ஓகோ
ஓகோ

[வலையை அவிழ்த்தல், சுருட்டல் தூக்கிச் செல்லல் ஊமம்]

| | |
|---|---|
| காகம்:- | கா ..... கா ....... கா .....<br>[மான் எழுந்து ஓடலும், நரி அலறி வீழ்தலும்] |
| உரை 4:- | ஓடிய மானைக் கொல்ல நினைத்த தோட்டக்காரன் தடியை வீசினான். |
| உரை 1:- | அது மறைந்திருந்த நரியின் மேல் பட நரி இறந்து போனது. |
| உரை 2:- | நரி, கடைசியிலை தன்ரை நரிப்புத்தியைக் காட்டிட்டுது பாத்தியளோ? |
| உரை 3:- | அப்ப இந்த நரியை என்ன செய்வம்? |
| உரை 4:- | பாவம், அதை மன்னிச்சு விடுவம். |
| உரை 1:- | அந்தா, செத்த நரிப்பிள்ளை எழும்பி வாறார். |
| உரை 2:- | இது நாடகந்தானே ... அதுதான் எழும்பிட்டார். |
| உரை 3:- | அப்ப நாங்கள் வணக்கம் சொல்லி நாடகத்தை முடிப்பம். |
| எல்லாரும்:- | (வட்டமாய் வந்து)<br>[மிருதங்க நடைக்கு எல்லோரும் மேடையை விட்டு நீங்கல்] |





## முதல் மேடையேற்ற நடிகர்கள்:-

| | | |
|---|---|---|
| சாந்தரூபி ஏரம்பமூர்த்தி | - | நரி |
| தமயந்தி நடராஜா் | - | காகம் |
| சுகிர்தா இராமசாமி | - | மான் |
| பாமினி பாலச்சந்திரன் | - | தோட்டக்காரன் |
| நளாயினி சோமசுந்தரம் | - | உரைஞர் - 1 |
| சிவதர்சினி ஜீவரத்தினம் | - | உரைஞர் – 2 |
| கௌசீதகி சண்முகநாதன் | - | உரைஞர் – 3 |
| வினோதினி விஜயரத்தினம் | - | உரைஞர் – 4 |
| சதீஷ்பாலமுருகன் முருகையா | - | பாடகர் |
| புகலவன் சிவராஜா | - | பாடகர் |
| ராஜீவன் சண்முகரத்தினம் | - | பாடகர் |
| கோமதி பாலரத்தினம் | - | பாடகர் |
| நீதிமதி குமாரசுந்தரம் | - | பாடகர் |
| நளினி சங்கரப்பிள்ளை | - | பாடகர் |
| ஆரணி தம்பிராஜா | - | பாடகர் |
| சாந்தினி தம்பிராஜா | - | பாடகர் |
| வானதி ஏமூர்நாயகம் | - | பாடகர் |
| சித்திரா கதிர்காமநாதன் | - | பாடகர் |

# ஆலயம்

**முதல் மேடை யேற்றம்:-**
1990 - நல்லை ஆதீனம் நடத்திய சமய நாடகப் போட்டி முதற் பரிசு.

**இரண்டாவது மேடையேற்றம்:-**
10-3-1994 - உரும்பிராய் ஞான வைரவர் தேவஸ்தான வீதி. திறந்த வெளி அரங்கு - சிவராத்திரி நாள்.

**மூன்றாவது மேடையேற்றம்:-**
3-9-1994 - நல்லை ஆதீனம்.
சைவ சித்தாந்த ஒழுகலாறுப் பயிற்சி வகுப்பு.

**நான்காவது மேடையேற்றம்:-**
19-2-1995 - நாவலர் ஆச்சிரம மண்டபம்
புண்ணிய நாச்சியம்மையார் தினம்.

நெறியாள்கை:- திருமதி, கோகிலா மகேந்திரன்.
முதல் மேடையேற்ற நடிகர்கள்:-

பகீரதி ஜீவேஸ்வரா.
சிவதர்ஷினி ஜீவரத்தினம்.
வசந்தா கந்தசாமி.
சுபாஜினி கனகரத்தினம்.
கௌசிதகி சண்முகநாதன்.
சதீஸ் பாலமுருகன்
- முருகையா.
பிரவீணன் மகேந்திரராஜா.
சுகிர்தா இராமசாமி.
தமயந்தி நடராஜர்.
மலர்ச் செல்வி -
- கிருஷ்ணபிள்ளை.





# ஆலயம்

[1மணி நேர சமயப் பிரச்சார நாடகம்]

[நடிகர் அனைவரும் வீட்டில் பல் வேறு செயற் பாடுகளில் உறைநிலை. பாடகர் DL இல் கூடி நின்று பாடுவர்.]

பாடகர்:-

நிலவும் அரவும் கொன்றை மலரும் சடையில் அணி
நிமலர் அருளு கந்த வேளையே - அன்பால்
நிதமும் பணிவர் எந்த வேளையும்
வெண்ணீறு பூசுவர் ஆறு மாமுகன்
நீலமாமயில் ஏறு கோலமே
நினைவர் கசிந்துருகி ஆடுவர் - பாப்
புனைவர் இசைகலந்து பாடுவர்
பல குன்றுகள் உவந்த முருகன் மறையை முன்பு
பரமன் செவியில் அருள் பாலனாம் - சூரன்
பணியும் குழந்தை வடி வேலனாம் - சூரன்
பணியும் குழந்தை வடி வேலனாம்
தமிழ்ப் பாவில் ஊறிய நாவினான் எனத்
தாவியானவன் தேவி மாரொடு
பதியில் சிறந்த நல்லை மேவினான் - என்
பனுவற் குகந்த பெரும் பேரினான் - என்
பனுவற் குகந்த பெரும் பேரினான்.
(இது கவிஞர் சோ.ப வின் பாடல்)
[சைக்கிள் ஹோர்ண் ஒலி - முன் மேடையில் மீன்காரன்]

**மீன்காரன்:-** பாம்..... பாம்..... பாம்....

**மாலா:-** [முற்றம் கூட்டியபடி பாடுகிறாள்]
சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு
போகும். (மகா கவியின் பாடல்)

**பிரசன்னா-** அண்ணை, மாலாக்காவின்ரை பாட்டுக் கேட்குதோ?

**ரவி:-** ஓம் தம்பி கேட்குது... ஆனால் ஏன் இவள் இந்த நேரத்திலை உந்தப் பாட்டுப் பாடுறாள்?

**பிரச:-** உதாலை இப்பத்தான் மீன்காரன் போறான். நண்டு வாங்கச் சொல்லி அம்மாவிட்டைக் கேக்கப் பயம். அதுதான் பாட்டுப் பாடுறாள் பாட்டு!

**அம்மா:-** நண்டோ? இண்டைக்கோ? நல்ல கதை! எங்கடை முருகன் கோயில் திருவிழா நடக்கேக்கை மச்சம் சாப்பிடுறதோ?

**அப்பா:-** முருகன் கோயில் திருவிழா நடக்கேக்கை மாத்திரமில்லை, ஒரு நாளும் மச்சம் சாப்பிடக்குடாது. புலால் உண்ணாமை ஒரு வழிபாட்டு அங்கம் எண்டு நாவலர் சொல்லியிருக்கிறார். மச்சம் சாப்பிட்டால், நாங்கள் செய்யிற வழிபாடு பயன் தராதாம்.

**பிர:-** நாங்கள் அப்ப எப்படி, எப்படி இருக்க வேணுமாம்?





**அப்பா:-** பிரசன்னா நல்ல கேள்வி கேக்கிறான். சொல்லுறன். சிவத்திரவியம் கவராமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, க்ள்ளாமை, பிறன் மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம் வாய்மை, பொறை, அடக்கம் கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வணங்கல் ஆகிய இயல்புகள் உள்ளவருக்கு மட்டுந்தான் வழிபாடு பயன் தருமாம்.

**ரவி:-** அப்ப நாங்கள் இனிமேல் மச்சம் சாப்பிடாமல் விடுவம் அப்பா.....

**பாட்டி:-** (பாக்குச் சப்பியபடி அமர்ந்த நிலையில் இருந்து) உனக்கு விளங்கிற அளவு கொம்மாவுக்கு விளங்கேல்லை. சொல்லு கொம்மாவுக்கு!

**பிள்ளைகள் மூவரும்:-** எங்களுக்கு வேண்டாம்.

**அம்மா:-** சரி, அப்ப விடுவம் .... இண்டையிலையிருந்து மச்சம் சாப்பிடுறதை விட்டே விடுவம்.

**பாட்டி:-** (சிரித்தபடி) கொம்மா மனம் திருந்திட்டா. ஏதோ நல்ல காலம் பிறந்திருக்குது....ஆறுமுக நாவலருக்குத் தான் நன்றி சொல்ல வேணும்.

**ரவி:-** ஒரு போஸ்ட் காட் எழுதிப் போடுங்கோவன்

**பிர:-** சொர்க்க லோகத்துக்கோ?

மாலா:- இப்ப ஒவ்வொரு நாளும் காலேல சொக்க உடுப்புகள் தோய்க்கப் போயினம். கையிலை கொழுத்தி விடுவம். கறைச்சல் இல்லை. செகியூரிட்டி செக்கிங்கும் இருக்காது.

அப்பா:- சரி..., சரி..... பகிடியை விட்டிட்டு எல்லோரும் வெளிக்கிடுங்கோ ... இண்டைக்கு நல்ல நாளிலை ஒருக்காக் கோயிலுக்குப் போவம்.

ரவி:- நான் போய்க் குளிக்கட்டோ அப்பா?

அப்பா:- இல்லை. அங்கை போய்க் குளிப்பம். ஆலயத்துக்குச் சமீபத்திலை உள்ள தீர்த்தத்திலை தான் ஸ்நானம் செய்ய வேணும்

பிர:- ஆலயத்துக்குப் பக்கத்திலை தீர்த்தம் இல்லாட்டி என்ன செய்யிறது? (எல்லோரும் வெளிக்கிடும் சமயம்)

அப்பா:- இல்லாட்டி வீட்டிலை குளிச்சிட்டுப்போகலாம். (சத்தம் ஒன்று கேட்கிறது)

அம்மா:- என்ன சத்தம்?

ரவி:- (கிணற்றடியில் இருந்து வந்து கொண்டே) அது இவள் மாலாதான் அட்டாங்க நமஸ்காரம் செய்திட்டாள்.

அம்மா:- அது ஆம்பிளையள் எல்லோ அட்டாங்க நமஸ்காரம் செய்யிறது. உவள் ஏன் செய்தவள்?





பிர:- இல்லை அம்மா, கிணத்தடியிலை கல்லுத்தடக்கி அவள் முகம் குப்புற விழுந்திட்டாள். அதைத்தான் அண்ணா அப்படிச் சொல்லிச் சிரிக்கிறான்.

எல்லோரும்:- (சிரித்தல்)

மாலா:- (வந்து கொண்டே) என்ன? நான் விழுந்திட்டன் எண்டு எல்லோரும் சிரிக்கிறியள் என்ன?

அப்பா:- இல்லைப் பிள்ளை. அவை வேறை என்னத்துக்கோ சிரிக்கினம். நீ வெளிக்கிடு கோயிலுக்குப் போவம்.

ரவி:- நான் ரெடி. சைக்கிள் எடுக்கட்டே?

பிர:- கோயிலுக்கு நடந்துதான் போக வேணுமெண்டு அப்பா சொன்னவர்.

மாலா:- நடந்து போக முடியாத தூரம் எண்டால்?

அப்பா:- இது நடந்து போகக் கூடிய தூரந்தானே... எங்கை ஓடி ஓடி வாங்கோ பாப்பம்.

அம்மா:- எல்லோரும் தேவாரம் பாடிக்கொண்டு போங்கோ.

பாட்டி:- அட. கொம்மாவிலை சரியான முன்னேற்றம் தெரிது...எங்கை அவ சொன்னபடி பாடிக்கொண்டு போங்கோ பாப்பம். (நடிகர் எல்லோரும் மேடையில் இரு வரிசைக்கு வந்து நடக்கும் பாவனை)

பாடகர்:- மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல்ல கதிக்கு யாது மோர்
குறைவிலை
கண்ணினல்ல.'.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே.

மாலா:- அந்தா. கோயில் கோபுரம். தெரியுது

அம்மா:- இனி யென்ன. சொட்டுத் தூரந்தான். ஓடி யாங்கோ.....

ரவி:- இது தானே அப்பா தீர்த்தம்?

அப்பா:- கவனம். பாத்திறங்கு.
(குடும்பம் உள்ளே இறங்குவதான ஊமம். ஏனைய நடிகர்கள் குளக் கட்டுகளாய் உறை நிலையில் இருப்பர்)

பிர:- தண்ணி சில்லெண்டு குளிருது.

மாலா:- இதிலை குளிக்க நல்லாத்தான் இருக்கு.

அம்மா:- ஆ..... தண்ணீக்கை நெடுக நிண்டு விளையாட நல்லாத்தான் இருக்கும். இனிக் காணும் மேலே ஏறி வாங்கோ.

அப்பா:- பைங் குவளைக் கார் மலராற்
செங்கமலப் பைம் போதால்
அங்கம் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்.





பிர:- அப்பா பாடத் தொடங்கிட்டார்,

அப்பா:- ஓம் எனக்கு இந்தக் குளம் மணிவாசகருக்கு நினைவு வந்தது போலை சிவபெருமானையும் உமாதேவியாரையும் நினைவூட்டுது.
(நடிகர் X வடிவில் நின்று பின்வரும் பாடலை அபிநயிப்பர்)

பாடகர்:- பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப்
பைம் போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும்
அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும்
போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து
நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்
பொங்க
பங்கயப் பூம்புனல் பாய்ந்தா டேலோர் எம்
பாவாய்.

அம்மா:- பிள்ளையள் விறைக்கப் போகுது. முதல்லை நீங்கள் வாங்கோ வெளியிலை.

அப்பா:- ஆ.... வாறன். வாறன்.

ரவி:- (ஒரு திசையைச் சுட்டி)
அங்கை தாடிச் சாமியாரை!

அப்பா:- அவர் ஸ்நானம் முடிச்சுக் கரையேறிச்
சரீரத்திலை உள்ள ஈரத்தை உலர்ந்த

வஸ்த்திரத்தாலை துவட்டி, நெற்றியிலை விபூதி தரித்து.குடுமியை முடிந்து. தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து. அநுட்டானமும் செபமும் செய்யிறார். சரியான முறைப்படி கோயிலுக்குப் போகப் போறார்.

**மாலா:-** அங்கை முருகையா அண்ணை அர்ச்சனைச் சாமான் கொண்டு கோயிலுக்குப் போறார். எப்ப கொழும்பாலை வந்தவரோ தெரியேல்லை.

**ரவி:-** இந்த முறை கொழும்பிலை அடிக்காமல் விட்டிட்டாங்கள் எண்டு நேர்த்திக்கடன் வைச்சிருக்கிறார் போலை கிடக்கு.

**மூவரும்:-** (சிரிப்பு)

**அம்மா:-** என்ன சிரிப்பு அவர் திரும்பிப் பார்க்கிறார். காவாலிப் பிள்ளையள்.

**அப்பா:-** அவர் அர்ச்சனைச் சாமான் கொண்டு போற முறையிலை ஒரு பிழை இருக்குது.

**அம்மா:-** இவருக்கு எப்பவும் மற்றவையிலை பிழை பிடிக்கிறது தான்தொழில். தான் ஏதோ பெரிய கொம்பெண்ட மாதிரி.

**அப்பா:-** அவர் செய்யிறது பிழை எண்டால், பிழை எண்டு சொல்லத்தானே வேணும்? நான் பிழை விட்டால் நீ சொல்லன் நான் திருந்திறன்.

**பிர:-** அப்பா, நான் சொல்லட்டே என்ன பிழை எண்டு?





**அப்பா:-** ஆரிலை? என்னிலையோ?

**பிர:-** இல்லை, முருகையா அண்ணை அர்ச்சனைச் சாமான் கொண்டு போற முறையிலை.

**அப்பா:-** ஆ..... ஆ... சொல்லு பாப்பம்

**பிர:-** அவர் பூக் கொண்டு போகேல்லை. அதுதானே பிழை.

**அப்பா:-** இலை. பூ கட்டாயம் கொண்டு போகவேணுமெண்டில்லை. தேங்காய், பாக்கு, வெற்றிலை, பழம் முதலியன கொண்டு போனால் போதும்.

**ரவி:-** அப்ப, என்ன பிழை?

**அப்பா:-** அவர் கொண்டு போற அர்ச்சனைச் சாமான் எவ்விடத்திலை நிக்குது?

**மாலா:-** முழங்காலோடை நிக்குது.

**அப்பா:-** அதுதான் பிழை. அப்படிக் கொண்டு போகப் படாது.

**மாலா:-** அப்ப, தலைக்கு மேலை வைச்சுக் கொண்டு போக வேணுமோ?

**அப்பா:-** அரைக்கு மேலை வைச்சுக் கொண்டு போக வேணும். இப்படி .... (செய்து காட்டுகிறார்) கையிலை உயர்த்திக் கொண்டு போகலாம். (எல்லோரும் அம்முறையைச் செய்து பார்த்தல்.)

அம்மா: சரி, சரி, எல்லோரும் உடுப்பு மாத்திக் கொண்டு வாங்கோ. விபூதி தாறன். பூசுங்கோ.

பிர:- எந்தப் பக்கம் அம்மா கிழக்கு?
(எல்லோரும் அம்மாவிடம் விபூதி வாங்குதல்)

அப்பா:- அங்கை சூரியன் உதிச்சிருக்கு. உதிக்கிற பக்கம் கிழக்கு. அங்கை பார்த்துக் கொண்டு நிண்டால் இடக்கைப் பக்கம் வடக்கு.

மாலா:- வடக்கை, அல்லது கிழக்கை பார்த்துக் கொண்டு நிண்டு பூசலாம் என்னம்மா?

அம்மா:- ஓம். தலையை நிமிர்த்திச் ‘சிவ சிவ’ எண்டு சொல்லி, நெற்றி முழுதும் பரவி,உத்தூளனமாப் பூசுங்கோ.
(எல்லோரும் அவ்வாறு பூசுதல். ஏனைய நடிகர் சப்பாணி கொட்டித் தியானத்தில் அமர்ந்திருக்கக் கௌரியும் அம்மாவும் முன் மேடையில் சந்தித்தல்.)

கௌரி:- என்ன பாக்கியம்? கோயிலுக்குக் குடும்பமா வந்திருக்கிறியள்?

அம்மா:- எட கௌரியே? எப்பிடிச் சுகம்? மேன் வெளிநாட்டுக்குப் போனவன். ஏதும் அனுப்பினவனோ?



கௌரி:- ஓ..... முதல் ஒரு இரண்டு மூண்டு, ஒரு கிழமையாலை நாலைஞ்சு, பேந்து ஒரு மாதத்தாலை பத்து அனுப்பினவன்.

அம்மா:- பேந்தென்ன? இரண்டு மாதத்துக்குள்ளை பதினைஞ்சு இருபது அனுப்பிப் போட்டான். அப்ப கோயிலுக்குப் பெரிய அபிஷேகம் எல்லோ செய்யவேணும்.

கௌரி:- என்னண்டு செய்யிறது?

அம்மா:- என்ன வலு சோர்வாக் கதைக்கிறாய்? பதினையாயிரத்திலை ஒரு ஆயிரத்தைப் செலவழிச்சுச் செய்யிறது.

கௌரி:- அவன் எங்கை காசு அனுப்பினவன்? அவன் படமெல்லோ அனுப்பினவன்?

அம்மா:- எடட அப்படியே?

கௌரி:- போட்டோ.... காரோடை நிண்டு ஒரு போட்டோ, மோட்டச் சைக்கிலோடை நிண்டு ஒரு போட்டோ, கொம்பியூட்டரோடை நிண்டு ஒரு போட்டோ..... (தியானத்தில் இருந்தவர்களும் விழித்துப் பார்த்துச் சிரித்தல்)

மாலா:- அம்மா, போவமே, எல்லோரும் விபூதி பூசியாச்சு.

அப்பா:- கோயிலுக்குக் கிட்ட வந்திட்டம். இப்ப கோயில் கிணத்திலை கால் கழுவிக் கொண்டு தூலலிங்கம் எண்டு சொல்லுற கோயில் கோபுரத்தைக் கும்பிடுங்கோ எல்லோரும்.

பிர:- இனி, எப்படிக் கோயிலுக்கு உள்ளை போறது?

**அப்பா:-** இரண்டு கைகளையும் சிரசிலை குவிச்சுச் சிவ நாமங்களை உச்சரிச்சுக் கொண்டு உள்ளை போக வேண்டும்.

**எல்லோரும்:-** நமச் சிவாய வாழ்க நாதன்தாழ் வாழ்க.
(பாடகர் பாடும் போது எல்லோரும் கைகளைச் சிரசில் குவித்துப் பரந்து நடந்து செல்வர்)

**பாடகர்:-** நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க.
கோகழி ஆண்ட குரு மணிதன் தாள் வாழ்க.
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய் கழல்கள்
வெல்க.
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள்
வெல்க.

**ரவி:-** அப்பா நான் பலி பீடத்தையும் துசதம்பத்தையும் இடப தேவரையும் கும்பிட்டிட்டன்.

**பிர:-** அப்பா, பலி பீடம் எண்டால் என்ன?

**அப்பா:-** பலி பீடத்தைப் பத்திர லிங்கம் எண்டும் சொல்லுவினம். அதுவும் சிவ பெருமானையே குறிக்கும். அதிலை நாங்கள் எங்கடை அகங்காரங்களைப் பலி செய்து "எங்கடை செயல் ஒண்டு மில்லை எல்லாம் சிவன் செயலே"என்று தெளிவதற்காக அது வைக்கப்பட்டிருக்கு.



**மாலா:-** அப்ப, எங்கடை செயல் எண்டு ஒண்டு மில்லையே?

**அப்பா:-** ஓம். நாங்கள் இறைவனுடைய கரங்களிலை வெறும் கருவியாத்தான் இருக்கிறம்.

**அம்மா:-** நான் ஒரு கதை சொல்லட்டே?

**பிர:-** ஓம். சொல்லுங்கோ அம்மா.

**அம்மா:-** மகாராஷ்டிர மகாவீரன் சிவாஜி ஒரு பெரிய கோட்டை கட்டினான். அங்கை ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வந்தினம். "இந்தத் தொழிலாளர்களுக் கெல்லாம் நான் தான் உணவு கொடுக்கிறன்" என்று சிவாஜி நினைத்தான்.
(சிலர் சிலைகளாகவும் சிலர் செதுக்கு வோராகவும் மாறுவர்.)
தற்பெருமையும் அகங்காரமும் மெதுவாக அவன் மனதில் பதிந்தன. அவனுடைய குருநாதர் இராமதாஸர் இதை அறிஞ்சிட்டார்.அவர் ஒரு நாள் சிவாஜியின்ரை அரண்மனைக்கு வந்து அவனை நல்லாப் பாராட்டினார்.

**இராமதாசர்:-** சிவாஜி நீ நிறையத் தொழிலாளருக்கு உதவி செய்யிறாய். மிகப் பெரிய பணி ஒன்றை நீ செய்யிறாய்.

**அம்மா:-** சிவாஜி மிகவும் மகிழ்ந்து போய் உணர்ச்சி வசப் பட்டான்.

**இராம:-** சிவாஜி 'இந்தக் கற்பாறையைப் உடை பார்க்கலாம்'
(மூவர் பாறையாய் அமைவர். ஒருவர் அதற்குள் தவளையாய் ஒளிந்திருப்பர்)

**அம்மா:-** சிவாஜி பாறையை உடைக்கத் தவளை ஒன்று உள்ளிருந்து ஓடியது.
(பாறை உடைதல், தவளை பாய்தல் , ஊமம்)

**இராம:-** சிவாஜி இந்தப் பாறைக்குள் இருந்த தவளைக்கு உணவு கொடுத்தது யார்?

**அம்மா:-** சிவாஜிக்கு அப்போதுதான் சுய நினைவு வந்தது. அவன் வெட்கித் தலை குனிந்தான்.

**சிவாஜி:-** (இராமதாஸரின் காலில் விழுந்து) பிரபு, என்னை மன்னித்து விடுங்கள். என் அகந்தை அகன்று விட்டது. இனிமேல் அத்தகைய எண்ணம் வராது.

**இராம:-** நான் தான் எதையும் செய்கிறேன் என்று எண்ணாதே. எல்லாவற்றையும் இறைவனே செய்கிறார்.

**அப்பா:-** எட, கொம்மா கோயில்லை அருமையான கதை சொல்லிறா. அப்ப இனி அவவைக் கோயில்களிலை பிரசங்கம் பண்ண விடலாம்போலை கிடக்கு.

**அம்மா:-** ஏன்? நான் என்ன படிக்காத பட்டிக்காடே

**அப்பா:-** சரியப்பா, நான் கோயில்லை உன்னோடை சண்டைக்கு வரேல்லை. இது கிழக்கு நோக்கிய





சந்நிதி. வலப்பக்கம் நிண்டு பலிபீடத்துக்கு இங்காலை வணக்கம் செய்யுங்கோ எல்லாரும்.

**மாலா:-** இப்ப கும்பிடலாமோ அப்பா?

**அப்பா:-** ஓம். இப்ப அபிஷேகம் நடக்கேல்லை. நிவேதன சமயமும் இல்லை. திரை போடேல்லை. திருவிளக்கு ஏத்தியிருக்கு. நேரம் அகாலமில்லை. சுவாமி உற்சவம் கொண்டருளாமல் உள்ளையே இருக்கிறார். ஆனபடியால் இப்ப கும்பிடலாம்.

**ரவி:-** மாலா வீட்டிலை அட்டாங்க நமஸ்காரம் பண்ணினவள். இனித்தான் பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணப் போறாள்.

**பிரசன்னா:-** நான் ஆம்பிளைப்பிள்ளை. அப்ப, அட்டாங்க நமஸ்காரம் தானே செய்யோணும் என்னப்பா?

**அப்பா:-** ஓம் தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு அவயவமும் நிலத்திலை படத்தக்கதாக் கும்பிடவேணும்.

**ரவி:-** இப்பிடித்தானே என்னப்பா?
(ரவியும் பிரசன்னாவும் விழுந்து வணங்குதல்)

**அப்பா:-** ஓம். மூண்டு தரம், ஐந்து தரம், ஏழு தரம், ஒன்பது தரம் அல்லது பன்னிரண்டு தரம் கும்பிடவேணும்.

**பிர:-** ஒருக்கா இரண்டு தரம் கும்பிட்டால்..?

**அம்மா:-** அது குற்றம்.

**மாலா:-** அம்மா, நாங்கள் கும்பிடேக்கை எந்தெந்த உறுப்புகள் நிலத்திலை பட வேணும்?

**அம்மா:-** நாங்கள் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு ஆகிய ஐந்து அவயவமும் நிலத்திலை படும்படி பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேணும்.
(மாலா அதன்படி நமஸ்காரம் செய்தல்)

**மாலா:-** அப்பா, இந்த நந்தி ஏன் இங்கை வைச்சிருக்கு?
(நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகமூவர் நடுவில் நிற்க ஏனையோர் இருபக்கமும் அமர்ந்திருப்பர்.)

**பிர:-** உன்னைப் போலை அதுவும் நடு வழியிலை குந்திக் கொண்டிருக்கு.

**அப்பா:-** இந்த நந்தி சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவைக் குறிக்கும். பாசங்களிலை இருந்து நீங்கின ஆன்மா சிவமாகி அருள் உருவம் பெற்று அவரோடை ஒன்றாக நிற்கும் என்பதை இது காட்டுது.

**ரவி:-** இந்தக் கொடி மரம் ஏன் இதிலை நிக்குது?

**அம்மா:-** இந்தக் கொடிமரம் சிவம். இதிலை ஏற்றுற பசு எழுதப்பட்ட சீலைதான் ஆன்மா. தர்ப்பைக் கயிறு பாசம். கடவுளிலை ஆன்மா தங்கியிருப்பது போலை, கொடிமரத்திலை சேலை தங்கியிருக்குது. கொடிமரமும் சேலையும் எண்டு இரண்டு பொருள் இருந்தாலும், அதைப் பாக்கிறவை கொடிமரம் எண்டு ஒரே பொருளாத்தான் நினைக்கினம். சிவமும் ஆன்மாவும் அத்துவிதமாய் நிக்கிறதை இது காட்டுது. தர்ப்பைக் கயிறு சீலையைச் சுத்திறது போலை பாசம் ஆன்மாவைச் சுத்தியிருக்கு.





**அப்பா:** சூ.. அடேயப்பா.. நான் முதலே சொல்லிப் போட்டன். கொம்மாவை இனிப் பிரசங்கம் பண்ண விடலாம் எண்டு.

**அம்மா:** ஏன் நான் சொன்னது பிழையோ?

**அப்பா:** என்னெண்டு பிழையாய் இருக்கும்? அந்தக் காலத்திலை கொப்பர் உன்னைப் பொம்பிளைப் பள்ளிக் கூடத்திலை விட்டுப் படிப்பிச்சவர்.

**அம்மா:** உவருக்கு என்ரை படிப்பிலை எப்பவும் ஒரு நக்கல். இனி நாங்கள் கோயிலைச் சுத்திக் கும்பிடுவம்.

**பிரசன்னா:** எத்தினைதரம் சுத்திக்கும்பிடவேணும்?

**ரவி:** மூண்டு தரம், ஐஞ்சு தரம், ஏழு தரம், ஒன்பது தரம், பதினைஞ்சு தரம் அல்லது இருபத்தொரு தரம் பிரதிஷிணம் செய்ய வேணும் என்னப்பா?

**அப்பா:** ஓம்.

**மாலா:** கெதியாப் போவம் வாங்கோ.

**அம்மா:** கெதியாப் போகப்பிடாது பிள்ளை. 'உன்னால் ஓடக் கூடியதாய் இருக்கும் போது நடக்காதே' என்று சொல்வது வாழ்க்கைக்குப் பொருந்தும்தான். ஆனால் கோயில்லை இது தலை கீழாய் மாற வேணும். 'உன்னால் நடக்கக் கூடியதாய் இருக்கும் போது ஓடாதே' என்று.

**அப்பா:** கைகளை மார்பிலை குவிச்சு, பஞ்சாட்சரத்தை ஜெபிக்கக் கொண்டு, அல்லது தேவாரம் பாடிக் கொண்டு கால்களை மெல்ல மெல்ல வைச்சு எனக்குப் பின்னாலை வாங்கோ எல்லாரும்.

**எல்லாரும்:** மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே.

**அப்பா:** அப்பர் பாடிய பாட்டுகளெல்லாம் 'அப்பர்' தான்.

**மாலா:** மற்றவை பாடினதுகள் 'லோவரோ'?

**அப்பா:** சீ..சீ.. அப்பிடியில்லை.

**ரவி:** அங்கை செல்லாச்சி அக்கா அந்த மூலையிலை இருந்து பாக்கு வெத்திலை சாப்பிடுறா.
(கிழவி ஒரு மூலையில் அமர்ந்திருந்து பாக்குப் போடும் ஊமம்.)

**அம்மா:** நீ ஏன் அதைப் பாக்கிறாய்?

**பிரசன்னா:** அவக்கு வாய்க்குழிப் புற்று நோய் வரப்போகுது பாவம்.

**அப்பா:** கோயிலுக்குள்ளை பாக்கு வெத்திலை சாப்பிடுறது குற்றம்.





**அம்மா:** நான் சொல்லன். இவ நகத்த பற்றவைப்பிலை குற்றம் பிடிக்கிறதுதான் தொழிலெண்டு.

**மாலா:** அம்மா, எனக்கு நல்லாக் குளிருது.

**ரவி:** எனக்கும் குளிருது. மழை வரப்போகுது போலை கிடக்கு. சால்வையை எடுத்துப் போர்க்கட்டே?

**அப்பா:** இல்லை. இல்லை. கோயிலுக்குள்ளை போர்த்துக் கொள்ளுறதும் குற்றந்தான்.

**பிரசன்னா:** இது என்னத்தின்ரை நிழல் அம்மா?

**அம்மா:** இது துசத்தம்ப நிழல். இதை மிதிக்கப்படாது. கவனமா வாங்கோ. ஆ..ஆ.. சரி. தூபி. பலிபீடம். இடபம். விக்கிரகம் இதுகளின்ரை நிழலையும் மிதிக்கப்படாது.
(நிழலை மிதிக்காமல் நடக்கும் ஊமம்.)

**பிரசன்னா:** இவர்தான் பிள்ளையார் என்னப்பா? அந்தா.. தும்பிக்கை இருக்குது. இவரையோ முதல்லை கும்பிட வேணும்?

**ரவி:** ஓம். குமார பாலகரையும் நந்தி தேவரையும் கும்பிட்ட பிறகு. கோயிலுக்குள்ளை விக்னேஸ்வரரைத்தான் முதல் கும்பிட வேணும். என்னப்பா?

**மாலா:** என்ன மாதிரி இவரைக் கும்பிடுறது?

**அம்மா:** இரண்டு கையையும் முட்டியாய் பிடிச்சு, நெற்றியிலை மூண்டு தரம் குட்டிக்காதை

| | |
|---|---|
| | இடக்கையாலையும், இடக்காதை வலக்கையாலையும் பிடிச்சு.. மூன்று முறை பதிஞ்சு எழும்பி., (ரவி அதே போலச் செய்தல்) ஆ.. அப்பிடித்தான் ரவி சரியான முறைப்படி கும்பிட்டிட்டான். |
| ரவி: | அங்கை என்னோடை படிக்கிற ராஜாவும், தாசனும் நிக்கினம். இரண்டு பேரும் சிரிச்சுச் சிரிச்சு விளையாடினம். |
| அப்பா: | கோயிலுக்குள்ளை சிரிக்கிறது, சண்டையிடுறது, விளையாடிறது, வீண்வார்த்தை பேசிறது, எல்லாம் பிழை. நீ.. வா. அவையோடை இப்ப கதைக்க வேண்டாம். கோயிலுக்கு வெளிலை போய்க் கதைக்கலாம். |
| ரவி: | அவையைக் கண்டிட்டுக் கதைக்காமல் போனால் பிறகு அவை என்னைப் 'பெரிய லெவல்' எண்டு பகிடி பண்ணுவினம். |
| அப்பா: | அவை பகிடி பண்ணுவினம் எண்டதுக்காண்டிப் பிழையானதைச் செய்யப்பிடாது. |
| அம்மா: | அவைக்கு விளங்கப்படுத்த வேணும். கோயில்லை தேவையில்லாமல் கதைக்கக் கூடாதெண்டு. |
| மாலா: | இப்ப நாங்கள் சிவலிங்கப் பெருமான் சந்நிதிக்கு வந்திட்டம். அர்ச்சனை செய்விப்பம். என்னம்மா? |





| | |
|---|---|
| அம்மா: | குருக்கள் ஐயா அர்ச்சனை செய்யிறார் கும்பிடுங்கோ எல்லாரும்! (எல்லாரும் கும்பிடும் ஊமம்.) |
| ரவி: | குருக்கள் ஐயா விபூதி கொண்டு வாறார். |
| மாலா: | சரி, இனி இரண்டாம் முறை சுத்திக் கொண்டு வருவம் என்ன? |
| பிரசன்னா: | இரண்டாம் முறை சுத்திக் கும்பிடேக்கை பிள்ளையாரைச் சுத்தக்கூடாது. என்னம்மா? |
| மாலா: | ஏன்? |
| அம்மா: | அவன் குழந்தைப்பிள்ளைக்குத் தெரியிறது. உனக்குத் தெரியேல்லை. |
| பிரசன்னா: | விநாயகரை ஒருமுறைதான பிரதஷிணம் செய்ய வேணும் எண்டு அப்பா சொன்னவர். |
| அம்மா: | ஓம். சிவபெருமானை மூண்டு, ஐஞ்சு, ஏழு, ஒன்பது பதினைஞ்சு அல்லது இருபத்தொரு தரம் சுத்திக்கும்பிடலாம். பார்வதிதேவியையும் விஷ்ணுவையும் நாலுதரம் சுத்திக் கும்பிடவேணும். சூரியனை இரண்டு தரம் சுத்திக் கும்பிடவேணும். ஆனால் பிள்ளையாரை ஒருக்காத்தான் சுத்திக் கும்பிடவேணும். |
| ரவி: | இப்ப, பூசை தொடங்க முந்தி ஒரு நற்சிந்தனை நடக்கப் போகுதாம். குருக்கள் ஐயா சொன்னவர். இந்த முறை சுத்திக் கொண்டு வந்து அதைக் கேப்பம். |

**நற்சிந்தனையாளர்:**

(அனைவரும் அமர்ந்து கேட்டல்) இந்த ஆலயம் எங்களுடைய ஆன்மா லயப்படுகிற இடம். இந்தக் கோயில் இறைவன் குடியிருக்கிற இல்லம். உலக இன்பங்களில் எந்நேரமும் மூழ்கியிருக்கிற நாங்கள், இடையிலை ஒரு கொஞ்ச நேரமாவது, இந்த ஆலயத்துக்கு வந்து இறை சிந்தனை செய்ய வேண்டும்.

சுவாமி பரமஹம்சரிடம் பெரிய பணக்காரர் ஒருவர் வந்தார். 'சுவாமி நீங்கள் உண்மையிலேயே பெரிய துறவிதான். ஆண்டவனுக்காக இந்த உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்து விட்டீர்களே! ' என்று சொன்னார். பரமஹம்சர் சிரித்தார். பிறகு சொன்னார் ' அப்பா, நீ என்னைவிடப் பெரிய துறவியாயிற்றே. இந்த உலக இன்பங்களுக்காக ஆண்டவனையே துறந்து விட்டாயே! ' என்று.

எங்களில் பலர் அவ்வாறுதான் இருக்கிறோம். இந்த உலக இன்பங்களுக்காக ஆண்டவனையே துறந்து விடுகிறோம். அவனை மறந்து விடுகிறோம். நாம் அவ்வாறு இருத்தல் ஆகாது. ஆலயத்திற்கு வர வேண்டும். ஆண்டவனை நினைந்து உருகி வழிபட வேண்டும்.

இந்த ஆலயத்திலே வழிபட வருகிற நாங்கள் எப்படி வரவேண்டும், இங்கு எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது என்பவற்றை எல்லாம் ஆறுமுகநாவலர் எழுதியிருக்கிறார்.

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், போசன பானம் பண்ணுதல், இவை எல்லாம் திருக் கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள். இப்போது இந்த நற்சிந்தனை முடிந்தவுடன் நீங்கள் எனக்கு ஒரு கோப்பை பால்





தருவிர்களாயின் நான் அதனை இங்கே வைத்து அருந்த மாட்டேன். உபந்நியாசம் செய்பவருக்கு மாலை அணிவித்தல், பானம் கொடுத்தல் போன்றவை தேவையற்ற வழக்கங்களே.

மேலும் ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வஸ்திரம் தரித்துக் கொள்ளல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரட்சை இட்டுக் கொள்ளுதல் ஆகியவையும் கோயிலிலே செய்யத்தகாத குற்றங்களே.

நகர்ப்புறக் கோயில்களில் பெரிய பதவிகளில் உள்ளவர்கள் ஆலயங்களுக்குச் சட்டை இட்டுக் கொண்டு செல்வது இப்போது நாகரிகமாகிவிட்டது. அதைப் பார்த்துப் பொதுமக்கள் பலரும் அவ்வாறு செய்கிறார்கள். ஆனால் அது குற்றமே.

**மாலா:** அம்மா, அங்கை அந்தத் திருவிளக்கு
நூரப்போகுது.

**அம்மா:** சத்தம் போட்டு, நற்சிந்தனையைக்
குழப்பாமல் எழும்பிப்போய்
அதைத்தூண்டிப் போட்டு வா

**பிரசன்னா:** நானும் போயிட்டு வாறன். மாலாக்கா, இந்த
விக்கிரகத்தை ஒருக்காத் தொட்டுப்பாப்பமே?
(விளக்குத் தூண்டும் ஊமம்.)

**மாலா:** குளப்படி.. அப்பா கண்டால் அடிப்பார்.
விக்கிரகங்களைத் தொடக்குடாது.
(மணி அடிக்கும் ஓசை)

ரவி: பூஜை ஆயத்தம். என்னம்மா?

அம்மா: ஓம். நற்சிந்தனை முடியுது. பூஜை தொடங்கப் போகுது. அதுக்கிடையிலை நாங்கள் இன்னொரு முறை சுத்திக் கும்பிட்டுக் கொண்டு வருவம்.

ரவி: அங்கை ராஜன் அதாலை போறான்.

அப்பா: அவன் சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கை போறான். அப்பிடிப் போகப்பிடாது.

அம்மா: இது சபாபதி. இவர் தஷிணாமூர்த்தி

அப்பா: அடுத்தவர் சோமஸ்கந்தர். அடுத்து சந்திரசேகர்

பிரசன்னா: அடுத்து யார் இருக்கிறது?

மாலா: (பாடுகிறாள்)
மந்திரக் காரண்டி அம்மாண்டி இவன்
மயக்கவோர் எண்ணமும் கொண்டாண்டி,

ரவி: தேனும் தினைமாவும் தின்று கொழுத்தாண்டி,
தேவியை வாவென்று கூவி அழைத்தாண்டி,

அம்மா: முருகப் பெருமானைக் கண்ட உடனை அவைக்குக் கும்மிப்பாட்டெல்லோ ஞாபகம் வருது.

அப்பா: ஒவ்வொரு மூர்த்தியையும் வழிபடுறதுக் கெண்டு சில சில தோத்திரப்பாடல்கள் இருக்கு. முருகனை வழிபடக் கந்தரலங்காரம்,



கந்தரநுபூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை இவற்றிலை ஒண்டைப் பாடித்தான் வழிபடவேணும்.

பிரசன்னா: அப்பா அதிலை ஒரு பாடல் படியுங்கோ

அப்பா: (பாடுகிறார்)
மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

அம்மா: பூஜை தொடங்கப் போகுது.

மாலா: இண்டைக்குச் சரியான சனமாயிருக்கு. தீபம் கூடத் தெரியேல்லை. இடிபட்டுக் கொண்டு முன்னுக்குப் போய்க் கும்பிடுவமே அம்மா?

அம்மா: இல்லை. இல்லை. அப்பிடிச் செய்யப்பிடாது. பின்னுக்கு அமைதியா நிண்டு மனத்தாலை நினைச்சு வழிபடுவம்.

ரவி: பிள்ளையாருக்குப் பூஜை நடக்கேக்கை மனத்திலை நினைக்கக் கூடிய பாடல் ஒண்டு படியுங்கோ அப்பா.

அப்பா: மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்
(மனமுருகிப் பாட, மற்றவரும் இணைவர்)

**பிரசன்னா:** சிவபெருமானுக்குப் பூஜையாகுது. அம்மா நீங்கள் பாடுங்கோ.

**அம்மா:** தண்ணளி வெண்குடை வேந்தன்செயல்கணடு
தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார் வானவர்
பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி
மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி
விடங்கப் பெருமான்.

**மாலா:** இனி..?

**அப்பா:** இனி, உமாதேவியாருக்குப் பூஜை
(மணி ஒலி, சங்கொலி, மேள ஒலி)

**ரவி:** பூஜை எல்லாம் முடிஞ்சுது. இனி வீட்டை போறதே அம்மா?

**அப்பா:** ஓம். குருக்களிட்டை விபூதி வாங்கித் தரிச்சுக் கொண்டு சண்டேசுரரைக் கும்பிடவேணும்.

**பிரசன்னா:** சண்டேசுரரை எப்பிடிக் கும்பிடுறது?

**மாலா:** சீலை நூலைப் பிடுங்கிப் போடவேணுமோ?

**அப்பா:** இல்லை. சீலை நூல் போடக்குடாது. சண்டேசுரர் சந்நிதியிலை கும்பிட்டுத் தோத்திரம் செய்து, மூண்டு தரம் கை கொட்டிச் சிவதரிசன பலத்தைத் தரும்படி பிரார்த்திக்க வேணும்.





**அம்மா:** எல்லாரும் ஒழுங்காப்போய்க் கும்பிட்டு வாங்கோ.
(மூன்று முறை கை கொட்டிக் கும்பிடும் ஊமம்)

**அப்பா:** இனி இடப தேவருடைய இரண்டு கொம்புக்குள்ளாலை சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து, பலிபீடத்துக்கு இப்பால் மூன்று தரம் நமஸ்காரம் செய்து, பஞ்சாட்சரத்தை நூறு தரமும், அகோர மந்திரத்தை நூறுதரமும் செபித்துக் கொண்டு வீட்டுக்குப் போகவேணும்.

**ரவி:** அம்மா கச்சான் வாங்கிறேல்லையோ?

**அம்மா:** அதைப்பற்றி எல்லாம் கோயிலுக்கு வெளிலைபோய் யோசிப்பம். ஆ.. அந்தா, நிருமாலியத்தை விளக்காமல் வாங்கோ பாப்பம்.

**அப்பா:** எல்லாரும் வாங்கோ. சிவசிவசிவ...

**அம்மா:** இண்டைக்கு முறைப்படி கோயிலுக்கு வந்து முறைப்படி வணக்கம் செய்தது எனக்கு மனதுக்கு ஒரு பெரிய நிம்மதியா இருக்கு.

**அப்பா:** அம்மாதான் வீட்டுக்கு லட்சுமி. அவவின்ரை மனம் நிறைஞ்சால் எங்கடை வீடு முழுதும் நிறைஞ்சதுக்குச் சரி.

எல்லாரும்: (சிரித்தல்)

மாலா: வெளிலை வந்திட்டம். இனி ஐஸ்கிறீம் கச்சான் எதுவும் கேக்கலாம் அப்பாட்டை.

(எல்லோரும் சிரித்தபடி மேடையை விட்டு இறங்குதல்)







# வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்

**முதல் மேடை யேற்றம்**

12.01.1990 - இலங்கையில் சுகந்திர தினத்தை ஒட்டி நடைபெற்ற நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதற் பரிசு – தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**இரண்டாவது மேடையேற்றம்**

14.01.1990 கலை இலக்கியக் களத்தின் பொங்கல் விழா. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபம்.

**மூன்றாவது மேடையேற்றம்**

07.08.1991 வட இலங்கைச் சங்கீத சபையின் வைரவிழா. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபம்.

நெறியாள்கை:- திருமதி. கோகிலா மகேந்திரன்.

# வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்

[ஒரு மணி நேர நவீன நாடகம்]

[நாடகத்தில் வரும் கவிதைவரிகள், கவிதைகள் அனைத்தும் கவிஞர் சோ. ப. எழுதியவை.]
நெறியாள்கை:- கோகிலா மகேந்திரன்.

[மேடையில் கனத்த சோக உறை நிலையில் பலர் காணப்படுவர். வயலின் முகாரி இசைக்கும். மிருதங்கத்தில் முதலில் தீர்மானமும் பின் நடையும் வரும். ஊதா நிற ஒளி பாய்ச்சப் பட்டிருக்கும்.]

**உரைஞர் 1:-** [UC இல் உள்ள உயர் ஆசனம் ஒன்றில் இருந்து இறங்கி ஓடி DC க்கு வந்து]
இது வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம் - நாடகந்தான் பாருங்களேன்.
[திரும்பி ஓடி ஆசனத்தில் ஏறல் மிருதங்கத்தில் நடை.]

**உரை 2:-** [படுத்திருந்த நடிகர், மெதுவாக எழுந்து, நிற்பவர்களை அருகில் சென்று பார்த்து ... பின்னர் முன்னுக்கு வந்து]
ஆர் இவையள்? இவை ஒருத்தரையும் எனக்குத் தெரியேல்லை. உங்களுக்குத் தெரீதோ?
[சபையைக் கேட்கிறார்.]

**நடிகர் 1:-** [மேடைப் படியில் நின்று] எந்த வழி தரை கடல் வான் இவற்றினூடு எமை நோக்கி யமன் வருவான் என்று பார்த்து நொந்தவர்கள் நாங்கள்.
[ஏனைய நடிகர்களும் மறுதாக்கம் காட்டுவர்]





**நடிகர் 2:-** (பெரு மூச்சுவிட்டு) அப்பிடியோ?

**நடிகர் 3:-** (DR இல் அமர்ந்தபடி) கொடியர் இடும் தீயில் நின்று ....
[UC இல் உயரத்தில் நின்ற உரைஞர் இறங்கி ஓடிவந்து CR இல் நெருப்பு வைப்பதான ஊமம்.]

**நடிகர் 4:-** (UR இல் இருந்து இறங்கி ஓடி வந்து பார்த்து) ஆ .... நெருப்பு.....
[நெருப்பு என்ற செய்தி நடிகர் ஊடாக, உரப்பு அதிகரித்துப் பரவுதல் ... சிலர் நீர் அள்ளுதல், சிலர் நீர் ஊற்றுதல், சிலர் பொருள்களைப் பொறுக்குதல், மூவர் எரிந்து கொண்டிருந்த உடல் ஒன்றைத் தூக்கிக் கொண்டு DR க்குக் கொண்டு வருதல், வைத்தல், அழுதல்.]

**நடிகர் 5:-** கொடியர் இடும் தீயில் நின்று வெந்தவர்கள் நாங்கள்.

**நடிகர் 6:-** பயணத்தில், காட்டில் ......
[எல்லோரும் வட்டமாய் புகைவண்டி ஓடுதல், ஒருவர் வாள் கொண்டு மற்றவர்களை வெட்டுவதான ஊமம். எல்லாரும் மேடையில் பரந்து விழுதல், இறுதியில் வெட்டிய வரும் விழுதல்.]

**நடிகர் 6:-** பயணத்தில், காட்டில், வெட்டுண்டும், குத்துண்டும் வீழ்ந்தோர் நாங்கள்.

**நடிகர் 7:-** ஆ ..... ஷெல், ஷெல் .........!
(காதைப் பொத்திக் கொண்டு எல்லோரும் வீழ்ந்து படுத்தல்)

**நடிகர் 8:-** அடுப்பை ஊதக் குனிகையில் வீழலாம்
அன்பு பூண்ட இல்லாளின் தலையிலே.
[ஒரு பெண் சமைத்துக் கொண் டிருப்பதும், அருகே ஷெல் விழுவதும், அவள் சரிவதுமான ஊமம்.]

**நடிகர் 9:-** உடுப்பைத் தோய்த்து வெயிலில்
விரிக்கையில் ஒன்று நம் கழுத்தைப் பதம் பார்க்கலாம்.
[சிலர் கிணற்றில் நீர் அள்ளுதல், சிலர் தொட்டியில் நீர் ஊற்றுதல், சிலர் உடுப்புக்குச் சவர்க்காரம் தேய்த்தல், சிலர் உடுப்புப் பிழிதல், சிலர் கொடியில் காய விடுதல் ஊமம்.]

**நடிகர் 10:-** படுக்கையில் கண்ணயர்கையில் இன்றிரா
பாவி ஏவிய ஷெல் விழக்கூடுமாம்.
[எல்லாரும் பாய் விரித்துப் படுத்து உறங்குதல், திடீரென்று பதறி எழுந்து ஓடுதல் ஊமம்.]

**நடிகர் 11:-** தடுப்ப தெப்படி? தப்புவ தெப்படி?
சர்வ வல்லமை படைத்த ஷெல் வீழ்கையில்!

**உரைஞர் 1:-** [எழுந்து DC க்கு வந்து] இதெல்லாம் எப்ப நடந்த சங்கதிகள்?

**உரைஞர் 2:-** [எழுந்து DR க்கு வந்து] 16ம் நூற்றாண்டு முதல் இன்று வரைக்கும் நடக்கும் சங்கதிகள்.

**உரைஞர் 1:-** இதற் கெல்லாம் யார் சாட்சி?



**நடிகர் 1:-** இந்து மா கடலைக் கேள்.
[எல்லாரும் எழுந்து பரவலாய் அமர்ந்து கடலலை போல் அசைதல்]
காற்றைக் கேள் ....
[மரங்கள் காற்றில் அசைதல் போல]
எறிக்கின்ற வெயிலைக் கேள்
[சூரியனை இரு கைகளால் காட்டல்]
எல்லாம் சொல்லும்.

**எல்லாரும்:-** [எழுந்து]
இந்து மா கடலைக் கேள்,
காற்றைக் கேள்,
எறிக்கின்ற வெயிலைக் கேள்
எல்லாம் சொல்லும்
[என்று கூறிய படி மரங்களாதல்]

**நடிகர் 2:-** நிழல் சொரியும் மரமெல்லாம் நெருப்பள்ளிச் சொரியும்.
நினைந்து செய்த கொடுமைகளால் நெஞ்ச மெல்லாம் எரியும்.
[மரங்களின் கீழ் சிலர் படுத்தல், எழுந்து கையை உதறி எறிதல்]

**நடிகர் 3:-** [கடைக்காரன் போல் கூவி அழைத்து] கடல் வானம் நிலமெல்லாம் காலனிடும் ஓலம்,
கடைவிரித்தேன் வாருங்கள் மலிவு விலை உயிர்கள். எது வேண்டும்? மொத்தமா? சில்லறையா? கடனா? எவ்விடத்தும் எந்நாளும் டெலிவரி செய்திடுவேன்!

**நடிகர் 4:-** யார் இந்தத் துன்ப மெல்லாம் செய்தவர்கள்?

நடிகர் 5:- எம்மை ஆள வந்தவர்கள், அந்நியர்கள்,
எமது அடிப்படைச் சுதந்திர உணர்வுகளையே
குழி தோண்டிப் புதைத்தவர்கள்.
[DL ஐச் சுட்டிக் காட்டுதல்]
[DC இல் நடிகர் 6, 16ம் நூற்றாண்டு என்ற
அட்டையைத் தாங்கிய படி நிற்கிறார்.]
[கணவன் மனைவி போலக் காணப்படுகின்ற
இருவர் DR இல் அமர்ந்து சாப்பிடுவதான
ஊமம்.]

கணவன்:- [சப்பாணி கொட்டி அமர்ந்து] இன்று
வெள்ளிக்கிழமை, விரத நாள், இலை
போட்டிருக்கிறாய், எனக்கு இலையில்
சாப்பிடுதல் விருப்பம்!

மனைவி:- பேசிக் கொண்டிராமல், விரைந்து
சாப்பிடுங்கள். போர்த்துக் கேய வீரர்கள்
வந்தால் வில்லங்கம். பிடித்துக்
கொள்வார்கள். எம்மை!

கணவன்:- ம்........ ம்....... நிம்மதியாகச் சாப்பிடக் கூட
முடியாத வாழ்வாகி விட்டது எமது வாழ்வு.
[சாப்பிட்டு முடிந்து வாய் அலம்பி] போதும்
போதும் எனக்கு... நீ எதில் சாப்பிடுவாய்?

மனைவி:- நான் இந்த இலையிலேயே சாப்பிடுவேன்.
இரண்டு இலையில் சாப்பிட்டால்,
இரண்டையும் அல்லவா மறைக்க வேண்டும்?

கணவன்:- சரி, அப்படியே செய், கவனம் மறந்து போய்
இலையை வெளியே எறிந்து விடாதே.
வழக்கம் போல இறப்பிலே செருகி விடு.





நான் வெளியே போய் வருகிறேன். [மனைவி
சாப்பிட்டு முடித்து, அச்சத்துடன் அங்கும்,
இங்கும் பார்த்து, இலையைக் கூரையில்
செருகும் ஊமம்.]

நடிகர் 6:- புயல் அடித்த ஊராகி எம் வாழ்வு குலையும்
புலம்புவதும் விம்முவதும் மொழியாகி
உலவும்.
[எல்லாரும் விம்மிக் கொண்டு அலை
வடிவுக்கு வருதல்.]

நடிகர் 7:- கடல் குருதியாய்க் குமுறும்
[காற்று எழுந்து அடங்கும் ஊமம்]
காற்று ஓலமிடும்
[நடிகர்கள் மூன்று முறை 'ஓ' என்ற
சத்தத்துடன் சுழன்று வருவர்.]
நம் கனவுகளும் நனவுகளும் இழவுகளாய்
முடியும்.

எல்லாரும்:- [எழுந்து தொலைவைப் பார்த்து]
யார் வருவது?

மிருதங்கமும் பாடகரும்:-
தந்தத் தகிர்த தகிர்தத் தாம்
திந்தத் திகிர்த திகிர்தத் தெய்
[வீரர்கள் குதிரையில் வரும் ஊமத்தில் ஒரு
குழு DR இல் இருந்து DC, DR ஊடாகச்
சுற்றி மீண்டும் DR க்கு வரும்]

நடிகர் 8:- [பயந்து எட்டிப் பார்த்து]
போர்த்துக் கேய வீரர்கள் போகிறார்கள்.
[போர்த்துக் கேய வீரர் கோயிலை அடைதல்,
பார்த்தல், அட்டகாசமாய்ச் சிரித்தல்]

**தளபதி:-** இக் கோயிலை இடிக்க முன், இதன் படத்தை வரைந்து விடு.....ம்.....!
[குடி மக்கள் சிலர் கோயிலை வணங்குதல், சிலர் மேடையின் கீழ்ப்பக்கம் இறங்கிக் காவடி, கரகம், பாற்குடம், பஜனை ஆகியவற்றுடன் கோயிலுக்கு ஏறிப் போதல், வீரர்களைப் பார்த்து அஞ்சுதல், வேதனைப் படல், அவர்கள் கோயிலை இடித்து விட்டுப் போன பின் கோயிலுக்குள் போதல் - ஊமம்]

**நடிகர் 9:-** [கோயிலைப் பார்த்து] என்ன உடைந்தது?

**நடிகர் 10:-** திருக்கோணேஸ்வரம். [DC க்கு வந்து]

**நடிகர் 11:-** திருக்கேதீஸ்வரம். [DR க்கு வந்து]

**நடிகர் 1:-** நகுலேஸ்வரம் [DL க்கு வந்து]

**உரைஞர் 1:-** ஆலயங்கள் எல்லாம் மண்ணோடுமண்ணாய்ச் சாய்கின்றன. மனிதர்களும் சாய்கிறார்கள்.
[அனைவரும் வீழ்தல்]
[நடிகர்கள் அனைவரும் வீழ்ந்து படுத்திருக்க, பாடகர் இதனை இசைப்பர்]

**பாடகர்:-**
யார் செய்த வேளாண்மை யார் வெட்டுவோர்கள்?
யார் நட்ட பனை வடலி? யார் தறிக்கின்றார்கள்?
யார் கையில் கொடு வாள்கள்? யார் கை கும்பிடும் கை?
யார் கொல்லப்படுவோர்கள்? யார் கொன்று மகிழ்வோர்?





**உரைஞர் 2:-** [எழுந்து DL க்கு வந்து]
உடல் சிதறும் வேளையிலே உற்றார் ஆர்? உறவார்? உடைமைகள் ஏன்? வீடுகள் ஏன்? ஊர் தேசம் ஏன்? ஏன்?

**நடிகர் 2:-** [DR க்கு வந்து]
பிஞ்சுகளும் பூக்களும் காய்களும் உதிரும் வண்ணம் பேய்க் காற்றுப் போட்டுலுப்பும் மரத்தை ....

**நடிகர் 3:-** [DC யில்]
இரவெல்லாம் குஞ்சு குருமான்களெல்லாம் இடமின்றிப் பறக்கும்.
[எல்லாரும் இருளில் தடவுதல்]
கும்மிருட்டு!
மழைக்குளிரில் கொடுகும், உடல் நடுங்கும்
[எல்லாரும் நடுங்குதல் ஊமம்]

**கிழவி:-** [DR இல்] நீங்கள் மிகுந்த வேதனையோடு இருக்கிறீர்கள் இல்லையா?

**பாடகர் ஒருவர்:-** [UC இல் இருந்து பாடிப் பாடி DC க்கு வருவர்]
இனவாத விதை யிங்கு யார் தூவினார்கள்?
எரியென்றும் உடையென்றும் யார் ஏவினார்கள்?
சினமான செந்தீயை யார் மூட்டினார்கள்?
திரு நாட்டை எரியூட்டி யார் காட்டினார்கள்?

**நடிகர் 4:-** சங்கு முழங்கியதும் தானை நடத்தியதும்,
[சங்கு ஊதிக் கொண்டு படை நடத்திவரல் ஊமம்]

பொங்கி எழுந்ததுவும், புத்துலகக்
கனவினிலே ஆழ்ந்ததுவும், வீழ்ந்த
கதையாய், விழலாகிப் போய் விடுமா?

**கிழவி:-** இல்லை. அப்படி ஒரு போதும் ஆகிவிடாது. நான் ஒரு கதை சொல்வேன். கேளுங்கள்.

**எல்லாரும்:-** [கிழவியைச் சூழ இருந்து] சொல்லுங்கோ பாட்டி.

**கிழவி:-** விந்தனைப் பகுதியிலே ......

**எல்லாரும்:-** அதாவது காட்டிலே ........
[மிருதங்க இசை, காடு அசையும் ஊமம், மிருதங்க இசை..... காடு என்று சொல்லி அசைதல், மிருதங்கம், காடு அசைதல்]
[நடிகர்கள் எல்லாரும் காடு போன்ற உறை நிலைக்கு வந்த பின்னர்]

**கிழவி:-** விந்தனைப் பகுதியிலே வேடர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றார்கள்.
[பாடகர்கள் பாட நடிகர் சிலர் வேடுவர் போல ஆடி வருவர்]

**பாடகர்:-** வேட்டை ஆடுவோமே வீறு கொண்டு
வேட்டை ஆடுவோமே. – (2 முறை)
காடு மேடெல்லாம் கலங்காது கால்வைத்து
கண்ட மிருகத்தை வில்லம்பு கொண்டு –
(2 முறை)





கொன்று குவிப்போம் உண்டு மகிழ்வோம்
கொல்லடா
கொன்று குவிப்போம் உண்டு மகிழ்வோம்
கொல்லடா கொல் கொல் அந்தா மான்
மாரை
(வேட்டை)

**கிழவி:-** அவர்கள் மகாவலி கங்கைக் கரையில் உள்ள ஒரு காட்டுக்குச் சென்றார்கள். [UL இல் இருந்து DC ஊடாக, UR க்கு ஆறு ஓடி வருவதான நடனம்]

**பாடகர்–மிருதங்கம்:-**
தகிட, தகிட, தகிட, தகிட, தகிட, தகிட, தகிட

**வேடன்:-** அந்தா மான் மரை, இந்தா மான் மரை என்று பாடினது தான் மிச்சம் பாருங்கோ. இந்தக் காடு முழுதும் அலைஞ்சு திரிஞ்சிட்டன். எனக்கு இண்டைக்கு ஒரு பறவை கூட அகப்படேல்லை. ஆ ..... வெயிலின்ரை கொடுமையும் தாங்க முடியேல்லை. இந்த மர நிழலிலை கொஞ்ச நேரம் படுத்து நித்திரை கொள்ளுவம். [DR இல் உண்டான மரத்தின் கீழ் படுத்து உறங்கும் ஊமம்]

**உரை 1:-** அந்த மரத்தின் மேல் ஒரு கிளையில் இரண்டு மணிப் புறாக்கள் இருந்தன. அவை மிகவும் சந்தோஷமாய்க் குறு குறுத்துக் கொண்டிருந்தன.
[இரு புறாக்கள் கதைத்துக் கொண்டு இருப்பதான ஊமம்]

பாடகர்:- வேப்ப மரத்தின் கிளை ஒன்றில்
விருப்ப முடனே இரண்டு புறா
இன்புடன் அமர்ந்து விளையாடி
இருப்பதைக் கண்டான் ஒரு வேடன்.
(விழிசைச் சிவம் பாடல்)

நடிகர் 5:- அந்தப் புறாக்கள் சுதந்திரமாயும் ......

நடிகர் 6:- மகிழ்வாயும் இருந்தன.
[ஆண்புறாவும் பெண் புறாவும் மிகுந்த மகிழ்வுடன் பாடி ஆடும் காட்சி]

ஆண்புறா:- தினையும் நெல்லின் மணியும் கொவ்வைக்
கனியும் வாரிக் கொண்டு வந்து
தினமும் உந்தன் அடியில் வைப்பேன் வஞ்சி
என்னைச்
சேர்ந்து வாழப் பின்னும் என்ன பஞ்சி?

பெண்புறா:- நினைவில் வேறு யாரு மில்லை
நெஞ்சில் ஏதும் வஞ்ச மில்லை
வனம் முழுதும் எங்கள் அர சாட்சி – நீல
வானும் இளங் காற்றும் இரு சாட்சி.

ஆண்புறா:- காற்றில் ஏறிப் போகும் போதும்
ஊற்று நீரில் மூழ்கும் போதும்
பார்த்து நெஞ்சு தவிக்குதடி பாவி–
உன்னைப்
பற்றிப் பற்றிச் சுற்றுதடி ஆவி.

பெண்புறா:- வானகத்தின் இன்ப மெல்லாம்
வையகத்திற் கண்டு கொண்ட
ஆனந்தத்தில் நாங்கள் பாடும் கீதமே – எட்டு
ஆன திக்கும் சென்று சென்று மோதுமே.





ஆண்புறா:- சிறகுலர்த்தி நிற்கக் கண்டால்
குறு குறுக்கும் நெஞ்சு கண்ணே
குறையிருந்தால் சொல்லு அதைக்கேட்கிறேன்
– அடி
கோதைஉன்னைப் பின்னர் வந்துபார்க்கிறேன்.

பெண்புறா:- உச்சி மரக் கொப்பில் நிற்போம்
உலகை எல்லாம் நோக்கி நிற்போம்
அச்சமில்லை, அச்சமில்லை, துள்ளுவோம்
நாம்
ஆனந்தத்தை வாரி வாரிக் கொள்ளுவோம்.

நடிகர் 7:- உயிரினங்கள் சுதந்திரமாய் வாழ்வதைச் சிலரால் பொறுக்க முடிவதில்லை.

நடிகர் 8:- அந்தச் சுதந்திரத்தைப் பறிக்க வேண்டும் என்று ஒரு வெறி.

நடிகர் 9:- வெறி சொறி, வேடன் விழித்தெழுந்த போது புறாக்களைக் கண்டான். வில்லம்பைக் கரத்தில் எடுத்தான். எழுந்தான்.
[வேடன் எழுந்து படியில் இறங்குதல்]

நடிகர் 10:- புறாக்கள் வேடனைக் காணவில்லை. அவை தம் இயல்புப்படியே சந்தோஷமாய் இருந்தன.

நடிகர் 11:- புறாக்களைக் கண்ட இராஜாளி ஒன்று ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதனையும் புறாக்கள் காணவில்லை. அவை குறு குறுத்துக் கொண்டே இருந்தன.

உரை 1:- வேடன் வில்லை வளைத்து அதில் அம்பைத் தொடுத்தான்.

உரை 2:- எய்வதற்கு இலக்குப் பார்த்தான். அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்தான்.
[வேடன் படிகளில் ஏறி DR க்கு வருதல்]

கிழவி:- அந்தப் புறாக்களைப் போலவே தான் நாங்களும் மகிழ்வுடனும் சுதந்திரத்துடனும் இருந்தோம்.

நடிகர் 1:- எப்போது பாட்டி?

கிழவி:- ஐரோப்பியர் இந்த நாட்டுக்கு வர முந்தி ...
[கிழவி அமர்ந்து சந்தோஷமாய்ப் பாக்கிடித்து உண்ணுதல், மிருதங்கம் தொம், தொம் என முழங்குதல், நடிகர் எல்லாரும் வட்டமாய் வருதல், பாடலுக்கு அபிநயித்தல்]

பாடகர்:- அம்மா நான் விளையாடப் போறேன் -
கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை
[தாயும் பிள்ளையும் போலச் சோடியாகிப் பட்சணம் தருவது போல அபிநயித்து ஆடுதல்]
சும்மா நான் உட்கார மாட்டேன் - நல்ல
[எல்லாரும் + வடிவுக்கு வருதல்]
தோழர் அழைக்கின்றார் நாழிகை ஆச்சு ...
[ + வடிவில் உடற் பயிற்சி செய்தல்]
பூப் பறித் தாடுவோம் கொஞ்சம் - சாமி
பூஜை செய்தாடுவோம் பூரதம் கட்டி
[நடிகர் நாலு வரிசையில் சென்று பூப் பறித்தல், நடுவில் கொணர்ந்து போடுதல்]





வேப்ப மரத்தடி மண்ணில் சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்
[நடிகர்கள் குழுக்களாக அமர்ந்து மணல் வீடு கட்டி விளையாடுதல், விருந்து வைத்து விளையாடுதல்]
பாட்டுக் கச்சேரிகள் செய்வோம் - நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு....
[ஒரு குழு பாடுதல், ஒரு குழு மேளம் அடித்தல், ஒரு குழு நாதஸ்வரம் இசைத்தல், ஒரு குழு சுருதிப் பெட்டி போடுதல், ஒரு குழு தாளம் போடுதல் ஊமம்]
கேட்டுச் சபாஷ் எனச் சொல்வார் – பின்பு
[வட்டமாதல்]
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்
[அம்மாவாக நடித்தோர் உள் வட்டத்திலும் பிள்ளையாய் நடித்தோர் வெளி வட்டத்திலும் காவடி ஆடுதல்]
வேட்டிகளால் திரை கட்டிப் - பல
வேடங்கள் போட்டொரு நாடக மாடி
[இருவர் திரை பிடிக்க, மற்றவர் திரைக்குள் மேக்கப் போடும் ஊமம்]
காட்டுவோம் பாரதக் காட்சி – நான்
கண்ணனின் சொற் படி காண்டீபனாவேன்.
[அம்மா காண்டீபனாயும் பிள்ளை கண்ணனாயும் ஜோடி சேர்ந்து உறை நிலைக்கு வருதல்]
அம்மா நான் விளையாடப் போறேன் -
கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னைய்....ய்
[அனைவரும் கிளித்தட்டு விளையாடுதல் - பாடல் முடிய உறை நிலைக்கு வருதல்]

நடிகர் 2:- அப்போது எங்கள் மக்கள் நிறைவுடன் வாழ்ந்தார்கள்.

நடிகர் 3:- எல்லாளன் என்ற எங்கள் மன்னன் ... அதோ [UR ஐச் சுட்டுகிறார்]

மிருதங்கம் - பாடகர்:-

தந்தத் தகிர்தத் தகிர்தத் தாம்,
திந்தத் திகிர்தத் திகிர்தத் தெய் ....
(பல முறை)

[எல்லாளன், மந்திரி, இரண்டு குதிரை வீரர், சேவகன் ஆகியோர் பவனி வருதல்]

எல்லாளன்:- எனது தேர் இன்று வேகமாகச் செல்லுகிறது. இல்லையா மந்திரி யாரே?

மந்திரி:- ஆம் அரசே...... குதிரைகள் அருமையான குதிரைகள்.
[DL இல் குதிரைகள் ஏதோ ஒன்றில் மோதிக் கனைத்து நிமிருதல்]

நடிகர் 4:- ஆ ....... என்ன நடந்து விட்டது?

சேவகன்:- எமது தேர் அந்தப் புத்த விகாரையின் மதிலை இடித்து விட்டது அரசே

எல்லாளன்:- (இறங்கிப் பார்த்து விட்டு) ஐயோ நான் என்ன செய்து விட்டேன்? இன்னொரு சமயத்தவரின் மனதைப் புண்படுத்தி விட்டேனா? நான் பாவி, நான் பாவி, நான் இனிமேல் இறந்து விடுவதே மேலானது.





மந்திரி:- அரசே.... மனம் வருந்தாதீர்கள். இது தாங்கள் நினைந்து செய்த பிழை அன்று. ஒருவருக்கும் தெரியாமல் தற்செயலாய் நிகழ்ந்து விட்ட தவறு. இதற்குப் பிராயச் சித்தம் செய்யலாம் அரசே......
[அரசன் தேரில் ஏறித் திரும்பிச் செல்லுதல்]

நடிகர் 5:- [DL இல்] பிறகு எல்லாளன் என்ன செய்தான்?

கிழவி:- முன்னர் இருந்ததை விட அழகாக, அந்த விகாரையைப் புனரமைத்துக் கொடுத்தான்.

நடிகர் 6:- [DL இல் இருந்து DC க்கு வந்து] அருமையான அரசன், அருமையான ஆட்சி, மார்கழிக் கிணறுகளின் தண்ணீருக்கு உள்ள மகிழ்வு எமது மக்களுக்கும் அப்போது இருந்திருக்கும்.

நடிகர் 7:- இந்த மகிழ்வு எப்போது குலைந்து போயிற்று?

கிழவி:- அந்நியர் வருகை யோடு, போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் .... பிறகு .... இந்தியர்.....

பாடகர்:-

கத்தி வாள் கிறிஸ் ஏந்திய பேய்களும்
கண்ட கோடரி தாங்கிய பேய்களும்
குத்துவாள் பொல் உலக்கை இவையெலாம்
கொண்டுலாவிடும் பேய்களும் ஈற்றிலே
முத்து மாலைகள் தாலிகள் சங்கிலி

மோதிரம் கடிகாரம் எனப் பல
சுத்தமான பவுணில் அமைந்தவை
சூடுமாம் தத்தம் ஊருக்கு மீளுமாம்.
[நடிகர் இப் பேய்கள் போல ஊமம் செய்வர்]

**நடிகர் 8:-** மக்களுடைய சுதந்திரத்தைப் பறிப்பவருக்கு
என்ன நடக்கும் பாட்டி?

**கிழவி:-** நான் இன்னும் கதை சொல்லி முடிக்
கேல்லைப் பாருங்கோ.....

**எல்லாரும்:-** சொல்லுங்கோ. பாட்டி,

**பாடகர்:-** வேப்ப மரத்தின் கிளை ஒன்றில்
விருப்ப முடனே இரண்டு புறா
இன்புடன் அமர்ந்து விளையாடி
இருப்பதைக் கண்டான் ஒரு வேடன்
நல்ல வேட்டை இன்றைக்கு
நமக்கென் றெண்ணி, மகிழ்ச்சியுடன்
கொல்ல நினைத்தான் குறிபார்த்தான்
கொடிய செயலை மேற்கொண்டான்
[மீண்டும் காடு அமைதல், புறாக்கள்
மகிழ்வுடன் குறு குறுத்தல், வேடன்
தயாராதல் ஊமம்]

**பாடகர்:-** அந்த வேளை இராசாளி
அகன்ற வானில் வட்டமிட்டு
[இராசாளி ஒன்று வட்டமிட்டுப் பறத்தல்
ஊமம்]

**பாடகர்:-** அந்தப் புறாக்கள் தமைத் தூக்க
ஆவல் கொண்டு பறந்ததுவே





எங்கும் உள்ள இறைவனுக்கு
இவைகள் தெரிந்து விட்டனவே
திங்கள் அணியும் அவன் செயலால்
தீய அரவம் ஒன்று வந்து........
[பாம்பு ஒன்று நடன மாடி வரும் ஊமம்]

**பாடகர்:-** நாக பாம்பே – நல்ல
நாக பாம்பே
நச்சுப் பல்லை வைத் திருக்கும் நாக பாம்பே
– மன்றில்
நடமாடும் ஈசன் அணி நாக பாம்பே
உச்சியிலே 'மணி கொண்ட நாக பாம்பே
– எங்கள்
உமை அணியும் மோதிரமே நாக பாம்பே.

வேடனது காலை நோக்கி நாக பாம்பு – மிக
வேகமாக வந்த தடா நாக பாம்பு
காலிலது கடித்ததனால் வேடன் மாண்டான் -
இது
கடவுள் செயல் என்று சொல்லி ஆடு பாம்பே
நாக பாம்பே ஆடு பாம்பே.... நாக பாம்பே.....
ஆடு பாம்பே.....!

**நடிகர் 9:-** நாக பாம்பு கடித்ததனால் வேடன் மயங்கி
வீழ்ந்தான்.
[நாக பாம்பு வேடன் காலைக் கடிக்க, அவன்
தலை DC யில் தொங்கும் படி வீழ்வான்]

**நடிகர் 10:-** வேடன் விட்ட 'அம்பு, வட்டம் இட்டுக்
கொண்டிருந்த இராஜாளி மேல் பாய்ந்தது.
இராஜாளியும் வீழ்ந்து இறந்தது.

கிழவி:- ஒல்லாந்தர் போர்த்துக் கேயரை அழித்தனர். ஆங்கிலேயர் ஒல்லாந்தரை அழித்தனர்.

நடிகர் 11:- இந்தியரை?

கிழவி:- நாங்கள் திருப்பி அனுப்பிப் போட்டம்.

உரை 1:- ஆங்கிலேயர் எமக்குச் சுதந்திரம் தந்தனரே?

உரை 2:- ஓம். ஆனாலும், உயர் கல்வி பெற வேண்டுமாயின் மதம் மாற வேண்டும், வேற்று மொழியில் கல்வி பயில வேண்டும் என்ற நிலை அழுத்தம் பெற்றதும் ஆங்கிலேயர் காலத்திற்றான்.

நடிகர் 1:- ஆனால் எங்கடை சனம்.......

நடிகர் 2:- ஆங்கிலேயர் தந்து விட்டுப் போன சுதந்திரத்தையும் இன்னும் அநுபவிக்கேல்லை.

நடிகர் 3:- சனம் என்ன செய்யுது?

நடிகர் 4:- செல்வ மெல்லாம் தொலைக்குது, விற்குது, வரிந்து கட்டி விண் ஊர்தியில் ஏறுது.....
[பிளேனில் ஏறுவதற்கு ரிக்கற் பெற, வரிசையில் நிற்றல், முண்டி யடித்தல், அடிபடுதல் ஊமம்]

கிழவி:- [DC இல்] நம் மானமும் கப்பல் ஏறுது கூடவே

நடிகர் 5:- காசு தேடுதல் இங்கொரு இலட்சியம்.
[காசு தேடுவதான நடிப்பு ஊமம்]

நடிகர் 6:- கடலைத் தாண்டுதல் கூட இலட்சியம்.





[மக்கள் வள்ளத்தின் வடிவுக்கு வருதல். வள்ளம் செலுத்துவதான ஊமம்]

பாடகர்:- ஏலேலம், ஏலவலை, ஏலேலம், ஏலவலை.......
(8 முறை)

நடிகர் 7:- வீசு காற்றையும் கட்டிப் போட்டொரு பிஸ்னஸ் செய்தல் இன்னொரு இலட்சியம்.

உரை 1:- காசு தேடுதல் இங்கொரு இலட்சியம்
(ஒரு விரல் மடிக்கிறார்)
கடலைத் தாண்டுதல் கூட இலட்சியம்
(இரு விரல் மடிக்கிறார்)
வீசு காற்றையும் கட்டிப் போட்டொரு பிஸ்னஸ் செய்தல் இன்னொரு இலட்சியம்
(பெரு மூச்சு விடுகிறார்)

நடிகர் 8:- ஊசியின் முனை நுழையக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் தேடித் தேடிப்போய்
[அகதிகள் உணவு கேட்டு வாங்குதல், சாப்பிடுதல் ஊமம்]

நடிகர் 9:- ஓசி வாழ்க்கை வாழ்ந்திடல் ஆகிய உயர்ந்த இலட்சியம் தமிழருக்குள.
[பின் பக்கம் நடந்து உயர் ஆசனத்தில் ஏறி நிற்கிறார்]

உரை 2:- ஓமோம். ஊசியின் முனை நுழையக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் தேடித் தேடிப் போய் ஓசி வாழ்க்கை வாழ்ந்திடல் ஆகிய உயர்ந்த இலட்சியம் தமிழருக்குள.

**நடிகர் 10:-** பூமி யொடு காணி, பொருள் பண்டம்
விற்றொதுக்கிச் சேமமுறு வாழ்வைத் தேடி
அவர் போகின்றார்.

**நடிகர் 11:-** சேமமுறு வாழ்வு சில வேளை
வாய்த்தாலும்.......

**உரை 1:-** ஆமி இல்லாத நாடு
அகில மெங்கும் இல்லை யடி!

**எல்லாரும்:-** ஓம் பாருங்கோ! [ஏளனமாக]

**உரை 2:-** ஆமி இல்லாத நாடு
அகில மெங்கும் இல்லை யென்று
மாமி உணராள்
மருகன் உணரானோ?

**எல்லாரும்:-** அது தானே!

**உரை 1:-** சூடு சுரணையுடன் வாழ்ந்த இனம் இன்று
சூடும் நெருப்பும், துயரும், சுமந்தெங்கும்
ஓடும் இனமாய் உருக்குலைந்து நின்று படும்
பாடு இரு கண் கொண்டு
பார்க்கச் சகிக்கவில்லை
[பின்னணியில் ஆ ........ ஆ ....... ஆ .......
அனுங்கும் ஒலி]

**நடிகர் 1:-** எங்கே இது முடியும்? எங்கு நமைக் கொண்டு
செல்லும்?

**கிழவி:-** சேமமுறு வாழ்வு சிறு பொழுதில் மலரும்
இங்கே.





**நடிகர் 2:-** சங்கு முழங்கியதும், தானை நடத்தியதும்
பொங்கி எழுந்ததுவும்
புத்துலகக் கனவினிலே ஆழ்ந்ததுவும்
வானம் எங்கள் கைக்குள் அகப் பட்டதுவும்
மீண்டும் வரலாகும் விடி வெள்ளி காலிக்கும்
[நடிகர் அனைவரும் கோஷம் எழுப்பியபடி
ஊர்வலம் போல மேடையைச் சுற்றி நடப்பர்]

**எல்லாரும்:-** சங்கு முழங்கியதும் தானை நடத்தியதும்
பொங்கி எழுந்ததுவும்
புத்துலகக் கனவினிலே ஆழ்ந்ததுவும்
வானம் எங்கள் கைக்குள் அகப்பட்டதுவும்
மீண்டும் வரலாகும் விடிவெள்ளி காலிக்கும்!

**பாடகர்:-** மங்களம்! மங்களம்!! மங்களம்!!!
[நடிகர்கள் அனைவரும் அரை வட்டமாய் வந்து,
சபையை வணங்கி, இரு வரிசைகளில்
மேடையை விட்டு நீங்குதல்]

[முதல் மேடையேற்றத்தின் நடிகர்கள் செல்விகள் சிவரதி சிவபாலன், நளாயினி சோமசுந்தரம், பகீரதி ஜீவேஸ்வரா, சாந்தரூபி ஏரம்பமூர்த்தி, வினோதினி விஜயரத்தினம், கௌசீதகி சண்முகநாதன், சுபாஜினி கனகரத்தினம், சுகிர்தா இராமசாமி, செல்வர்கள் பிரவீணன் மகேந்திரராஜா, சதீஷ் பாலமுருகன் முருகையா, செல்விகள் தில்லானா சபாரத்தினம், தமயந்தி நடராஜா, பிரமிளா குணரத்தினம், சஜிதா சண்முகராஜா, லதாங்கி மகாலிங்கசிவம், பவானி தவராஜா]



# குருவி கூவ மறந்ததோ?

(40 நிமிட நவீன மோடிப்படுத்தப்பட்ட நாடகம் )

**முதல் மேடையேற்றம்:-**

மே1993 – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபம் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றது.

**இரண்டாவது மேடையேற்றம்:-**

யூலை1993 – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபம்.

**மூன்றாவது மேடையேற்றம்:-**

செப்டெம்பர்1993 – சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபம்

**நான்காவது மேடையேற்றம்:-**

10-03-1994 – உரும்பிராய் ஞானவைரவர் தேவஸ்தான வீதி -மகா சிவராத்திரி விழா

**ஐந்தாவது மேடையேற்றம்**

மார்ச்1994 – கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா.

நெறியாள்கை – திருமதி கோகிலா மகேந்திரன்

(இதன் பின்னரும் வேறு பல நெறியாளர்கள் இந்த நாடகத்தை மேடையேற்றியுள்ளனர்.)





# குருவி கூவ மறந்ததோ?

(திரை விலகும் போது அர்ச்சகர் ஒருவர் பூஜை செய்ய மக்கள் சிலர் கும்பிடும் உறை நிலையில்)

**உரைஞர்1:** நீங்கள் இப்போது பார்க்க இருப்பது குருவி கூவ மறந்ததோ? நாடகம்.

(உறை நிலையில் நிற்போர் அசைவர். அர்ச்சகர் மெய் உருகிப் பக்தியுடன் பூஜை செய்வர். மக்கள் அமைதியாக ஒழுங்காக நின்று வழிபடுவர்.)

**உரைஞர்2:** இது எங்கள் கிராமம். பாருங்கள்! எங்கள் கிராமத்தில் நிலமகள் பச்சைச் சேலை அணிந்திருக்கிறாள். எங்கள் பிள்ளையார் ஆலயத்தில் திருவிழா. எமது மக்கள் சிந்தை பாகாக உருக, மெய் சிலிர்த்துக் கண்ணீர் மல்கி நிற்பர். குருக்களின் பூஜையிலும், நாதஸ்வர ஒலியின் மேன்மையிலும், இன்ப வெறி தலைக்கேறி, மகிழ்வர். வான்வெளியின் ஒளித் தாரகைகளோடு, வாண வேடிக்கை தரும் சிதறல்களும் துள்ளி வீழும்.
(அர்ச்சகர் பூஜை முடிந்து தரும் பிரசாதங்களை அணிந்து கொண்டு மக்கள் பிரசங்கத்திற்கு அமர்வர். குருக்களிடம் காளாஞ்சி வாங்கிப் பிரசங்கியார் தொடங்குவார்.)

**பிரசங்கியார்:** நமப் பார்வதீ பதே!(3முறை)

**மக்கள்:** அரஹர மகாதேவா.
(பிரசங்கியார் DL இல் நிற்க மக்கள் அவர் முன்னே பரந்து அமர்ந்திருப்பர்)

**பிரசங்கியார்:** கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினைகடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுபபரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.
(பிரசங்கியார் பாடி முடியும்போது ஹெலி
சுடும் சத்தம் கேட்கிறது. மக்கள்
பதற்றமடைகின்றனர். நடிகர் ஒருவர் ஹெலி
போல ஊமம் நிகழ்த்துவார்.)
(பின்னணியில் ஒகன் ஹெலி சுடும் சத்தம்
இசைக்கும்)

**பிரசங்கியார்:** பக்தர்களே அமைதி, அமைதி. என்ன இது?
பிள்ளையார் கதை கூற வந்த நான்
அகதிகளின் கதை அல்லவா கூறப்போகிறேன்
போல இருக்கிறது? இது என்ன கொடுமை?
(மீண்டும் ஹெலியின் சூடுகள், ஷெல்கள்,
துவக்கு ஒலிகள், சிலர் காயப்பட்டு வீழ,
ஏனையோர் வீட்டுக்கு ஓடி அகப்பட்டதை
எடுத்துக் கொண்டு ஊரை விட்டே
ஓடுகின்றனர். ஓடிக் கொண்டிருந்த நடிகர்
உறை நிலைக்கு வர இப்பாடல் பாடப்படும்.)
(இது கவிஞர் சோ.ப. வின் பாடல்)





**பாடகர்:** வானத்திலே இருந்து சடார் சடார் எனவே
நினைக்கு முதலே ஷெல்லாய் ஷெல்லாய்
பொழி
போது மக்கள் பயந்து ஐயோ ஐயோ என
விழலாமோ? (2முறை)
(மக்கள் கூட்டம் சோர்ந்து, துன்புற்று மிக
மெதுவாக நடந்து வேகம் குறைந்து,
இறுதியில் ஒரு கோயிலை அண்மிக்கிறது.)

**பாடகர்:** குருவி கூவ மறந்ததோ?
குறு மென் காற்றும் நின்றதோ?
தெருவில் எங்கும் மோனமோ?
தேய்ந்த தெங்கள் இதயமே!
வானை என்ன மறைத்தது?
மலரை என்ன சிதைத்தது?
ஆவி நின்று சிலிர்க்குது
விளக்கைக் காற்று அணைக்குது.. ஆ
விளக்கைக் காற்று அணைக்குது
ஆ..ஆஆஆ....ஆ...ஆஆஆ.....
(கோயில் மடத்தில் அனைவரும் அமர்ந்து
மிகுந்த சோகத்துடன் இப்பாடலை இசைப்பர்)

**அகதி1:** இனி எங்கை போறது? இந்தக் கோயில்
மடத்திலை கொஞ்ச நாள் இருப்பம்.

**அகதி2:** ஐயோ, உங்காலை எங்கடை ஊர்ப்பக்கம்
என்ன கோதாரி நடந்திதோ தெரியேல்லை.

**அகதி3:** கொஞ்சம் பொறனப்பா. கந்தையா
அண்ணேன்ரை மேன் தேப்பனை ஏத்தி
வரப்போனவன். வந்தாத் தெரியும்.

ஆச்சி: பிள்ளை எனக்கு நாக்கு வறளுது. எங்கை எண்டாலும் போய் எப்பன் தண்ணி வேண்டித்தா மேனை?

மகள்: கொஞ்சம் பொறணை. சனம் படுற பாட்டுக்கை நீ ஒரு பக்கமப்பா.
(ஷெல் ஒன்று அருகில் விழும் சத்தம் கேட்கிறது)

எல்லாரும்: அப்பாடா!

அகதி4: (வெளியில் ஓடிப் போகிறார். சிறிது நேரத்தில் திரும்பி வருகிறார்.)
ஐயோ, எங்கடை அப்பையா அண்ணையை எல்லே சுட்டுப் போட்டாங்களாம்.

அகதி5: தம்பி, என்ன தம்பி சொல்லு! ஆமி எங்கையாம் தம்பி நிக்கிறான்?

அகதி6: நாங்கள் விடிய வீட்டை போலாமோ தம்பி?

அகதி4: ஐயோ, அதெல்லாம் முடிஞ்ச கதை அப்பா. இனி அங்கை போக ஏலாது. அவன் வடக்கு அளவெட்டிக்கும் இங்காலை எல்லே வந்து நிக்கிறான்.
எங்கடை சின்னம்மா அக்காக்கும் எல்லே கால் இல்லையாம். நான் தப்பினது அரும்பொட்டிலைதான். ஏதோ எங்கடை பிள்ளையார் தான் என்னைக் காப்பாத்தினது.

அகதி2: ஐயோ, நான் என்ரை நகை எல்லாத்தையும் விட்டிட்டு வந்திட்டனே,இனி என்ன செய்யப்போறன்? (பலமாக அழுகிறாள்)





ஆச்சி: ஐயோ, நான் என்ரை பாக்குரலையும் எல்லே விட்டிட்டு வந்திட்டன்.

அகதி3: என்ரை புத்தகங்கள், நோட்ஸ்..(ஏக்கத்துடன்)

அகதி6: நான் மாத்தி உடுக்க ஒரு சீலையும் எடுக்கேல்லை..

அகதி1: சரி, இனி உதுகளைக் கதைச்சென்ன?இரவு இதிலை படுப்பம். விடிய யோசிப்பம்.
(அகதிகள் சேர்ந்து கோயிலடியில் சமைத்தல், எல்லாரும் அமர்ந்து சாப்பிடுதல் போன்றவை ஊமத்தில் நிகழ்த்தப்படும். அப்போது அந்த ஊரில் நிரந்தரமாக வசிப்பவர்கள் வந்து இவர்களைப் பார்க்கிறார்கள். முணுமுணுக்கிறார்கள்.)

ஊரவர்1: சிச்சிச்சிச்சிச்சீ ...... இந்த அகதியளை இஞ்சை இருக்க விட்டால், எங்கடை கோயில் ஊத்தையாப் போம்(சொண்டை நெழித்து)

ஊரவர்2: (அகதிகளைப் பார்த்து)ஏன் நீங்கள் உங்கடை ஊருக்குத் திரும்பிப்போகலாந் தானே!

அகதி ஆச்சி: போறதோ? எங்கை போறது நாங்கள்?

ஊரவர்3: அப்பிடிப் போக ஏலாட்டி, வேறை வீடுபாத்துப் போகலாந்தானே.
(ஆச்சி முறைக்க ஊரவர் திரும்பிப் போகிறார்கள். அகதிகள் சாப்பிட்டபின் மண்டபத்தில் படுத்துக் கொள்கிறார்கள்.)

**அகதி4:** (கனவில்) ஐயையையோ..ஆமி வந்திட்டான், ஆமி வந்திட்டான்..
(எல்லாரும் திடுக்கிட்டு எழுதல்)

**எல்லாரும்:** எங்கை? எங்கை?

**அகதி1:** அது இவன் கனவிலை எல்லோ பயந்து குழறியிருக்கிறான். படுங்கோ எல்லாரும்.
(எல்லாரும் பெரு மூச்சுடன் மீண்டும் படுப்பர். ஒருவர் மட்டும் படுக்காமல் குந்தியிருந்து யோசிக்கிறார்.)

**அகதி7:** அண்ணை, என்னண்ணை யோசிக்கிறியள்?

**அகதி8:** இல்லை. போன வருஷம் தைப்பொங்கலுக்கு,எங்கடை சனசமூக நிலையத்திலை, ஒரு தமிழ் விழாச் செய்தனாங்கள் எல்லே..நினைவிருக்கே உனக்கு? அதைப்பற்றித்தான் யோசிக்கிறன். எவ்வளவு சந்தோஷமாய் இருந்தம் அண்டைக்கு..?
(எல்லாரும் ஒரு கணம் அந்த நிகழ்வை நினைத்துப்பார்க்கும் உறை நிலையில் நிற்பர். பின்னர் காரைசெ.சுந்தரம்பிள்ளையின் பாடலுக்கு நடிப்பர்.)

**பாடகர்:**
சங்க மணம் வீசு தமிழ் மாது -புவி
எங்கு மெழிலோடிலங்கும் போது - தமிழ்
சிங்கம் நிகர் காளையர்கள்
தங்கள் மொழியை மறத்தல்தீது - இதை ஓது
(இப்பந்திக்கு இருவர் நடனம் ஆட, ஏனையோர் ரசிப்பர்)



**பாடகர்:**
ஆரியர்கள் தந்த மொழி என்று - சில
பூரியர்கள் சொல்லுகிறார் இன்று - தமிழ்ப்
பாரி வள்ளல் குன்றினைப்
படைப் பலத்தினால் வளைத்தவாறு - பெரும் மாறு
(இப்பந்திக்கு ஒரு கர்நாடகக் கச்சேரி நடப்பது போன்ற ஊமம் நிகழும்)

**பாடகர்:**
பல் மொழியைத் தந்த தமிழ் மாது - அவள்
பாங்கினிலே இருக்க எவள் தோது - பிறர்
சொல்லுவதும் துள்ளுவதும்
தூய தமிழ் மாதினுக்கா ஏதம் -தரும் வேதம்
(இவ்விடத்தில் பட்டி மண்டபம் நடைபெறுவது போன்ற ஊமம் நிகழும்)

**பாடகர்:**
பாரதியைத் தந்தவளெம் அன்னை - தமிழ்ப்
பாவலரை ஈந்தனளே முன்னை- தெரு ஓரமதிலே இருந்து
ஓலமிட்டால் லாபமில்லை எண்ணு-வழிபண்ணு
(மற்போர் நடைபெறுவதான ஊமம்)

**பாடகர்:**
கன்னல் மொழி கற்பதற்குப் பாகு -கம்பன்
காத்த மொழியைக் காக்க ஏகு - பல
இன்னல் வந்து சூழ்ந்திடினும்
எங்கள் மொழிக்காய் உயிரை ஈதல் - தமிழ்க் காதல்..
(இப்பந்திக்கு நடிகர் எல்லாரும் வட்டமாய் நின்று ஆடுவர். பாட்டு முடிய அனைவரும் உறை நிலைக்கு வருவர்.)

**அகதி1:** சரி, சரி,இனி அந்தத் தமிழ் விழாவை யோசிச்சு என்ன பிரயோசனம்?

**அகதி2:** இனிமேல் நாங்கள் எங்கடை வீடுகளை விட்டு வெளியேறின ஆண்டு விழாக்களைத் தான் கொண்டாட வேணும்.

**அகதி3:** சரி, எத்தினை நாளைக்குத்தான் கோயில்லை இருக்கிறது? ஊருக்குள்ளை போய் வீடு தேடிப் பாப்பம்.
(எல்லாரும் கலைந்து செல்வதான ஊமம். காட்சி மாறுகிறது.)
(வீட்டுக்காரர் தம் உயர் அந்தஸ்துப் புலப்படும்படி உயரமான பீடத்தில் இருக்கின்றனர். வெளியே அகதிகளின் குரல் கேட்கிறது.)

**அகதி1:** அண்ணை, அண்ணை!

**அகதி2:** வீட்டுக்காரர், வீட்டுக்காரர்!

**நாய்:** வள், வள், வள்...

**வீட்டுக்காரர்1:** ஆரது?

**வீட்டுக்காரர்2:** ஆரோ அகதியள் போலை கிடக்கு. கேற்றைப் பூட்டுங்கோ.. உள்ளுக்கு வரப்போதுகள்.

**அகதி1:** அம்மா, உங்கடை வீட்டிலை ஒரு அறை வாடகைக்குத் தருவியளே?

**அகதி2:** உந்தப் பெரிய வீட்டிலை நீங்கள் இரண்டு பேர் தானோ இருக்கிறியள்?

**வீட்டுக்காரர்1:** சிச்சிச்சீ... நாங்கள், நாங்கள் இருக்கத் தானே வீடு கட்டின்னாங்கள்.





**வீட்டுக்காரர்2:** மற்றது எங்கடை வீட்டிலை றெக்ஸ்ஸுக்கு ஒரு அறை வேணும்

**அகதி1:** றெக்ஸ் எண்டால்..?

**வீட்டுக்காரர்1:** அது எங்கடை றெக்ஸ்! எங்கடை பெற்.

**நாய்:** வள்! வள்!

**வீட்டுக்காரர்2:** மற்றது றொனிக்கு ஒரு அறை வேணும். மற்றது நான் படிக்க ஒரு அறை, அம்மா படுக்க ஒரு அறை, மற்றது சாப்பாட்டு அறை, மற்றது ஸ்ரோர்றூம், இங்காலை கிச்சின்..

**அகதி3:** அந்த மூலையிலை இரண்டு அறை இருக்கு.

**வீட்டுக்காரர்1:** (சிரித்து) அது குளிக்கிற அறை. மற்றது அற்றாச்ட் ரொயிலற்.

**அகதி2:** அங்காலை ஒரு பத்தி இறக்கி இருக்கிறியள்.. அதிலை இருக்க விட்டாலும் போதும்..

**வீட்டுக்காரர்2:** அது எங்களுக்கு விறகு போட, மா இடிக்க..

**வீட்டுக்காரர்1:** அதை உங்களுக்குத் தந்திட்டுப் பிறகு எங்கை உங்கடை முதுகிலையே நாங்கள் விறகு போடுறது?

**அகதி1:** அம்மா...

**வீட்டுக்காரர்1:** போங்கோ.. போங்கோ.. வேறை இடம்பாருங்கோ..
(உயரமான பீடத்தில் இருந்து இறங்கி, அகதிகளைக் கலைத்தல்)

**வீட்டுக்காரர்:** சிச்சிச்சீ.. உதுகளை விட்டாப்பிறகு எழுப்பேலாது.. அதுகள் பிறகு தங்கடை வீடெண்டு நிக்குங்கள். எங்களுக்கேன் வீண் பிரச்சினை?
(அகதி திரும்பிக் கவலையுடன் போதல்)
(மேடையின் மற்றொரு மூலையில் இன்னொரு வீடு அமைகிறது. முதல் காட்சி போலவே இங்கும் வீட்டுக்காரர் உயரமான இடத்தில் நிற்கின்றார்.)

**அகதி4:** அக்கா, அக்கா, உங்கடை வீட்டிலை இருக்க இடம் தருவியளோ?

**அகதி5:** சும்மா இல்லை. நாங்கள் வாடகை தருவம்.

**வீட்டுக்காரர்1:** நீங்கள் எத்தினை பேர்?

**அகதி4:** நாங்கள் மூண்டு பேர்.

**வீட்டுக்காரர்2:** அந்த மூண்டு பேரும் ஆம்பிளையளோ, பொம்பிளையளோ?

**அகதி6:** பொம்பிளையள்தான். மூண்டு பேருமே பொம்பிளையள்தான்.

**வீட்டுக்காரர்3:** அந்த மூண்டு பேரும் என்ன வேலை செய்யினம்?

**அகதி6:** நான் நெசவுக்குப் போறனான். மற்றவைக்கு வேலை இல்லை.

**வீட்டுக்காரர்2:** அப்ப அவை மூண்டு பேருக்கும் எத்தினை வயது?





**அகதி6:** நான் எனக்கு இருபது வயது. மற்றது எங்கடை அம்மா. நாப்பத்தைஞ்சு வயது மற்றது அம்மம்மா..

**வீட்டுக்காரர்1:** ஓ.. ஓல்ட் லேடி! கஷ்டம். கஷ்டம். அவவுக்கு வருத்தம் வந்தா, பிறகு பெட்டிலை(Bed) இருந்தா வீடு பழுதாப் போம். நீங்கள் வேறை இடம் பாருங்கோ.
(ஆசனத்தில் இருந்து இறங்கிக் கலைத்தல்)

**அகதி5:** வேறை வீடு பாத்தா, அந்த வீடு பழுதாகாதோ?

**அகதி4:** உங்களுக்கு ஒரு நாளும் வருத்தங்கள் வாறேல்லையோ?

**வீட்டுக்காரர்2:** (கோபமாக) உங்களுக்கேன் வீண்கதையள். நீங்கள் போட்டு வாங்கோ.
(பின்வரும் பாடலைப் பாடிய படி நடிகர்கள் அரை வட்டமாகச் சுற்றிவருவர். பின் அடுத்த காட்சிக்கு மாறுவர்.)

**பாடகர்:** வருத்தங்கள் வாழ்க்கையிலே வந்து வந்து
போகும் - அது
வந்து போகும் வழியிலேதான் இன்பம் வந்து
சேரும்
(முன் மேடையில் சிறுவர் நால்வர் கரம் விளையாடுவர் நடுமேடையில் நால்வர் காட்ஸ் அடிப்பர். பின் மேடையில் மூவர் கிறிக்கற் விளையாடுவர்)

**அகதி1:** ஆர் முதல் விளையாடிறது?

**வீட்டுக்காரர்1:** ரொஸ் போடுவம்.

**அகதி2:** எங்களுக்கு ரெயில்!
(வீட்டுக்காரக் குழந்தை சுண்டுகிறது)

**அகதி2:** ஆ..ஆ.. எங்களுத்குத்தான் நாங்கள் தான் முதலிலை விளையாடிறது.

**வீட்டுக்காரர்2:** இல்லை. நாங்கள தான் முதல் எங்கடை கரம் போட்டிலை நாங்கள் தான் முதல்.
(காயை அடிக்கிறார்கள்)

**அகதி1:** ஆ.. விழேல்லை.. விழேல்லை.. இனி நாங்கள்
(காயை அடிக்கிறார்கள்)

**அகதி2:** விழுந்திட்டுது.. திருப்பியும் நாங்கள் தான்

**வீட்டுக்காரர்2:** இல்லை. இல்லை இனி நாங்கள்

**அகதி1:** என்ன? உங்களுக்கு விளையாட்டின்ரை றூல்ஸ் தெரியாது போலை இருக்கு.

**வீட்டுக்காரர்1:** எங்கடை வீட்டிலை..

**வீட்டுக்காரர்2:** எங்கடை கரம் போட்டிலை..

**வீட்டுக்காரர்1:** எங்களுக்கு றூல்ஸ் சொல்லித் தாறியளோ நீங்கள்?

**வீட்டுக்காரர்2:** அகதியளா வந்திருந்து கொண்டு ஆணவம் காட்டிறியளோ? விடுங்கோ போர்ட்டை!
(அவர்கள் போர்ட்டைத் தூக்கிச் செல்ல, அகதிச் சிறுவர்கள் அழுது கொண்டு போகின்றனர். அதே நேரத்தில் காட்ஸ் விளையாட்டும், கிரிக்கட் ஆட்டமும் இதே போலவே குழம்பிப்போவது ஊமத்தில் காட்டப்படும்.)





**பாடகர்:** வருத்தங்கள் வாழ்க்கையிலே வந்து வந்து போகும் - அது
வந்து போகும் வழியிலேதான் இன்பம் வந்து சேரும்.
(இப்பாடலைப் பாடியபடி நடிகர் சுற்றிவருவர். காட்சி மாறும்.)
(மற்றொரு வீடு பின் மேடையில் அமையும். வீட்டுக்காரர் உயரத்தில் இருந்து கதைப்பர்)

**மகள்1:** அம்மா, இண்டைக்கு அந்திரட்டி நல்லா நடந்து முடிஞ்சிட்டுது என்னம்மா?

**அம்மா:** ஓமடி..எத்தினை எஞ்சினியேர்ஸ், டொக்ரேஸ் எல்லாம் வந்து வயிறு நிறையச்சாப்பிட்டினம் எனக்கு நல்ல சந்தோஷம்.

**மகள்2:** பாயசம் நல்ல ரேஸ்ற் என்னம்மா?

**மகள்1:** கஜுவும், பிளம்ஸ்ஸும் மணி!
(வெளியே குரல் கேட்கிறது)

**அகதி1:** அம்மா.. அம்மா..

**அம்மா:** ஆரெண்டு பார்.

**மகள்1:** (எட்டிப் பார்த்து விட்டு) அகதியள் போல கிடக்கம்மா.

**அம்மா:** ஒரு மாதிரி ஏதாலும் சொல்லிக் கில்லி ஆக்களை அனுப்பிப் போட்டு வா.. போ.

**மகள்2:** அதுகள் வந்து இருந்திட்டுதுகள் அம்மா..

அம்மா: ஐயையோ.. இப்ப என்ன செய்யிறது? அந்தப் பானைக்கை கொஞ்சம் பழஞ்சோறு கிடக்கு. எடுத்துப் போட்டிட்டு வா.
(மகள் பழஞ்சோறு கொண்டு வந்து போட, அகதிகள் மணந்து பார்த்துத் தமக்குள் கதைப்பர்.)

அகதி1: அக்கா, கறி ஒண்டும் இல்லையோ?

அகதி2: உருளைக் கிழங்குக் கறி எண்டால் நல்லது.

மகள்2: (உள்ளே போய்) அம்மா, உருளைக் கிழங்குக் கறி வேணுமாம்.

அம்மா: ஐயையோ (காலைத்தூக்கி) உருளைக் கிழங்கு விக்கிற விலையிலை, உருளைக் கிழங்கைப் போட்டிட்டு என்ன செய்யிறது? அதுகும் கொஞ்சந்தான் கிடக்கு. இண்டைக்கு இவளின்ரை பிரண்ட்ஸ் வந்தாக்குடுக்க ஒண்டுமில்லை. அங்கை கரட் சம்பல் கிடக்கு.. கிலோ மூண்டு ரூபாய்.. கொண்டு போய்ப் போடு.. போ..

மகள்: அந்தக் கரட் சம்பல் புளிச்சுப் போச்சம்மா..

அம்மா: புளிச்சாப் புளிக்கட்டன். எங்களுக்கென்ன? (சொல்லி விட்டு, விசுக்கியபடி ஸ்டைலாக அமர்ந்திருக்கிறா. மகள் கரட் கொண்டு வந்து போடுகிறாள்.)

அகதி1: அம்மா, பாயாசம்...

மகள்2: அம்மா, பாயாசம் எல்லே கேக்குதுகள்.





அம்மா: (ஆசனத்தில் இருந்து படீரென்று குதித்து) ஐயையோ பாயசமோ? எங்கடை வீட்டை வந்த டொக்ரேஸ், எஞ்சினியர்ஸ்ஸுக்குக் கூடப் போதியளவு பாயாசம் குடுக்கேல்லை. உங்களுக்கென்னண்டு தாறது?

அகதி1: எனக்கு வேண்டாம். நான் அந்தக் காலத்திலை நல்லாக் குடிச்சனான். இதுகள் குழந்தையளுக்குத்தான்...

மகள்1: ஒருத்தருக்குமில்லை.
(உள்ளே போய் ஒரு செம்பு எடுக்கிறாள்)

மகள்1: அம்மா, இந்தச் செம்பிலை தண்ணி கொண்டு போய்க் குடுக்கட்டே?

அம்மா: ஐயோ, உது நான் மினுக்கி வைச்ச செம்பெல்லே, உதை வைச்சிட்டு அந்த லோட்டாவிலை கொண்டு போய்க் குடு.
(தண்ணீரைக் கொடுக்கிறாள்)

அகதி1: (வாங்கும் போது) என்னம்மா? உங்கடை ஊரிலை தண்ணிக்கும் பஞ்சம் போலை இருக்கு. எங்கடை ஊரிலை போதிய அளவு கிடைக்கும் தண்ணி!

மகள்1: அப்பேன் அதை விட்டிட்டு வந்தனீங்கள் இஞ்சை?
(அகதிகள் தண்ணீரை வாங்கிக் கழுவிவிட்டுப் பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தல்)

அகதி1: அம்மா, மெத்தப் பெரிய உபகாரம், போட்டு வாறம்.

மகள்1: ஓமோம், போனாக் காணும்.

அம்மா: அப்பாடா.. ஒரு மாதிரிப் போட்டுதுகள்.
(நடிகர் பாடிக் கொண்டு சுற்றிச் சுற்றி அடுத்த காட்சிக்குமாறுவர்)

பாடகர்: கிள்ளக் கிள்ள வெற்றிலையும்
தளைப்பதைப்பாரு - நீயும்
மெள்ள மெள்ளத் துன்பத்தினால்
உயர்வதைப் பாரு.
(முந்திய கோயில் மடத்தில் அகதிகள் எல்லோரும் அமர்ந்திருக்கின்றனர்)

அகதி1: அந்திரட்டி வீட்டுக்குச் சாப்பிடப் போய் நாங்கள் பட்ட அவமானம் போதுமப்பா.

அகதி2: ஒரு அறை தேடி இந்த ஊரெல்லாம் அலைஞ்சு களைச்சுப் போனம்.
நாய் அலைச்சலப்பா.

அகதி3: அதுகள் எத்தினை விதமான கேள்வியளப்பா கேக்குதுகள்!

அகதி4: கேளாத கேள்வியள், சொல்லாத சொல்லுகள், பேசாத பேச்சுகள்..ம்!

அகதி5: விளையாடப் போனாலும் அகதியள் வெற்றியடையப்பிடாது எண்ட மாதிரிச் சட்டம் வைக்கினம்.

அகதி6: நாங்கள் நல்லாக் கஷ்டப்பட்டிட்டம்.

அகதி7 யாழ்ப்பாணத்திலை எல்லாருந்தானே கஷ்டப்படினம்.





அகதி8: அப்பிடிச் சொல்லப்பிடாது. இஞ்சை சில பேர் நல்ல வசதியாத்தான் இருக்கினம். சில பேர்தான் வசதியீனங்களைக் காவிக் கொண்டு திரியினம்.

அகதி1: இந்த வசதியீனங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன எண்டு நீங்கள் யோசிக்கேல்லை.

அகதி2: எங்களுக்குச் சமைக்க விறகில்லை.

அகதி3: இருக்க வீடில்லை.

அகதி4: கொழுத்த மண்ணெண்ணை இல்லை.

அகதி5: ஆஸ்பத்திரிக்குப் போனா மருந்தில்லை.

அகதி6: பள்ளிக்கூடம் போனாத் தளபாடம் இல்லை.

அகதி7: சோக்கும் இல்லை.

அகதி8: பிரயாணம் செய்ய வாகனம் இல்லை.

அகதி1: இந்த இல்லையள் எல்லாம் ஏன் வந்ததெண்டு நீங்கள் யோசிக்க இல்லை.

அகதி2: ஏன் யோசிக்க இல்லை? எங்களுக்கு நல்லாத் தெரியும்

அகதி1: என்ன தெரியும்?

அகதி2: எங்கடை உரிமையளைப் பற்றி நாங்கள் யோசிச்சது தான் பிழை.

அகதி3: எங்கடை வீடுகளை அழிச்சு, எங்கடை உடைமையளை எரிச்சு, எங்கடை பயிர் பச்சையளை மிதிச்சு, நாயைப் போலை எங்களை எங்கடை வீடுகளை விட்டுக் கலைச்சுப் போட்டான்.

அகதி4: அப்பிடிச் செய்தாத்தான் நாங்கள் பயப்பிடுவம் எண்டு நினைச்சானாக்கும்.

அகதி5: எங்கடை தமிழ்ச் சகோதரங்களும் தங்களுக்கு இப்பிடி ஒரு நிலை வராது எண்டது மாதிரி நடந்து கொள்ளினம்.

அகதி6: சரி, சரி, அப்ப நீங்கள் இப்ப என்ன செய்யப் போறியள்?

அகதி7: எங்கடை வீடுகளுக்கு நாங்கள் திரும்பிப் போப்போறம்.

பாடகர்: லெப்ட்.. லெப்ட்..லெப்ட்.. றைற்.. லெப்ட்
(எல்லா நடிகரும் அணிவகுத்து வருவர்)

அகதி8: எல்லாத்துக்கும் பயந்து வெருண்டோடிற எங்கடை மக்களின்ரை மனநிலையை மாத்தப்போறம்.

அகதி1: எங்கடை வீடுகளிலை இருக்க எங்களுக்கு உரிமை இருக்கெண்டு திருப்பியும் அரசாங்கத்துக்குச் சொல்லப் போறம்.





பாடகர்: லெப்ட்... லெப்ட்..லெப்ட்.. றைற்.. லெப்ட்
(அணி குலைந்து நடிகர் அரைவட்ட நிலைக்கு மாறுவர்)

பிரசங்கியார்: பிள்ளையார் பெருமை பற்றிப் பேச வந்த நான் அகதிகளின் பெருமை பற்றிப் பேசி முடித்திருக்கிறன். எல்லாருக்கும் வணக்கம்

பாடகர்:
வாழியவே பல்லாண்டு காலம்
நாடகம் நடித்தவர்கள் வாழியவே
வாழியவே பல்லாண்டு காலம்
நாடகம் பார்த்தவர்கள் வாழியவே
வாழிய வாழிய வாழிய வாழிய
வாழிய வாழிய வாழிய வாழிய

(ஒலி வர வரக் குறைந்து தூரத்தில் ஒலிப்பது போலக் கேட்கும். நடிகர் சலூட் பண்ணியபடி மேடையை விட்டு வரிசையாக இறங்குவர்.)



# இருட்டுக்குள் சுருட்டி

**முதல் மேடையேற்றம்**

10.06.95 – தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபையின் 15 வது ஆண்டு விழா - இராமநாதன் கல்லூரி மண்டபம்.

நெறியாள்கை :- திருமதி. கோகிலா மகேந்திரன்





# இருட்டுக்குள் சுருட்டி

-1 மணி நேர நவீன நாடகம் -

[பெண்களைப் பல்வேறு நிலைகளில் ஆண்கள் அடக்கி வைத்திருப்பது போன்ற உறைநிலைகளில் நடிகர்கள் மேடையில் படிமங் கொள்வர். திரை திறந்திருக்கும்.]

**அறிவிப்பாளர் குரல்:-**

சோலைக் குயில்அவைக் காற்றுக் களம்,
"இருட்டுக்குள் சுருட்டி"
என்ற நாடகத்தைப் பணிவன்புடன் உங்கள் முன் படையல் செய்கிறது. இந் நாடகத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணாய் நடிக்கிறார் செல்வி வசந்தா கந்தசாமி,அவரது கணவராக வருகிறார் திரு சங்கரப்பிள்ளை கிருபானந்தன். அவரது தாயாக நடிக்கிறார் செல்வி மலர்ச்செல்வி கிருஷ்ணபிள்ளை. அவரது மாமாவாகத் திரு கனகசபை காராளசிங்கமும், மாமியாகத் திருமதி பகீரதி கணேசதுரையும், பாத்திர மேற்கின்றனர். அவரது சிநேகிதிகளின் பாத்திரங்களைச் செல்வி சிவசுகி குமாரசாமி, ரமணி ஸ்கந்தவரதன் ஆகியோர் ஏற்றுள்ளனர். பாடகர்களாகச் செல்வி ரஞ்சிதமலர் சம்பந்தர், திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை, செல்வி ஜெயவதனி நடராஜா, செல்வி சர்வாஜினி தட்சணாமூர்த்தி ஆகியோரும் உரைஞர்களாகத் திரு செல்லையா பரமேஸ்வரன், செல்வன் பிரவீணன் மகேந்திரராஜா, செல்வன் தீபன்

கணேசதுரை,செல்வன் அபயன் கணேசதுரை,
செல்வி ராஜ் ஜனார்த்தனி யுவராஜா, செல்வி
தயா ரஞ்சிதம் கதிரன், செல்வி தர்சிகா
சிவலிங்கம், செல்வி துளசி குமாரவேலு
ஆகியோரும் பங்கு கொள்கின்றனர்.

பின்னணி இசைக்கலைஞர்களாகச் செல்வன்
மதியழகன் நாகராஜா (ஹார்மோனியம்),
திரு. தம்பு தயாளீஸ்வரன்(கிற்றார்), செல்வன்
மதுரா கணேசன் கணேசதுரை(மிருதங்கம்)
ஆகியோர் மெருகூட்டுகின்றனர். இந்த
நாடகத்தில் வரும் கவிதைகளுக்குக் கவிஞர்
சோ.ப , கவிஞர் இ. முருகையன், பாரதியார்
ம.பிரவீணன் ஆகியோர் உரிமை
உடையவர்கள். நெறியாளர் என்ற வகையில்
இவர்கள் அனைவருக்கும் எனது உளங்
கனிந்த நன்றியைத் கூறி, நாடகத்தை
உங்கள் முன் சமர்ப்பணம் செய்கிறேன்.

அன்புடன் - கோகிலா மகேந்திரன்

கோரஸ்:- சிறு புழு கறையான்கள் செருப்பின் கீழ்
நசிவது போல்
அறிவுடை மனிதர் நாங்கள் அழிவோமா -
இந்த
அநீதியின் திமிரை நாங்கள் அழிப்போமா?
[இப் பாடல் இசைக்கப்படும் போது,
மேடையில் உறை நிலையில் நின்றோர்
அசைந்து ஆண் ஆதிக்கச் செயற்பாடுகளை
ஊமத்தில் நிகழ்த்துவர்]





உரைஞர் 1:- பெண்கள் உரிமை முழக்கம் பெரிதாய் -இம்
மண்ணகத்தின் மூலை முடுக்கெல்லாம்
கேட்கிறது.

உரைஞர் 2:- சென்ற காலத்தின் சிறுமைகளை ஒழித்து
நின்று நிமிர முனைந்தார் நம் நேரிழையார்.

உரைஞர் 3:- ஆயினும் தீயில் முழுகித் திருவிளக்காய்
மாறுகிற தாயர் தொகையே தமிழரிடை
மலிவு.

உரைஞர் 4:- இன்று துர்க்கையம்மன் கோயில் தேர்
அல்லவா? வாருங்கள் அங்கு போவோம்.
[கோரஸ் பாடலைப் பாட அனைவரும் தேர்
இழுத்து வருவதான ஊமம் செய்வர். சிலர்
பஜனை செய்வர். சிலர் ஆடுவர். சிலர் காவடி
எடுப்பர். சிலர் கரகம் ஆடுவர். தேர் இருப்புக்கு
வருவதாக ஊமம் முடிவடையும்]

கோரஸ்:- எங்கள் ஆலயங்கள் மீதில் ஏறுதே தீ,தீ
கண்கள் செய்த பாவம் இந்தக் காட்சி
காண்பதே
மண்டபம், மடங்கள், கோயில் மணிகள்
சாயவோ - எங்கள்
பெண்டு, பிள்ளை குட்டி மேலும் குண்டு
போடவோ?
தேரின் மீது தீக்கொழுந்து தாவுகின்றதே-
எங்கள்
ஊரின் மீதும் உடலின் மீதும் ஊருகின்றதே
மூன்று வேளை உன்னைத் தீண்டிப் பூஜை
செய்தவன்
மாய்ந்து மாண்டு கோயில்வீதி யிற்
கிடப்பதோ?

முன்னர் அன்னை கோயில் மீது தீயை
மூட்டினார் - செல்வச்
சந்நிதித் தேர் அந்நியர் பின் எரித்துக்
காட்டினார்
ஆண்டவன் தம் பெருமை குண்டர்
அறியக்கூடுமோ - முன்பு
பாண்டியன் வெப்பாலே பட்ட பாட்டைச்
சொல்லவோ?

**வசந்தா:-** (இருப்புக்கு வந்து விட்ட தேரில் உள்ள சுவாமியை வணங்கி ......)
இறைவா, எதிரில் இல்லாத உன்னிடம் பேசுவதில் எனக்கு ஒரு திருப்தி. நான் உச்சியில் இருக்கும் போது நீ பள்ளத்தில் இருக்கிறாய். நான் பள்ளத்தில் கிடக்கும் போது நீ உச்சிக்கு வந்து விடுகிறாய். இருவரும் சந்திப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

**கணவர்:-** என்னப்பா உங்கை நிண்டு முணுமுணுக்கிறீர்? தேரும் இருப்புக்கு வந்திட்டுது. வாருமன் இனிப் போவம் வீட்டை......
(ஏனைய நடிகர்கள் கோயில் தொண்டுகளில் ஈடுபடுவதான ஊமம்)

**வசந்தா:-** நான் கொஞ்ச நேரம் நிண்டு இந்தக் கோயில் வீதியைக் கூட்டப்போறன். அப்படிச் செய்தால் எனக்கு மனம் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கும் போல இருக்கு

**கணவர்:-** (சற்றுக் குரலை உயர்த்தி) விசரே உமக்கு? வீட்டிலை வளவு கூட்ட ஆளில்லை. இஞ்சை நிண்டு ஷோக் காட்டப் போறீரோ? இந்தப்





பட்டுச் சீலையோடை இஞ்சை நிண்டு கூட்டினால், என்னைச் சனங்கள் எத்தினை கேள்வி கேட்கும்? நான் தலை நிமிந்து போறேல்லையே றோட்டிலை?

**மாமி:-** தம்பி, மருமேள் என்னவாம்?

**கணவன்:-** இஞ்சை நிண்டு கோயில் கூட்டப் போறாவாம்.

**மாமி:-** தட்டித்தான் போட்டுது. கலியாணம் செய்து ஒரு வருஷம் கூட ஆகேல்லை. கிழடு கட்டை செய்யிற வேலை செயயப் போறாவாமோ? உவக்கு என்ன குறையாம் வைச்சனாங்கள் வீட்டிலை?

**மாமா:-** கச்சான் வாங்கிக் கொண்டு வாங்கோ வீட்டை போவம்.
(வசந்தா மனமின்றிப் பின் தொடர்கிறாள். இடையிடை நின்று நின்று யோசிக்கிறாள்)

**கோரஸ்:-** சிறு புழு கறையான்கள் செருப்பின் கீழ்
நசிவது போல்
அறிவுடை மனிதர் நாங்கள் அழிவோமா
இந்த
அநீதியின் திமிரை நாங்கள் அழிப்போமா?
பொறுமைக்கும் வரம்பு உண்டு
போட்டிக்கும் எல்லை உண்டு
அறம் ஒன்றும் நீதி ஒன்றும் உண்டையா -
இந்த
அரும்பொருள் பற்றி நீயும் அறிவாயா?

**உரை 1:-** வீடென்று அடுப்பங்கரையென்று
வேளையெலாம் மாடாய் உழைத்து மகப்
பேற்றுயந்திரமாய் மாயும் மகளிர் வருக எழுக
எனக் கூவி அழைத்தான் ஓர் கோமான்,
தமிழ்க் கவிஞன்! அவன் இன்று இல்லையே!!
(காட்சி மாறுகிறது. நடிகர்கள் அசைந்து
வசந்தாவின் வீட்டை அமைக்கின்றார்கள்.)

**அம்மா:-** (குசினியில் சமையல் செய்யும் ஊமத்தில்
இருந்து)
பிள்ளை, இண்டைக்கு உன்னைப் பாக்க
வரீனமெல்லே பின்னேரம். கெதியா வா
வீட்டை என்ன?

**வசந்தா:-** அம்மா, என்னம்மா நீங்கள்? இண்டைக்குப்
பிள்ளையளுக்குத் தமிழ்த்தினப் போட்டிக்கு
நாடகம் பழக்க வேணும். பிந்தித்தான்
வருவன்.
(பாடசாலைக்கு வெளிக்கிடும் ஊமத்தில்
இருந்து பேசுவாள்.)

**அம்மா:-** (குசினியிலிருந்து வெளியே வந்து)
அப்ப, அவை வந்து இஞ்சையென்ன என்னையே
பாக்கிறது? இனிமேல் உதுகளைக் கொஞ்சம்
குறைக்க வேணும் பிள்ளை. நாளைக்கு நிண்டு
பழக்கலாம். இண்டைக்கு வெள்ளெண வா, என்ன
சரியே?

**சிநேகிதி:-** (வீட்டிற்கு வெளியே நின்று)
வசந்தா, வசந்தா வெளிக்கிட்டீரோ?

**வசந்தா:-** ஓமடி... ஒரு நிமிஷம் நில் வாறன்.
(வெளியே வந்து இருவரும் றோட்டில்
சைக்கிளில் செல்வதான ஊமம்)



**வசந்தா:-** இண்டைக்கு ஆரோ என்னைப் பாக்க
வரீனமாம். அதுதான் அம்மா, பின்னேரம்
என்னைக் கெதியாய் வரட்டாம்.

**சிநேகிதி:-** அப்பிடியே சங்கதி..... கொங்கிறாற்ஸ்..... நல்ல
சாப்பாடாப் போடு என்ன?

**வசந்தா:-** சும்மா போடி... சத்தம் போடாமல் வா,
அங்கை பள்ளிக்கூடத்திலை வந்து ஒண்டும்
அவிட்டு விடாதை சரியே?

**கோரஸ்:-** சிறு புழு கறையான்கள்
செருப்பின் கீழ் நசிவது போல
அறிவுடை மனிதர் நாங்கள் அழிவோமா
இந்த
அநீதியின் திமிரை நாங்கள்
அழிப்போமா?
பொறுமைக்கும் வரம்பு உண்டு
போட்டிக்கும் எல்லை உண்டு
அறம் என்றும் நீதி என்றும் உண்டையா -
இந்த
அரும்பொருள் பற்றி நீயும் அறிவாயா?
இருட்டுக்குள் சுருட்டி வைத்தாய்
எங்களை நொருக்கி வைத்தாய்
கருத்துக்கு மூடி போட்டு வைத்து நீ - ஒரு
கண்கட்டு வித்தை காட்டி வைத்தாயே.

**உரை 1:-** அடிமை வாழ்வதனை வேரோடகழ்ந்தெடுத்து
எறிந்து நாடு விடுதலை காண வெம்போர்
புரிகின்ற வீரர் ஓர் பால்

**உரை 2:-** உடுதுணி உணவு வீடென்றனைத்தையும்
இழந்தோர் ஓர்பால்.

உரை 3:- நடுவில் மண்ணைவிட்டு நழுவுவோர் ஓர்பால்.

உரை 4:- சோர்வோ தலையிடியோ துளியும் அணுகாத
பாவை என்று பெண்ணைப் பார்ப்போர்
ஓர்பால் என்பீர்...
(மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள்)

அம்மா:- ((முன்னே ஓடி வந்து மிகுந்த உற்சாகத்துடன்)
வாருங்கோ... வாருங்கோ.... வாருங்கோ..
இருங்கோ.. இருங்கோ.... இருங்கோ...பிள்ளை
கதிரை போடு, பிள்ளை பாய் போடு
பிள்ளை.... இதிலை .... இதிலை.... ஆ.... சரி....
சரி.... இருங்கோ..... நுககிறியள்......
(மாப்பிள்ளை வீட்டார் அமர்கின்றனர். பெண்
வீட்டார் நிற்கின்றனர். தோழி ஒருத்தி
வசந்தாவை அழைத்து வருகிறாள்.)

அம்மா:- பிள்ளை மாமாவின்ரை காலைத் தொட்டுக்
கும்பிடு பிள்ளை.
(வசந்தா சற்றுத் தயக்கத்துடன்
கும்பிடுகிறாள்)

மாமி:- பிள்ளை ரீச்சர் எண்டு எங்களுக்குத் தெரியும்.
சங்கீதமும் படிச்சவ வாக்கும்.

அம்மா:- ஓ...ஓ.. அவ பரதம், நாடகம் எல்லாம்
படிச்சவ...

மாமா:- எங்களுக்கு வாற மருமேள் கலைகள்
எல்லாம் தெரிஞ்ச சரஸ்வதியா
இருக்கோணும் எண்டுதான் எங்களுக்கு
விருப்பம்.

கணவன்:- அப்பதான் அவ வீட்டுக்கு நல்ல லட்சுமியாய்
இருப்பா.





மாமா:- தமபிக்கு நல்ல கலை ஈடுபாடு....

மாமி:- ஓ..ஓ....ஓ...
அது சரி சீதனம் அதுகள் என்ன மாதிரி?

அம்மா:- பிள்ளைக்கு இருக்கிறதுகளைத் தருவம்
தானே?

மாமா:- ஓ.... உங்களுக்கும் ஒரு பிள்ளை. பிரச்சினை
இல்லை எண்டு கேள்விப்பட்டுத்தான்
நாங்களும் வந்தனாங்கள். எங்கை பிள்ளை
ஒரு பாட்டுப்படி பாப்பம்.

மாமி:- இல்லைப் பாருங்கோ பிள்ளை ஒரு டான்ஸ்
ஆடட்டும் பாப்பம்.
(கோரஸ் பாட வசந்தா பதம் பிடித்து
ஆடுகிறாள்)

கோரஸ்:- தாயே யசோதா உந்தன் ஆயர்குலத்துதித்த
மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும்
ஜாலத்தைக் கேளாய் - தாயே (3 முறை)
தையலே கேளடி உந்தன் பையனைப்
போலவே இந்த
வையகத்தில் ஒரு பிள்ளை அம்மம்மா நான்
கண்டதில்லை. (2 முறை)

மாமா:- ஆட்டம் நல்லாத்தான் இருக்கு என்னதம்பி?

கணவர்:- நல்..ல்..லா இருக்கப்பா
(வாயில் எச்சில் ஊறுதல்)

**மாமா:-** ஆனால்... இனிமேல் கலியாணம் முடிச்சால் தம்பிக்கு வேணுமெண்டால் ஆடிக்காட்டலாம். மேடையிலை ஏறி ஆடப்பிடாது. என்ன பாருங்கோ... விளங்குதே.

**கணவன்:-** ஓ, பிறகு வேறை ஆம்பிளையள் பாக்கத்தக்கதா மேடையிலை ஏறிப் பாடுறது, ஆடுறது, பேசிறதை விட்டிட வேணும். அதுகளை இப்பவே வரையறையாக் கதைக்கிறது நல்லது.
(வசந்தாவின் முகம் திடீதென்று மாறுகிறது. பொட்டொளி வசந்தாவின் முகத்தைக் குறி வைக்கிறது)
(எல்லோரும் அப்படியே உறையக் கோரஸ் பாடுகிறது)

**கோரஸ்:-**
சிறு புழு கறையான்கள்
செருப்பின் கீழ் நசிவது போல
அறிவுடை மனிதர் நாங்கள் அழிவோமா -
இந்த
அநீதியின் திமிரை நாங்கள் அழிப்போமா?
பொறுமைக்கும் வரம்பு உண்டு
போட்டிக்கும் எல்லை உண்டு
அறம் என்றும் நீதி என்றும் உண்டையா -
இந்த
அரும்பொருள் பற்றி நீயும் அறிவாயா?
இருட்டுக்குள் சுருட்டி வைத்தாய்
எங்களை நொருக்கி வைத்தாய்
கருத்துக்கு மூடி போட்டு வைத்து நீ - ஒரு
கண்கட்டு வித்தை காட்டி
வைத்தாயே.
உனக்குப் போல் கழுத்துக் கால் கை
உனக்குப் போல் மூக்கு மூளை





உனக்குப் போல் வயிறு எமக்கும்
உண்டையா - இந்த
உண்மையை நன்றாய் நீயும்
உணரையா.....

(நாடகத்தினூடு கருப்பாடல் படிப்படியாக வளர்ந்து வரும் போது, பின் மேடையில் காட்சிப் பொருள் ஒன்றும் வளர்ந்து வரலாம்)

(திருமணம் முடிந்த பிறகான காட்சி ஒன்று ஊமத்தில் நகர்கிறது. வசந்தா வீட்டின் நிலைக் கண்ணாடி முன் நின்று தானே ஆடிப் பார்த்துத் தானே இரசித்துக் கொள்கிறாள். கணவன் பூச் சாடியில் கிளை ஒட்டு வேலை செய்து கொண்டிருக்கிறான். உரைஞர்கள் உரைக்கிறார்கள்)

**உரை 1:-** அற்புத ஓவியம் தீட்டியதார்?

**உரை 2:-** அதை அடுப்படிக் கறைபட மாட்டியதார்?

**உரை 3:-** அதை அடுப்படிச் சுவரினில் மாட்டியதார்?

**உரை 4:-** சித்திர கூடத்தில் ஆயிரம் பேர்.

**உரை 5:-** இதைத் திரும்பியும் பார்த்தவர் எவருமில்லை.

**வசந்தா:-** நேற்றைக்கு விழுந்த ஷெல்லிலை எங்கடை மாலதி எல்லே செத்துப் போனாவாம். எனக்கு ஏதோ விசராக் கிடக்கு. அவளை மறக்கவும் முடியேல்லை. நினைக்கவும் முடியேல்லை.

**கணவன்:-** ம்.................ம்...........(மனமின்றி)

**வசந்தா:-** பின்னேரத்திலை நாடகம் அப்பிடி இப்பிடி ஏதும் செய்யப் போனாலாவது மனம் கொஞ்சம் ஆறுதல் படும் போலை கிடக்கு

**கணவன்:-** ம்..... (அக்கறையின்றி)

**வசந்தா:-** என்னப்பா நான் கேக்கிறேன் நீங்கள் ம்...ம்.. எண்டால்?

**கணவன்:-** சும்மா விசர்க் கதை கதைக்காதையும் சொல்லிப்போட்டன். எத்தினை தாய்மார் பவுண்போலை பதினேழு வயதுப் பிள்ளையளைப் பலி குடுத்திட்டு இருக்கினம். போர்க் காலம் எண்டால் அப்பிடித்தான் இருக்கும். ஒண்டும் செய்ய ஏலாது.

**வசந்தா:-** இல்லையப்பா..... மாலதி....

**கணவன்:-** இவதான் ஓராள் பெரிய இழப்பைக் கண்டிட்டா, கண்டறியாத இழப்பு! மாலதி செத்திட்டா... ஓம் இப்ப அதுக்கு என்ன செய்யிறது? நீர் என்ன உடன் கட்டை ஏறப் போறீரே?

**வசந்தா:-** நான் ஒருக்கா மாலதி வீட்டை போட்டு......

**கணவன்:-** சும்மா கதைக்க எனக்கு நேரமில்லை. அதெல்லாம் செத்த வீடு நேற்று முடிஞ்சுது. இனிப் போய் என்ன அவ எழும்பியே வரப்போறா? நான் இந்தச் செவ்வரத்தையளை இண்டைக்கு எப்பிடியும் ஒட்டி முடிக்க வேணும். தேவையில்லாத ஊர்





உலாத்தை விட்டிட்டு இரவுச் சமையலை முடியும் கெதியா. பிறகு மண்ணெண்ணையும் இல்லை.
(காட்சி மாறுகிறது. வசந்தா எதோ தைத்துக் கொண்டிருக்கிறாள். வெளியே கதவு தட்டப்படும் ஓசை)

**சிநேகிதி:-** வசந்தா! வசந்தா!!

**வசந்தா:-** ஆர் அது? ரஞ்சியே வா...வா ஆர்........ வருவினம் கதைக்க எண்டு பாத்துக் கொண்டிருந்தனான். வா வந்து இரு. என்ன களைச்சுப் போய் வாறியே? தேத்தண்ணி தரட்டே?

**ரஞ்சி:-** இல்லை. இல்லை இரு கதைப்பம். என்ன முகமெல்லாம் ஒரு மாதிரிக் கிடக்கு?

**வசந்தா:-** (வசந்தா ரஞ்சியின் கையைப் பிடித்து) எங்கடை மாலதி எல்லே செத்திட்டாள். தெரியுமே உனக்கு?

**ரஞ்சி:-** ஷெல்லடியாம் என்ன?

**வசந்தா:-** ஓம் எல்லாத்தையும் யோசிச்சா என்னாலை தாங்க ஏலாமல் கிடக்கு. ஆருக்கும் சொல்லி அழவேணும் போலை கிடக்கு. இரன் கதைப்பம். அவசரமே?

**ரஞ்சி:-** நான் இருக்கிறன். என்னடி கலியாணம் முடிச்சு ஒரு வருஷம் கூட ஆகேல்லை. நான் இன்ரறெஸ்ரிங்காய் ஏதும் சொல்லுவாய் எண்டு வந்தால்... ஒரெ ஃபிறஸ்(Frus) கதையள் கதைக்கிறாய்.

**வசந்தா:-** ரஞ்சி... உனக்குத் தெரியுந்தானே. நான் முந்தி எத்தினை மேடையிலை ஆடின்னான். எத்தினை பாட்டுப் படிச்சனான். எத்தினை நாடகம் நடிச்சனான். உன்னோடை முதலுதவி அது இது எண்டெல்லாம் திரிஞ்சனான். அதெல்லாம் எனக்கு ஒரு பெரிய நிறைவாய் இருந்தது. நான் சமூகத்துக்கு ஏதோ செய்யிறன். சமூகம் என்னை மதிக்குது எண்டு ஒரு திருப்தி இருந்தது. என்னைப் பொம்பிளை பாக்க வரேக்கை, பாடுவியோ, ஆடுவியோ, நடிப்பியோ எண்டெல்லாம் கேட்டினம். இப்ப ஒண்டும் செய்ய வேண்டாமாம். அடுப்படியிலை இருந்து சுத்திச் சுத்தி ஊதி... எனக்குத் தலையெல்லாம் விறைக்குது.

**உரை 1:-** இதைத்தான் சொமரைசேஷன் (Somatization) என்று உளவியலாளர் சொல்வர்.

**மாமி:-** (உள்ளிருந்து) பிள்ளை...ஆர் வந்திருக்கிறது?

**வசந்தா:-** அது எங்கடை ரஞ்சிதான் அத்தை.

**மாமி:-** ஆ...ஆ அவவோடை வெளிக்கிட்டு எங்கையும் ஊர் சுத்தப் போயிடாதை, கெதியாக் கதைச்சிட்டு வா. தோசை சுடோணும். என்னாலை ஒண்டும் ஏலெல்லை. (குரலில் கடுமை)

**வசந்தா:-** (மௌனம்)

**மாமி:-** (இன்னும் உரத்து) தம்பி வரேக்கை தோசை சுடச்சுட இருக்கோணும். இல்லாட்டி அவனுக்குப் பிடியாது... என்ன கேக்குதோ?



**வசந்தா:-** பிரன். உன்னோடை இருந்து கதைக்கவும் முடியாமல் கிடக்கு. நீ இப்ப எங்கை போறாய்?

**ரஞ்சி:-** நான் மாதர் சங்கக் கூட்டத்துக்குத்தான் போறன். முதலுதவி வகுப்பு எடுக்கப் போறன். போர்க்காலத்திலை தச்சேலா, வீட்டிலை ஓராளுக்குக் காயம் வந்தா உடனை என்ன செய்யிறது எண்டு பொம்பிளையளுக்குத் தெரிஞ்சிருக்க வேணும். அப்ப... நான் போயிட்டுப் பிறகொரு நாள் வாறன். சரியே?
(ரஞ்சி போக... வசந்தா அப்பிடியே உறைகிறாள். கோரஸ் பாடுகிறது)

**கோரஸ்:-** என்க்குத் தான் வலிமை முற்றும் என்று நீ சொல்லலாமோ?
சினத்தை ஓர் மதம் போலாக்கி ஆணையா நீயும்
சிக்கிப் போய்த் திணறலாமோ ஆணையா!

**உரை 1:-** உரிமைகள் எல்லாம் ஏட்டளவில் - ஏழைப் பெண் இருப்பதுவோ வீட்டறையில்!
(மாதர் சங்கக் கூட்டத்தில் ரஞ்சி முதலுதவி வகுப்பு எடுக்கும் ஊமம். அதனைப் பார்த்து வீதியால் போகும் இளைஞர் சிலர் விமர்சனம் செய்யும் ஊமம்)

**இளைஞர் 1:-** உங்கை பாற்றா.... டோய்.... உந்தப் பெண்டுகளுக்கு ஒரு தொழிலும் இல்லை. உதிலை கூடி இருந்து கதைக்கினம் பார்.

**இளைஞர் 2:-** உவைக்கு வீட்டிலை இருக்கிற ஆம்பிளையள் சரியில்லை.

**இளைஞர் 3:-** நான் எண்டாத் தலையடி அடிச்சு இருத்தியிருப்பன் வீட்டிலை.

**இளைஞர் 1:-** ஒவ்வொரு சீலையளும் சுத்திக் கொண்டு வெளிக்கிட்டிடுவினம் சமூக சேவை எண்டு. உவை இல்லாட்டிச் சமூகம் முழுவதும் அழிஞ்சு போம் எண்ட மாதிரி!

**ரஞ்சி:-** தம்பியவை எங்கடை அலுவல் எங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்கடை அலுவலைப் பார்த்துக் கொண்டு போங்கோ....
(தம்பியவை றோட்டிலை சைக்கிளில் போவதான ஊமம். போகும் போது அவர்களில் ஒருவருக்கு றவுண்ட்ஸ் படுகிறது. அவர் "ஐயோ" என அலறிக் கொண்டு நிலத்தில் சரிகிறார்.)

**இளைஞர் 2:-** டேய்.. என்னடா... டேய் என்னடா றவுண்ட்ஸ் பட்டிட்டுதே?
ஐயோ... ஐயோ... ரத்தம்....... ரத்தம்....
(உள்ளே வகுப்பில் இருந்த பெண் தொண்டர்கள் ஓடி வந்து முதலுதவி செய்து உதவுகிறார்கள்)

**இளைஞர் 3:-** அக்கா, நாங்கள் தெரியாமல் உங்களைப் பற்றி ஏதோ எல்லாம் சொல்லிப் போட்டம். வடிவாக் கட்டி விடுங்கோ அக்கா....
(பெண்கள் இளைஞனைக் காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் ஊமம்)

**கோரஸ்:-**
திமிரினால் நம்மேல் ஏறிச்
செய்யலாம் சவாரி என்ற
நினைவை நீ விடுதல் வேண்டும் ஆணையா - நாங்கள்
நெருப்பாகி எழுந்திடுவோம் ஆணையா.





**உரை 1:-** என் முதுகில், என்தாய் முதுகில் அதன் முன்னர் என் பாட்டி முதுகில் எல்லாம் ஏறி நின்ற கூட்டம் சொன்னதையும் செய்ததையும் இனி ஒப்புக் கொள்ளேன்.

**உரை 2:-** துயில் எழுந்தேன் விடுதலைப் பூபாள இசைகேட்டு.
(காட்சி மாறுகிறது. வீடு அமைகிறது. வசந்தாவின் கணவன் முற்றத்தில் கோபத்துடன் உலாவுகிறான். வசந்தா படலை திறந்து உள்ளே வருகிறாள்)

**கணவன்:-** இப்ப எத்தினை மணி கேக்கிறன்?

**வசந்தா:-** ஏன் ஆறரை?

**கணவன்:-** இருண்டாப்பிறகு ஒரு குடும்பப் பொம்பிளைக்கு வீட்டுக்கு வெளிலை என்ன அலுவல் கேக்கிறன்?

**மாமா:-** அத்தையைப் பாத்தாலும் திருந்துவாய் எண்டு பாத்தன். பார் அவவை.. இந்த வயதிலையும் என்ன மாதிரி என்னைக் கவனிக்கிறா. நீ என்ன பிள்ளை.. அவன் சாப்பிட்டானோ, தண்ணி குடிச்சானோ எண்டு ஒரு சிந்தனையும் இல்லாமல் எங்கையோ நிண்டிட்டு இப்ப வாறாய்?

**மாமி:-** எங்களுக்கு அந்தக் காலத்திலை வாத்தியார் கண்ணகி கதையும் நளாயினி கதையும் படிப்பிச்சவர். ஒரு பொம்பிளை எப்பிடி இருக்க வேணும் எண்டும் படிப்பிச்சவர். நாங்கள் இண்டை வரைக்கும் அந்த மாதிரித்தான் நடக்கிறம். பிள்ளை.. உன்ரை மாமா பேசினால் என்ன, அடிச்சால்தான் என்ன, நான் திருப்பி ஒரு கதை கதைச்சது கண்டனியே? கல்லெண்டாலும் கணவன்,

புல்லெண்டாலும் புருஷன் எண்டு ஒரு கட்டுமானமா வாழிறம். அதாலை தான் குடும்பம் இவ்வளவு சிறப்பா இருக்கு.. நீ என்ன பிள்ளை?

**வசந்தா:-** அத்தை நான் இவ்வளவு நேரமாத் தண்ணி வென்னி குடிச்சனானோ எண்டு யாரும் யோசிச்சனீங்களோ?

**கணவன்-** நேரங்கெட்ட நேரத்திலை வீட்டை வாறது மாத்திரமில்லை பிறகு உமக்கு ·'.பிளாஸ்க்கிலை தேத்தண்ணியும் அனுப்பிறதோ பின்னை?

**வசந்தா:-** நான் சும்மா றோட்டுச் சுத்திப்போட்டு வரேல்லை. ஷெல் விழுந்து, பொம்பர் அடிச்சுக் காயப்பட்டு ஆஸ்பத்திரிலை இருக்கிற பொம்பிளையளைப் பாத்து ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லிப் போட்டு வாறன்..

**மாமா:-** இவ பெரிய கடவுள்.. துன்பப்பட்டவேன்ரை, துயரமெல்லாம் துடைக்கப்போறா..(நக்கலாகச் சிரிக்கிறார்)

**மாமி:-** (மேலும் முகத்தையும் உடலையும் நெழித்து) அன்னை திரேசாதான்.. கட்டின புருஷனுக்கு ஒரு தேத்தண்ணி வைச்சுக் குடுக்க நேரமில்லாமல் ஊரிலை உள்ள எல்லாருக்கும் ஆறுதல் சொல்லி நீ என்ன கிழிக்கப் போறாய் எண்டு எனக்கு உண்ணாணை விளங்கேல்லை.



**வசந்தா:-** அத்தை, அவரை நான் கவனிக்கத்தான் வேணும். இல்லை எண்டு சொல்லேல்லை. அவரும் என்னைக் கவனிக்கோணும். அதோடை அவர் உடலாலையும். உள்ளத்தாலையும் ஆரோக்கியமா இருக்கிறார். நீங்கள் வேறை இருக்கிறியள். இப்பிடி எல்லாருமே சின்னச் சின்ன வட்டத்துக்கை யோசிச்சால்...?

**கணவன்:-** சின்ன வட்டமும் பெரிய வட்டமும்! மூடு வாயை. நீ நடு றோட்டிலை ஆரோடை கதைச்சுக் கொண்டு நிண்டனி எண்டு நான் கேள்விப்பட்டனான்..

**மாமி:-** (திகைத்து அருகில் ஓடி வந்து) என்ன தம்பி என்ன இழவு இது? எங்கடை குடியிலையே இல்லாத பழக்கம்?

**வசந்தா:-** அது எங்கடை பள்ளிக்கூட மியூசிக் மாஸ்டர். நாடகப் பிரதி ஒண்டு கேட்டவர் குடுத்திட்டு வந்தனான். அதையும் அதுக்கிடையிலை ஆரோ இஞ்சை வந்து சொல்லிப் போட்டினம். றோட்டிலை என்ன கண்ணை மூடிக் கொண்டே போறது? ஒரு மனுசரோடை கதைக்கவும் சுதந்திரமில்லை.. (அழுகிறாள்)

**மாமா:-** பிள்ளை வாய் நீளம் பொம்பிளையளுக்குக் கூடாது. தம்பீ.. நீதான் திருத்த வேணும்..

**கணவன்:-** பொத்தடி வாயை.. மாமா, அத்தை, புருஷன் எண்டு ஒரு மதிப்பு மரியாதையும் இல்லை. எதிர்த்து வாய் காட்டிக் கொண்டு நிக்கிறாய்.

போ உள்ளுக்கு.. (காலால் உதைந்து உள்ளே தள்ளுகிறான். வசந்தா மடாரென்று கீழே விழுகிறாள். அனைவரும் உறை நிலையில்)

**கோரஸ்:-**

சிறு புழு கறையான்கள்
செருப்பின் கீழ் நசிவது போல
அறிவுடை மனிதர் நாங்கள் அழிவோமா -
இந்த
அநீதியின் திமிரை நாங்கள்
அழிப்போமா?
பொறுமைக்கும் வரம்பு உண்டு
போட்டிக்கும் எல்லை உண்டு
அறம் என்றும் நீதி என்றும் உண்டையா -
இந்த
அரும்பொருள் பற்றி நீயும் அறிவாயா?
இருட்டுக்குள் சுருட்டி வைத்தாய்
எங்களை நொருக்கி வைத்தாய்
கருத்துக்கு மூடி போட்டு வைத்து நீ – ஒரு
கண்கட்டு வித்தை காட்டி
வைத்தாயே.
உனக்குப் போல் கழுத்துக் கால் கை
உனக்குப் போல் மூக்கு மூளை
உனக்குப் போல் வயிறு எமக்கும்
உண்டையா - இந்த
உண்மையை நன்றாய் நீயும்
உணரையா.....
எனக்குத் தான் வலிமை முற்றும்
என்று நீ சொல்ல லாமோ
சினத்தை ஓர் மதம் போல் ஆக்கி,
ஆணையா நீயும்





சிக்கிப் போய்த் திணறலாமோ
ஆணையா.
திமிரினால் நம்மேல் ஏறிச்
செய்யலாம் சவாரி என்ற
நினைவை நீ விடுதல் வேண்டும் ஆணையா
– நாங்கள்
நெருப்பாகி எழுந்திடுவோம்
ஆணையா.

(பாடல் போய்க் கொண்டிருக்கும் போது நடிகர் மிக மெதுவாய் அசைந்து புதியதோர் கோலம் அமைப்பர். பாடல் முடியும் போது அந்தக் கோலத்தில் இருந்தே வணக்கம் செய்வர். மிக மெதுவாக நாற்புறமும் நடந்து மேடையை விட்டுச் செல்வர்.)



# பெண்ணின் எதிரி

(30 நிமிட வானொலி நாடகம்)

காட்சி 1:-

பாத்திரங்கள்:- சந்திரன், பூரணி, பட்டிமன்ற நடுவர்.

(கைதட்டும் ஒலி)

**சந்திரன்:-** (மேடைப் பேச்சாக)
விண்வெளியில் சாதனை புரிந்தாள் 'வெலண்டினா' என்கிறார்கள். பெரிய பெரிய நாடுகளைக் கட்டி ஆளுகிறாள் பெண் என்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பங்கள் பெண்களுக்கு ஆண்களால் வழிகாட்டப்பட்டதால் தானே அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். விண்வெளிப் பயணங்களைப் பெண்கள் மேற்கொள்ளக் கூடாதென்றோ, அல்லது அரசியலில் பெண்கள் ஈடுபடக்கூடாதென்றோ நாங்கள் சட்டம் போட அதை மீறிக்கொண்டு இவர்கள் புறப்பட்டார்களா? மிகப் பிற்போக்கான கிராமங்களிலே கூட இன்று வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் நிலை இல்லை. பெண்கள் வேலைக்குப் போவது எமது கிராமங்களில் மிகச் சாதாரணம். விதவைகள் கூடப் பூவும் பொட்டும் அணிந்து அழகான சேலைகளுடன் ஏனைய பெண்களைப் போலவே வேற்றுமை இன்றி உலாவுகின்றார்கள். யார் கேட்டார்கள்? இவ்வாறான யுகத்திலே பெண்களுக்குச் சமவுரிமை வழங்கப்படவில்லை என்று மேடையேறிப் பேச வந்த இந்தப் பெண்களைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பொலி)
எனது கட்சி நண்பர்கள் அனைவரும் பேசியதை மீண்டும் மனதில் எடுத்துப் பார்க்கும் படியும், பெண்கள் இன்று ஆண்களுடன் சரிநிகர் சமனாக





வாழ்கிறார்கள் என்பதை எவ்வித மறுத்தலுமின்றி ஏற்றுக்கொள்ளும்படியும் பட்டிமன்ற நடுவர் அவர்களையும் அவையினரையும் கேட்டு அமைகிறேன். வணக்கம் (கைதட்டும் ஒலி)

**நடுவர்:-** தன்னுடைய கட்சியை மிகத் தெளிவாயும் விளக்கமாயும் காட்டினார் சந்திரன் அவர்கள், இறுதியாகப் பெண்களுக்குச் சமவுரிமை இன்னும் வழங்கப்படவில்லை என்ற கட்சிக்காக வாதிடுகிறார் அதன் தலைவி செல்வி எஸ். பூரணி அவர்கள். அவரது கருத்துக்களைக் கேட்போம்.

**பூரணி:-** பட்டி மன்ற நடுவர் அவர்களே பெண்களுக்குச் சம உரிமை வாயளவில் வழங்கிவிட்ட எதிர்க் கட்சி நண்பர்களே, அன்பர்களே அனைவருக்கும் வணக்கம்.

இங்கு பேசிய நண்பர்கள் அனைவரும் பெண்களுக்குச் சம உரிமை ஏற்கனவே வழங்கப்பட்டதாய்க் கூறினர். நான் இவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்பேன். இவர்களது வீட்டில் அம்மா அப்பாவை 'நீங்கள்' என்று மரியாதைப் பன்மையில் அழைக்கிறார். ஆனால் அப்பா அம்மாவுடன் எப்படிக் கதைக்கிறார்? தைரியம் இருந்தால் இவர்கள் நேர்மையாய்ப் பதில் சொல்லட்டும். பெரும் பாலான வீடுகளில் 'நீ' என்ற ஒருமை. சில இடங்களில் 'எடி பிடி' களும் உண்டு. மிக அருமையாக, படித்த இடங்களில் கணவர் தன் 'படித்த' மனைவியை 'நீர்' என்கிறார். அதுவும் தனிமையில் 'நீ' ஆகி விடும். ஆனால் நீங்கள் என்ற சம உரிமை எந்தக் குடும்பத்திலும் இல்லை. ஒரு வேளை

பிறருக்கு முன்னால் இருந்தாலும் தனிமையில் நிச்சயமாக இல்லை. (கைதட்டும் ஒலி)

அடுத்த 'பொயின்ற்' வீட்டுச் செலவுக்கு உழைப்பதிலே சம உரிமை கொடுத்திருக்கிறார்கள். உண்மை தான். இன்று பல வீடுகளில் பெண்கள் வேலைக்குப் போவதைப் பார்க்கிறோம். ஆனால் ' இவளும் வேலைக்குப் போகிறாள் பாவம்' என்று எத்தனை வீடுகளில் அவளது உடைகளை ஒருநாளாவது அவன் துவைத்துக் கொடுத்திருக்கிறான்? எத்தனை வீடுகளில் அவளின் வீட்டு வேலைச் சுமையை ஆண்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்? எத்தனை வீடுகளில் ஆண் சமையலுக்கு உதவுகிறான்? வேலை முடிந்து வந்து அவன் பேப்பர் பார்க்கிறான். அல்லது 'ஈசி சேயரில்' சாய்ந்து கொள்கிறான். அவள் மீண்டும் இயந்திரமாகிறாள். (பேச்சின் ஒலி படிப்படியாகக் குறைந்து மறைகிறது.)

(இசை)

காட்சி 2:-

பாத்திரங்கள்:- சந்திரன், பூரணி, கன்ரீன் பையன்.
(பாடசாலை மணி அடிக்கும் சத்தம்)

**சந்திரன்:-** என்ன ரீச்சர், இப்ப உங்களுக்கு '.'.பிறீ பீரியேட் ' தானே?

பூரணி:- ம்.. ம்.. இப்ப எனக்கு .'.பிறீதான். அது சரி, என்ன இண்டைக்குப் புதிசா 'ரீச்சர்' எண்டு மரியாதையா ஒரு அழைப்பு?





**சந்திரன்:-** பட்டி மன்றத்திலை நீங்கள் நேற்றுப் பேசினதைக் கேட்டுப் பயந்திட்டன். ஒரு வேளை பூரணி எண்டு கூப்பிட்டா, மரியாதை இல்லாமல் பேர் சொல்லிக் கூப்பிட்டதெண்டு அடிக்க வந்தாலும் வந்திடுவீங்கள்.

**பூரணி:-** (சிரிப்புடன்) அப்ப, நானும் உங்களை இனிச் சந்திரன் எண்டு கூப்பிடாமல் 'சேர்' எண்டுதான் கூப்பிடவேணுமாக்கும்.

**சந்திரன்:-** இப்ப, ஸ்ராவ் றூமுக்குள்ள போய் இருந்து கதைப்பமா?

**பூரணி:-** சீ.. அங்கை போனால், மற்ற ரீச்சர்ஸ் 'கின்ற்' பண்ணுவினம். நக்கலா ஒரு கதை சொல்லுவினம். கன்ரீனுக்குப் போவம்.

**சந்திரன்-** சரி, வாங்கோ, தாங்கள் இட்ட கட்டளைப்படியே அடியேன் எப்போதும் நடந்து கொள்வேன்.

**பூரணி:-** உது இப்ப கதைக்கிற கதை. 'மறி' பண்ணினாப் பிறகு அப்பிடி இருக்க மாட்டீங்கள். பொம்பிளை எண்டா ஆம்பிளை சொன்னபடிதான் நடக்க வேணும் எண்டு நிப்பீங்கள்.

**சந்திரன்-** நான் இப்ப 'சீரியஸ்' ஆத்தான் கதைக்கிறன். உங்கடை கொள்கையள் எனக்குத் தெரியும். நீங்கள் மேடை எல்லாம் ஏறிப் பெண் அடிமைத்தனம் ஒழிய வேணும் எண்டு பேசிறதும், கதாப் பிரசங்கம் செய்யிறதும் தெரியும். அப்பிடி இருந்தும் நான் உங்களை

விரும்பிறன் எண்டா, உங்கடை கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்றன் எண்டு தானே கருத்து?

**கன்ரீன் பையன்:-** சந்திரன் மாஸ்டர், வடை சாப்பிடுறீங்களா?

**சந்திரன்:-** (மெதுவாக) சொல்லுங்கோ, ரீ மட்டுமா? வடையும் சாப்பிடுவமோ?

**பூரணி:-** எனக்கு 'ரீ' மட்டும் போதும். நீங்கள் வேணுமெண்டால் வடையும் சாப்பிடுங்கோ.

**சந்திரன்:-** சீ.. சீ... நீங்கள் 'ரீ' மட்டும் எண்டால், நானும் அப்படித்தான்.

**இருவரும்:-** (சிரிப்பு ஒலி)

**சந்திரன்:-** (உரத்து) இரண்டு ரீ மாத்திரம் தாரும் தம்பி.

**பூரணி:-** நீங்கள் நேற்று 'டிபேற்' றிலை பெண்களுக்குச் சம உரிமை குடுத்தாச்சு. பிறகேன் சத்தம் போடினம் எண்டமாதிரிப் பேசினீங்கள்.

**சந்திரன்:-** அது சும்மா டிபேற்றுக்காகப் பேசினது. நீங்க பாருங்கோவன் பிறகு வீட்டு வேலையிலை அரைவாசி நான்தான் செய்யிறது. உங்களுக்குத் தெரியுமே, நான் படிக்கிற காலத்திலை ஒரு 'குயீன்ஸ்கவுற்'. சமையல் வேலை திறமாகத் தெரியும்.





**பூரணி:-** ம்.... எல்லாந் தெரியுந்தான். செய்யிற மனப்பாங்கெல்லோ மாறாமல் இருக்க வேணும்.

**சந்திரன்:-** (சிறிது கோபத்துடன்) உங்களுக்கு என்னிலை நம்பிக்கையில்லை.

**பூரணி:-** சீ ... அப்படியில்லை. மற்றக் குடும்பங்களுக்கு முன் மாதிரியா நாங்கள் வாழ்ந்து காட்டவேணும் எண்டுதான் நான் நினைக்கிறன். அதிலை ஏமாற்றம் வந்திட்டா, என்னாலை தாங்க ஏலாது.

**கன்ரீன் பையன்:-** சேர் இந்தாங்கோ இரண்டு ரீ.

**சந்திரன்:-** சரி, சரி, 'ரீ' யைக் குடியுங்கோ. (சிறிது பொறுத்து) இண்டைக்கு இந்த லைற் புளு சாறியும் பிளவுசும் உங்களுக்கு நல்ல வடிவா இருக்கு.

**பூரணி:-** (சிணுங்கலுடன்) சீ... இப்பிடிக் கதையள் ஸ்கூலிலை வைச்சுக் கதைக்கப் பிடாதெண்டு எத்தினை நாளைக்குச் சொல்றது? யாரும் ஸ்ருடன்ஸ் கேட்டா என்ன நினைப்பினம்?

**சந்திரன்:-** சரி.... ஸ்கூலிலை கதைக்கப்பிடாது. அப்ப பூரண சந்திரன் தெரியிற நேரம் கதைப்பமோ?

**பூரணி:-** போங்கோ. நீங்கள் இப்ப ஆகவும் மோசம்.

**சந்திரன்:-** சரி... சரி.. இனிமேல் சொல்ல மாட்டன். அம்மா கோபிக்க வேண்டாம்.

பூரணி:- (சிரிக்கிறாள்)

(இசை)

காட்சி 3:-

பாத்திரங்கள்:- பூரணி, கமலா, நிர்மலா

நிர்மலா:- எனக்கெண்டா, இண்டைக்குப் பதினொரு மணிக்கே பசிக்கத் தொடங்கிட்டுது. நீங்கள் பார்சல் அவுக்க மனமில்லாமல் இருந்து கதைச்சுக் கொண்டிருங்கோ. 'ஐ ஆம் கோயிங் ரு ஈற்'

பூரணி:- உனக்கு மட்டுமே நிர்மலா எல்லாருக்கும் பசிதான். காலமையிலை ஸ்கூலுக்கு அவசரமா வரேக்கை ஆர்தான் ஒழுங்காச் சாப்பிட்டிட்டு வாறம். ஒரு 'ரீ' யோடை ஓடி வாறம். இங்கை வந்து ஒரு 'பீரியேட்' படிப்பிக்க முதலே பசி வந்திடும்.

கமலா:- பூரணிக்கெண்டாலும் இடையிலை சந்திரன் மாஸ்டர் கன்ரீனிலை ரீ வாங்கித் தருவார். எங்களை ஆர் கவனிக்கிறது? ம்..... (பெருமூச்சு)

பூரணி:- நீ 'மறி' பண்ண முந்தி உதை யோசிச்சிருக்கவேணும் கமலா. பொம்பிளையின்ரை கஷ்டத்தை உணரக் கூடிய ஒரு ஆளைத் தேடிப் பிடிச்சிருக்க வேணும். கண்டவை எல்லாருக்கும் கழுத்தை நீட்டியிருக்கப்பிடாது.





நிர்மலா:- பூரணி அப்பிடி ஓராளைத் தானே தேடிப் பிடிச்சிருக்கிறாள். பிடிச்சாலும் பிடிச்சாள் நல்ல புளியங் கொம்பாயெல்லே பிடிச்சிட்டாள்.

கமலா:- அப்ப .... 'மறி' பண்ணினாப் பிறகு, உனக்கு ஒரு வேலையுமிருக்காது வீட்டிலை .. என்ன பூரணி?

பூரணி:- அப்படியில்லை வீட்டிலை உள்ள எல்லா வேலையளையும் நானும் அவரும் சமமாப் பங்கு போட்டுக் கொள்ளுவம். ஓராளுக்குச் சுகமில்லை எண்டா ... மற்றாள் முழு வேலையையும் செய்வம்.

கமலா:- நேற்றைக்கு எங்கடை வீட்டிலை இவர் 'ஹா∴ப்டே' ஓடை வந்திட்டார். வந்து படுத்திருக்கிறார். நான் ஸ்கூலிலை இருந்து ஐந்து மணிக்குப் பிறகு போய்த்தான் 'ரீ' கூடப் போட்டது. 'கெற்றில்' கூட அடுப்பிலை வைக்க மாட்டார்.

நிர்மலா:- சில ஆம்பிளையளுக்குச் செய்யத் தெரிஞ்சாலும் தாங்கள் அப்பிடிச் செய்யிறது கௌரவக் குறைவு எண்டெல்லே நினைக்கினம்.

பூரணி:- அதோடை சமுதாயத்தின்ரை மதிப்பும் இதிலை நிறைய இருக்குது. அவை வேலை செய்யிற இடங்களிலை, இப்படி எங்களைப் போல இருந்து கதைக்கேக்கை, என்ரை மனுசி என்னை ஒரு வேலையும் செய்ய விடாது எண்டு சொல்லுறதைத்தான் பெருமையா நினைக்கினம்.

**நிர்மலா:-** ஓ..... பூரணி சொல்லுறது சரி. நான் வீட்டிலை மனுசிக்கு வேலை செய்து குடுத்தனான் எண்டு பெருமையா நினைக்கிற காலம் வரவேணும்.

**கமலா:-** ஏன் ... இஞ்சை ஸ்கூலிலை கூட நாங்கள் 'கேள்ஸ்' ஐக் கொண்டு தானே 'கிளாஸ் றூம்ஸ்' கூட்டிக்கிறம். அதேன் அப்படிப் பழக்கப் படுத்த வேணும்? நான் இப்ப 'வீக்' கிலை இரண்டு நாள் 'போய்ஸ்' கூட்ட வேணும் எண்டு என்ரை கிளாசிலை சொல்லியிருக்கிறன்.

**பூரணி:-** கமலா சொல்லுற 'பொயின்ரை' நானே இது வரைக்கும் யோசிக்கேல்லை. ஓ... எங்கடை மனத்திலையும் பழக்க வழக்கத்திலையும் இந்த அடிமைத்தனம் நல்லா ஊறிப் போச்சு. நானும் இனிமேல் என்ரை கிளாசிலையும் 'போய்ஸ்' ஐக் கொண்டு கூட்டுவிக்க வேணும்.

**நிர்மலா:-** நானும் செய்யப் போறன். 'லேடி ரீச்சர்ஸ்' எல்லாரும் செய்விச்சாலே அது நாளடைவிலை வழக்கமா வந்திடும்.

**கமலா:-** சரி, சரி, அப்ப பூரணி, எப்ப கலியாணச் சாப்பாடு?

**பூரணி:-** ஏன் அவசரப் படுறாய்? உங்களுக்கெல்லாம் சொல்லாம இரகசியமா ஓடப்போறமே? கட்டாயம் உங்களுக்குச் சாப்பாடு தருவம்.

**நிர்மலா:-** இல்லை. சாப்பாடு இதிலை முக்கியமில்லை. உங்கடை இலட்சிய வாழ்க்கையைக் கெதியாப் பாத்திடவேணும் எண்டு எல்லாருக்கும் ஆசைதானே!





**கமலா:-** வீட்டிலை என்னமாதிரி? இரண்டு பக்கமும் பாதை கிளியரோ?

**பூரணி:-** எங்கடை வீட்டிலை ஒரு தடையும் இல்லை அவற்றை வீட்டிலை கொஞ்சம் பிரச்சினை போலை. ஆனால் அவர் வெளிப்படையா ஒண்டும் சொல்ல மாட்டார். எல்லாம் தான் சமாளிப்பன் எண்டு சொல்றார். பாப்பம்.

(இசை)

**காட்சி 4:-**

**பாத்திரங்கள்:-** பூரணி, சந்திரன், சந்திரனின் அம்மா.

**சந்திரன்:-** பூரணி, நேரம் ஏழு மணியாச்சுது. நான் இண்டைக்கு முழுகோணும். நீங்கள் இடியப்பத்தை அடுப்பிலை வையுங்கோ. நான் இந்த உடுப்புகளைத் தோய்ச்சுப் போட்டிட்டுவாறன்.

**பூரணி:-** ஓமோம். என்ரை உடுப்புகள் அங்கை 'ஹாங்கரிலை' கிடக்குது. எடுத்துக் கொண்டு போங்கோ. நான் இதை இறக்கி விட்டிட்டு வாறன்.

**சந்திரன்:-** (சிறிது பொறுத்து) பூரணி – சோப் முடிஞ்சிட்டுது. 'கிச்சின்' அலுமாரிக்குள்ளை ஒரு 'சோப்' இருக்கு. எடுத்துக் கொண்டு வாங்கோ.

**பூரணி:-** ஓமோம். கொண்டு வாறன். (சிறிது பொறுத்து) இந்தாருங்கோ சோப். நான் சமையல் வேலையை முடிச்சிட்டு வந்து உங்களுக்கு உதவி செய்வம்

எண்டு பாத்தா, நீங்கள் அதுக்கிடேலை 'வோசிங்' எல்லாம் முடிச்சிடுவீங்கள் போலை இருக்கு.

**சந்திரன்:-** ஓ, நான் இப்ப முடிச்சிடுவன். (நீர் ஒழுகும் சத்தம்) ஐஞ்சு நிமிஷத்திலை வந்து உங்களுக்கு உதவி செய்வன.

**பூரணி:-** ஆ... பாப்பம் ... அடுப்பிலை இடியப்பம். நான் போறன். (நீர் ஓழுகும் சத்தம், துணி துவைக்கும் சத்தம்)

**அம்மா:-** சந்திரன்... தம்பி சந்திரன்!

**பூரணி:** ஆரது?
(சிறிது பொறுத்து) ஓ மாமியோ? வாங்கோ, வாங்கோ, இப்பிடி இருங்கோ. அவர் அங்கை கிணத்தடியிலை நிக்கிறார்.

**அம்மா:-** (களைப்புடன்) அப்பாடி... (சிறிது பொறுத்து) ... என்ன செய்யிறான்? குளிக்கிறானோ?

**பூரணி:-** இல்லை, இல்லை, உடுப்புத் தோய்க்கிறார். இனித்தான் முழுகப் போறார். இருங்கோ மாமி, 'ரீ' கொண்டு வாறன்.

**அம்மா:-** (தூரப் போய் ஒலிக்கும் குரல்) தம்பி சந்திரன் என்ன மோனை செய்யிறாய்?

**சந்திரன்:-** எட..... அம்மாவே? எப்ப வந்தனீங்கள்? தனியாத்தானே வந்தனீங்கள்? ஏன் தம்பியை அல்லது அப்பாவைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே?





**அம்மா:-** இந்திரன் ரியூசனுக்குப் போட்டான். கொப்பர் அங்கை தோட்ட இறைப்பு நடக்குது. நான் பின்னை நினைச்சாப் போலை வெளிக்கிட்டு வந்தன். இண்டைக்குச் சனிக்கிழமை. நீங்கள் வீட்டிலை நிப்பியள் எண்டு வந்தன். என்ன ... இரண்டு கிழமையா உன்னையும் அந்தப் பக்கம் காணேல்லை?

**சந்திரன்:-** ஓ... திங்கள் தொடக்கம் வெள்ளி வரையும் பள்ளிக்கூடம். சனி, ஞாயிறிலை தானே நாங்களும் வீட்டு வேலையள் பாக்க வேணும். கிணறு இறைக்க வேணும், உடுப்புகள் தோய்க்க வேணும், முழுக வேணும். இதிலை நேரம் கிடைக்கிறேல்லை. வருவம். அடுத்த கிழமை அந்தப் பக்கம் வருவம் எண்டுதான் இருந்தனான்.

**அம்மா:-** இதென்ன மோனை? பூரணியின்ரை சீலையளும் தோய்க்கிறாய் போலை?

**சந்திரன்:-** ஓ... அதுக்கென்ன? அவ எனக்கும் சேத்துச் சமைக்கிறா. நான் அவவுக்கும் சேத்துத் தோய்க்கிறன். அதிலை என்னம்மா?

**பூரணி:-** மாமி, இந்தாங்கோ, தேத்தண்ணி, என்ன நீங்களும் கிணத்தடிக்குப் போயிட்டீங்களோ?

**அம்மா:-** வாறன் பிள்ளை. (சிறிது பொறுத்து) ஆ... தேத்தண்ணி சுடுது போலை இருக்கு. ஆறட்டும்.

**சந்திரன்:-** (குரல் வர வர அண்மித்து ஒலித்தல்) இடியப்பம் அவிச்சு முடிஞ்சுதோ பூரணி? அம்மாக்கும் குடுக்கலாம்.

**பூரணி:-** ஓம் இடியப்பம் அவிச்சிட்டன். இனிச் சாம்பார்தான் வைக்க வேணும். அதுதான் வெஜிரபிள் வெட்டி வைச்சிட்டுத் தேங்காய் திருவிக் கொண்டிருந்தனான்.

**சந்திரன்:-** நான் தேங்காயைத் திருவிறன். நீங்கள் உதுகளை அவிய விடுங்கோ.

**பூரணி:-** இஞ்சை விடுங்கோ சந்திரன். நான் திருவிறன். அதிலை ரீ இருக்கு. எடுத்துக் குடிச்சிட்டு வாங்கோ.

**சந்திரன்:-** சீயாக்காய் அவியப் போட்டிட்டியளோ?

**பூரணி:-** ஓ.... அது ரெடி. அப்ப நிங்கள் போய் முழுகிப்போட்டு வாங்கோவன்.

**சந்திரன்:-** சமையலை முடிச்சிட்டுப் போனால், இரண்டு பேருமாய் முழுகிட்டு வந்து அம்மாவோடை சாப்பிடலாம்.

**பூரணி:-** ஓ... அதுவும் சரிதான். அப்ப இந்தாங்கோ... இதைத் திருவுங்கோ. நான் வெங்காயம் வெட்டிப் போட்டு அதை அவிய வைக்கிறன். (தேங்காய் துருவும் சத்தம்)

**அம்மா:-** தம்பி, இஞ்சைவிடு நான் திருவிறன். நீ ஆம்பிளைப்பிள்ளை தேங்காய் திருவிறதைப் பாக்க அந்தரமாய்க் கிடக்கு.

**சந்திரன்:-** சீ..... இதிலை என்னம்மா? நான் திருவிறன். நீங்கள் உதிலை இருங்கோ.





**அம்மா:-** (பெருமூச்சுடன்) எங்கடை வீட்டிலை இருக்கேக்கை நான் என்ன மாதிரிச் செல்லமாய் உன்னை வளத்தனான். இப்ப உன்ரை மனுசி எல்லா வேலையும் உன்னைக் கொண்டு செய்விக்கிறா.

**சந்திரன்:-** நான் சந்தோஷமாத்தானே அம்மா செய்யிறன். இதிலை எனக்கொரு கஷ்டமும் இல்லை. உங்களோடை இருக்கேக்கையும் நான் செய்ய வாறனான் தானே. நீங்கள் தான் விடமாட்டியள்.
(இசை)

**காட்சி 5:-**

**பாத்திரங்கள்:-** சந்திரன், அம்மா, இந்திரன்.

**இந்திரன்:-** அம்மா, எனக்கு இண்டைக்கு இரண்டு மணிக்கு ரியூசன் இருக்கு. கெதியாச் சமைச்சுப் போடுங்கோ.

**அம்மா:-** ஓமடா, ஓமடா. இண்டைக்கு அப்பாவும் விரதம். கெதியாச் சமைக்கத்தான் வேணும்.

**சந்திரன்:-** (குரல் கொடுக்கிறான்) அம்மா... அம்மா...

**அம்மா:-** இஞ்சை கொண்ணனும் வந்திட்டான். அப்ப இண்டைக்கு விசேஷமாய்த்தான் சமைக்கவேணும்.

**சந்திரன்:-** அண்ணை, என்ன கன நாளைக்குப் பிறகு அத்திபூத்தாப் போலை இந்தப் பக்கம்?

**சந்திரன்:-** ஓம்.... எனக்கும் வேலையள். ஓய்வு ஒழிச்சல் இல்லை. இப்பிடித்தான் இடைக்கிடை நீங்கள் வர, இடைக்கிடை நாங்கள் இந்தப் பக்கம் வந்தாச் சரிதானே?

**அம்மா:-** இருந்து கதை மோனை. நான் தேத்தண்ணி வைச்சுக் கொண்டு வாறன்.

**சந்திரன்:-** ஓமோம், நீங்கள் உங்கடை அலுவலைப் பாருங்கோ.

**இந்திரன்:-** எப்பிடி அண்ணை. அண்ணி சுகமா இருக்கிறாவோ?

**சந்திரன்:-** ஓ... சுகமா இருக்கிறா. உனக்கும் ஒரு பெறா மகன் வரப் போறான் போல இருக்கு.

**இந்திரன்:-** ஆ... நல்லதுதான். அப்ப வேலையள் எல்லாம் இப்ப உங்கடை பாடுதானாக்கும்.

**சந்திரன்:-** இல்லை, இல்லை, அவவும் செய்வா. நானும் செய்யிறதுதான்.

**அம்மா:-** தம்பி, தேத்தண்ணி குடி.

**சந்திரன்:-** என்ன கெதியாக் கொணந்திட்டீங்கள்.

**அம்மா:-** ஓ.... சுடுதண்ணிப் போத்தலிலை வைச்சிருந்தனான். கொணந்திட்டன். ஏதோ 'விசேஷம்' எண்டு கதைச்சியள் என்ன?

**சந்திரன்:-** ஓ......பூரணிக்கு விசேஷம்... அதுதான்....

**அம்மா:-** வேலையள் செய்யிறாவோ? படுக்கையோ?





**சந்திரன்:-** செய்யிறா. இன்னும் அப்படிச் சுகயீனம் ஒண்டும் இல்லை.

**அம்மா:-** எண்டாலும் தம்பி, எனக்கெண்டா நீ அங்கை பொம்பிளை மாதிரி வேலையள் செய்யிறது கொஞ்சமும் பிடிக்கேல்லை.

**இந்திரன்:-** சீ... நாளைக்குச் சனமெல்லாம் எங்களைப் பகிடி பண்ணப் போகுது.

**அம்மா:-** ஆம்பிளை, ஆம்பிளை மாதிரி இருக்க வேணும் தம்பி. பொம்பிளை பொம்பிளை மாதிரி இருக்க வேணும். பொம்பிளை வேலைக்குப் போனாப் போலை, வீட்டிலை அவள் ஆம்பிளையா மாறப்பிடாது.

**சந்திரன்:-** எனக்கு நான் செய்யிறதிலை ஒரு பிழையும் இருக்கிறதாத் தெரியேல்லை அம்மா.

**அம்மா:-** நீ அவளை விரும்பேக்கையே எனக்குத் தெரியும். அவள் மேடை ஏறிப் பேசிற ஆள் எண்டு. எனக்கு மனதுக்கை விருப்பமில்லை. பொம்பிளை வீறாப்பாய் இருக்கப்பிடாது.

**இந்திரன்:-** பொம்பிளை மூத்த குடியள் ஒரு நாளும் நல்லா வாறேல்லை அண்ணை.

**அம்மா:-** நாங்கள் அப்பவே உன்னை உங்கை கலியாணம் செய்ய வேண்டாம் எண்டு மறுத்திருக்கலாம். உன்ரை மனத்தை வேதனைப் படுத்த நாங்கள் விரும்பேல்லை.

**இந்திரன்:-** ஆனால் இனிமேல் நீங்கள் இடம் விட்டு நடந்தியள் எண்டால் அது உங்களுக்குத்தான் மரியாதைக் குறைவு.

**அம்மா:-** அவன் பெண்டிலுக்குச் சமைச்சுக் குடுக்கிறான். பெண்டிலுக்குக் குளிக்க வாக்கிறான் எண்டு சனம் கேவலமாக் கதைக்குது.

**இந்திரன்:-** எங்கடை வீட்டிலை அப்பா என்ன மாதிரி வீம்பா இருக்கிறார்? அம்மா அவர் சொன்னதைச் சொன்னபடி செய்யிறா. நீங்களும் அப்பிடித்தான் அண்ணை இருக்க வேணும்.

**சந்திரன்:-** நான் சொன்னதை அவ செய்யிறேல்லை எண்டு உனக்கு ஆர் சொன்னது இப்ப?

**இந்திரன்:-** அப்ப, நீங்கள் கஷ்டப்பட்டு உவ்வளவு வேலையும் செய்யத் தேவையில்லையே?

**அம்மா:-** அவவுக்கு வேலை செய்ய நேரமில்லாட்டில் படிப்பிக்க வேண்டாமெண்டு மறிச்சுவிடு.

**சந்திரன்:-** ஐயோ..... எனக்குத் தலை சுத்துது.
(இசை)

**காட்சி 6:-**

**பாத்திரங்கள்:-** பூரணி, சந்திரன்.

**சந்திரன்:-** பூரணி, பூரணி! ஆறுமணியாகுது. இனி எழும்பன். இண்டைக்கு ஸ்கூலுக்குப் போறேல்லையே நான்?

**பூரணி:-** ம்...ம்...(முனகுகிறாள்)

**சந்திரன்:-** (கண்டிப்பான குரலில்) என்ன, எத்தினை தரம் எழுப்பிறது? எழும்பன்.





**பூரணி:-** ஐயோ, எனக்குத் தலை சுத்துது. தலையை நிமித்த ஏலாதாம். எல்லாம் சுத்திக் கொண்டு வருது..ம்...ஆ..... சத்தி எடுக்கப் போறன் போலை கிடக்கு.

**சந்திரன்:-** சத்தி எடுக்கிறது என்ன புதினமோ? மூண்டு நாலு மாசத்திலை எல்லாப் பொம்பிளையளுந்தான் சத்தி எடுக்கிறது. அதுக்குப் பெரிசாச் செல்லம் கொட்டாமல் எழும்பு.

**பூரணி:-** ம்.... ஐயோ... கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வருது. ∴பிளாஸ்க்கிலை ஹொற் வாட்டர் இருக்கு. கொஞ்சம் ரீ போட்டுத் தந்தீங்கள் எண்டால், குடிச்சிட்டு எழும்பக் கொஞ்சம் சுகமாயிருக்கும்.

**சந்திரன்:-** உனக்கு நான் நல்லா இடம் தந்திட்டன். நீயும் என்னைப் பேயன் எண்டு நினைச்சிட்டாய். எந்த வீட்டிலை ஆம்பிளை தேத்தண்ணி வைக்கிறான்? எழும்பு, எழும்பு.

**பூரணி:-** இவ்வளவு நாளும் நான் தானே எழுப்பித் தேத்தண்ணி வைச்சனான். இப்ப இரண்டு மூண்டு நாளா என்னாலை ஏலுதில்லை எண்டுதானே கேக்கிறன.

**சந்திரன்:-** என்னாலை ஏலாது. நான் குளிக்கப் போறன். 'ரெஸ்ற் பேப்பர்ஸ்' கொறக்சனும் இருக்கு. நீ என்னெண்டாலும் செய்.
(போகிறான் என்பதைக் காட்டக் குரல் தேய்கிறது)

**பூரணி:-** (அழுகிறாள்)

**சந்திரன்:-** இப்ப ஏன் அழுது வடியிறாய்? உந்தக் கண்ணீருக்கு நான் நெடுகப் பயப்பிட மாட்டன். வருத்தம் எண்டால் போய்ப்படு. அல்லது வேலையை விடுற தெண்டாலும் விடு. நான் ஸ்கூலுக்குப் போகவேணும். நேரம் போகுது.

**பூரணி:-** (தனக்குள்)
என்னை ஒரு டொக்டரிட்டைக் கொண்டு போய்க் காட்ட வேணும் எண்ட நினைப்பும் இல்லை. எல்லா ஆம்பிளையளும் கடைசியிலை ஒண்டுதான்.
(அழுகை ஒலி தேய்ந்து மறைகிறது.)

***(இசை)***
***(முடிவு இசை)***

(இலங்கை வானொலி தேசிய சேவையில் ஒலிபரப்பாகியது 1986)







# ஞான விளக்கு

முதல்மேடையேற்றம்:-

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபம்.- ஆசிரியர் தினப் போட்டிக்காகத் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்களால் மேடையேற்றப்பட்டது.
ஆசிரியருக்கான கோட்ட மட்ட நாடகப்போட்டியில் முதலிடம் பெற்று அப்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு க.கந்தசாமி அவர்களிடம் பரிசு பெற்றது.
மேடையேறிய திகதி:- 05-10-1997

இரண்டாவது மேடையேற்றம் 06.10.1997 - ஆசிரியர் தின விழா - அதே மண்டபம்

**நடிகர்கள்:-**

திருமதி கோகிலா மகேந்திரன்
செல்வி காயத்திரி இராஜரட்ணம்
செல்வி கௌந்தினி மகேஸ்வரன்
செல்வி எஸ். சர்வாஜினி
திரு எஸ்.அருளானந்தசிவம்
திருமதி பத்மா சரவணபவன்
செல்வி பொ. அனந்தவல்லி
திருமதி எஸ். ஸ்ரீகந்தவேள்
திரு எஸ். சிவகுமாரன்
திரு பா. சந்திரசேகரன்

நெறியாள்கை:- திருமதி கோகிலா மகேந்திரன்

# ஞான விளக்கு

(நாற்பது நிமிட நவீன நாடகம்)
(திரை திறக்கும் போது நடிகர் X வடிவில் நிற்பர்)

**பாடகர்:** தெல்லியூர் தனில் சீர்மிகுந் தோங்கும்
செல்வியாம் சைவப்பிரகாசத் தாயின்
மைந்தர்கள் போடும் நாடகம் பாருங்கள்
மாண்புடன் அன்னை தாளினைப் பாடுங்கள்
(நடிகர்கள் X வடிவில் ஆடிப்பின்னர் வட்ட வடிவுக்கு வந்து ஆடுவர்)

**பாடகர்:** தெந்தென்னா தன தானன தானா
தெந்தென்னா தன தானன தானா (2முறை)

**நடிகர்1:** வணக்கம்

**நடிகர்2:** நாங்கள் இப்போது நடிக்க இருப்பது 'ஞான விளக்கு' நாடகம்

**உரைஞர்1:** ஆசிரியர் ஒரு ஞானவிளக்கு

**உரைஞர்2:** ஆசிரியரின் மனநிலையே அன்றைய வகுப்பறையில் வானிலையாகும்.
(பட்டி மண்டபம் நடைபெறும் ஒழுங்கு அமைதல்)

**பட்டிமண்டப நடுவர்:**
இன்றைய பட்டி மண்டபத் தலைப்பு – "ஒரு மாணவனின் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் காரணமானவர் ஆசிரியரே" இந்தத் தலைப்பில் ஆம் என வாதிட வருகிறார் அனந்தவல்லி.



**அனந்தவல்லி:** தாமரை மொட்டுப்போல வகுப்புக்கு வந்திருக்கும் மாணவனைப் பூக்கச் செய்பவர் ஆசிரியரே. குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை நிலம் மலை நிறைகோன் மலர் நிகர் மாட்சியும் உலகியல் அறிவொடு உயர் குணமினையவும் அமைபவன் நூலுரை ஆசிரியனே என்பது பழந்தமிழ் வாக்கு. ஆசிரியன் இப்படி அமைந்தால் மாணவன் பூத்துக் குலங்குவான். ஆசிரியர் சிகரெட்டும் குடியும் அடியுமாக அமைந்தால்...! பாவம் அவன். தாரமும் குருவும் தலைவிதிப் படிதான்.
(பட்டி மண்டபம் நடைபெறும்போது ஒரு நடிகர் தராசாக அமைகிறார். ஒரு பக்கம் பேசும்போது ஒரு கை பதிகிறது. மறுபக்கம் பேசும் போது மறு கை பதிகிறது)

**நடுவர்:** ஒரு மாணவனின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் காரணமானவர் ஆசிரியர் இல்லை என வாதிட வருகிறார் எதிரணித் தலைவர் காயத்திரி.

**காயத்திரி:** ஆசிரியம் என்பது ஒரு தொழில். ஆசிரியர் சிகரெட் புகைப்பதும் குடிப்பதும் மட்டும் ஏன் சமுதாயத்தின் கண்களில் எரிச்சலை ஊட்ட வேண்டும்? வேறு தொழில் செய்பவர்கள் குடித்தால் யாரும் கேட்பதில்லை. ஏன் எமக்கு மட்டும் சுதந்திரம் இல்லை? மாணவன் திறமை சாலியாக இருந்தால் படிப்பான். பாரம்பரியக் காரணிகளிலேயே ஆளுமை தங்கியுள்ளது. மாணவன் மொக்குக் குடும்பத்தில் பிறந்து வந்தால் ஆசிரியர் என்ன கத்தியும் பயன் இல்லை.

**அணி 1இன் அடுத்த பேச்சாளர்:**
மானிடர் கல்வித் தாகம் தணிக்கும் ஊருணி
நீரே ஆசிரியர்.

**அணி 2இன் அடுத்த பேச்சாளர்:**
அறிவுப்பூக்கள் மலர்ந்திடும் பூங்காவை
ஆக்கித்தருபவர் பெற்றோர் தானே!

**அணி 1இன் மூன்றாவது பேச்சாளர்:**
சேவைக்கு என்று தேய்ந்து மணக்கும்
சந்தனத்தருவே ஆசிரியர்கள்.

**அணி 2இன் மூன்றாவது பேச்சாளர்:**
உணர்வை விளைப்பவர் ஆசிரியர் ஆயினும்
உயிர்ப்பைத் தந்தவர் பெற்றார் தானே.

**அனந்தவல்லி:** மானம், அறம், கல்வி, மாண்புகள் யாவையும்
தானமாய்த் தருபவர் ஆசிரியர் தானே.
(இரண்டு அணிகளும் மாறி மாறி மைக்குக்கு முன்னே வருவதும் உக்கிரமாக வாதிடுவதுமான ஊமம்)

**நடுவர்:** இரண்டு பகுதியும் இறுக்கமாகத்தான் விவாதிக்கிறார்ள். நான் எப்படித் தீர்ப்புச் சொல்வது? பட்டிமண்டப நடுவர் வேலையே பனிப்பிடித்த வேலைதான். பார்ப்போம் ஏதோ ஒரு வழி பிறக்கும் தானே! (பட்டி மண்டப அமைவு மாறி வீடு ஒன்று அமைகிறது. பாடகரின் பாடலுக்கு அம்மா சமைப்பதும், அப்பா விறகு கொத்துவதும், சர்வா என்ற பிள்ளை படிப்பதும் கௌந்தி என்ற பிள்ளை விளையாடுவதுமான ஊமம்.)





**பாடகர்:** மாலையிலே முத்தரும்பும் என் பவள
மல்லிகையில் இரவிரவாய்ப் பூ விரிந்து
விடியலிலே மணம் பரவும்
ஆ.....ஆ........ஆ.........ஆ.......
(மகிழ்வான உணர்வு)

**அப்பா:** விறகு கொத்திற தெண்டால் என்ன லேசான வேலையே? சீசீ.. நல்ல களையாய்க்கிடக்கு. இஞ்சாரப்பா.... தேத்தண்ணி கொஞ்சம் போடும்.

**அம்மா:** ஓமோம். விறகு பச்சை. எரியுதில்லை. கொண்டாறன்.

**சர்வா:** அம்மா.எனக்கும் போடுங்கோ...பசியிலை படிப்பு ஏறாதாம்.

**அம்மா:** ஓம் பிள்ளை.

**கௌந்தி:** (முற்றத்தில் ஓடி ஆடி விளையாடும் ஊமம்)
ஆலோலம் ஆலோலம் சோ, சோ, சோ....!
காடை கவுதாரிகளாம் கருங்குருவிப்
புள்ளினங்காள்
மாடப்புறாக் கிள்ளைகளாம் மாட்சி மிகும்
குருவிகளாம்
சோ.......சோ.......சோ.........சோ.....
கவண் வீசிக் கல்லெறிவேனே...
சோ.......சோ.......சோ.........சோ.....
எந்தன் காவலில் காண விடேனே

**சர்வா:** நான் படிக்கிறன் தெரியேல்லையோ?

**கௌந்தி:** நான் பாடுறன் தெரியேல்லையோ?

**சர்வா:** அம்மா இஞ்சை பாரணை இவளை!

**அம்மா:** (குசினிக்குள் இருந்து வெளியே வந்து) என்ன பிள்ளை?

**சர்வா:** எனக்கு இண்டைக்கு 'ரெஸ்ற்' எண்டு ரீச்சர் சொன்னவ. படிக்கலாமெண்டால் விடாளாம்.

**கௌந்தி:** (அப்பாவுக்குப் பக்கத்தில் போய் நின்று) படிப்பு, படிப்பு.. எந்த நேரமும் படிப்பு, விசர்ப் படிப்பு. மூளைகலங்கப்போகுது. நான் நாடகம் பழகிறன். அப்பா, நாளைக்குச் சன சமூக நிலையத்திலை இசை நாடகம். நானும் நடிக்கிறன் அப்பா.

**அம்மா:** ஐயோ எனக்குத் தலை விறைக்குது.

**அப்பா:** பிள்ளையள், நீங்கள் இரண்டு பேரும் எங்கடை பிள்ளையள் தானே, ஏன் அடிபடுறியள். சர்வா, நீ போய் முன் தாழ்வாரத்திலை மரக்குத்தியைப் போட்டிட்டு இருந்து படி மேனை. கௌந்தி(உரத்து) நீ பெரிய குளப்படி. பின்னுக்குப் போ... போய் மாமரத்துக்குக் கீழை நிண்டு உன்ரை நாடகத்தைப் பழகு.. போ.. அவளைக் குழப்பாதை!
(சற்றுப் பொறுத்து)
கௌந்தீ.... நீ பள்ளிக்கூடம் போற நோக்கம் இல்லையோ?

**கௌந்தி:** அங்கை என்னத்துக்கு?





**அப்பா:** இவள் கௌந்தி பெரிய குளப்படியாக் கிடக்கப்பா. (மனைவிக்கு அருகில் வந்து) சர்வா படிச்சுக் கிடிச்சு ஒரு உத்தியோகம் பாப்பளெண்டு பார்த்தால், இவள் குழப்பிக் கொண்டு பெரிய கரைச்சலாக் கிடக்கு......
(சர்வா பாடசாலைக்குச் செல்ல மகிழ்வுடன் வெளிக்கிடும் ஊமம். கௌந்தி அழுதழுது வெளிக்கிடும் ஊமம்.)

**பாடகர்:** மணம் பரவும் முன்னாலே மலர்கள்
சிதறி விழும்
மண்ணோடு மண்ணாகும்
ஆ.......ஆ......ஆ........
(வகுப்புக்கு வரும் வழியில் ஒரு ஆசிரியர் ஒளித்து நிற்றல்)

**உரைஞர்:** ஏன் ரீச்சர் ஒளிச்சு நிக்கிறியள்?

**ஆசிரியை1:** என்னட்டைப் படிச்ச பெடியன் வாறான். பட்டம் கிட்டம் சொன்னாலும்....
அதுதான்..........ஈ..........ஈ

**உரைஞர்:** அப்ப நீங்கள் நில்லுங்கோ... நான் போயிட்டு வாறன்.
(மேடையில் பெரிய பாடசாலை ஒன்றுக்கான குறியீடு மேடைப் பொருளாக வைக்கப்படுதல். வகுப்பு அமைதல் ஊமம். மாணவர்கள் ஊதா நிற ரையும் தலையில் கொம்பும் அணிந்து காணப்படுவர்.)

**பிள்ளைகள்:** ரீச்சர், குட்மோனிங்!

**ஆசிரியை1:** குட்மோனிங் சிற்டவுண்.

**மாணவன்1:** ரீச்சர் நான் ஹோம் வேக் செய்து கொணந்தனான். பாக்கிறியளோ?

**ஆசிரியை1:** அது கிடக்கட்டும். சர்வாஜினி எழும்பும். நாளைக்குத் தமிழ்த்தினப் போட்டி. நாளண்டைக்கு இங்கிலிஷ் டே. அடுத்தநாள் வாழ்க்கைத்திறன் போட்டி..... எல்லாத்துக்கும் ஆயத்தப்படுத்தும். என்ன? (கண்டிப்பான குரல்)

**மாணவர்2:** ரீச்சர் போட்டிக்கு என்னை விடுங்கோவன்?

**மாணவர்3:** ரீச்சர் போட்டி வையுங்கோவன்?

**ஆசிரியை1:** போட்டி வைச்சாலென்ன வைக்காட்டிலென்ன? சர்வாதானே முதலாவதா வாறவ? நீர் ஆயத்தப்படுத்தும் சர்வா. சரியோ?

**சர்வா:** ரீச்சர், எனக்குக் கேட்டுப் படிக்க ஒருத்தருமில்லை ரீச்சர்.

**ஆசிரியை1:** அம்மாட்டைக் கேட்டு எழுதும்.

**சர்வா:** அம்மா படிக்கேல்லை ரீச்சர்!

**ஆசிரியை1:** அப்பா?

**சர்வா:** அப்பாவும் ஐஞ்சாம் வகுப்புத்தான் படிச்சவர்!

**மாணவர்4:** ரீச்சர், நானெண்டால், நந்தினி மிஸ் வீட்டை கேட்டு எழுதிப் பாடமாக்குவன். அப்ப என்னை விடுறீங்களே ரீச்சர்?



**ஆசிரியை1:** இல்லை. இல்லை. சர்வா, நீர் அப்ப நந்தினி மிஸ் வீட்டை போய்க் கேட்டு எழுதிப் பாடமாக்கும். சரியோ? பெரிய கொலீஜ்ஜிலை படிக்க வேணும் எண்டு அந்தரப்பட்டு அட்மிஷன் எடுத்துப் போடுவியள். வேலை செய்யச் சொன்னா வீட்டிலை ஒருத்தருமில்லை எண்டு சாட்டு. அப்ப சின்னப் பள்ளிக் கூடத்திலை படிச்சிருக்கலாம்தானே!

**சர்வா:** சரி ரீச்சர்.(கவலையான முகத்துடன்)

**ஆசிரியை1:** இண்டைக்கு விஞ்ஞானப் புத்தகத்திலை இருபத்திரண்டாம் பக்கம் படிப்பம். எடுங்கோ புத்தகத்தை!

**சர்வா:** ஒட்சிசன் தயாரித்தல் ரீச்சர்!

**ஆசிரியை1:** ஓம்... புத்தகத்தைப் பாத்து எழுதுங்கோ.

**மாணவர்5:** புத்தகத்தைப் பாத்து அப்பிடியே கொப்பியிலை எழுதிறதோ?

**ஆசிரியை1:** ஓம்.....ஓம்.....

**மாணவர்6:** ரீச்சர் சோதனைக் குழாய் எண்டது எப்பிடி இருக்கும் ரீச்சர்?

**ஆசிரியை1:** உன்ரை மூக்கு மாதிரி இருக்கும். சும்மா விசர்க் கேள்வியளை விட்டிட்டு எழுது கெதியா! (கிட்டவந்து வெருட்டுதல்)

மாணவர்1: ரீச்சர், ஒட்சிசன் வாயுவுக்குச் சுவை இருக்குமோ?

ஆசிரியை1: இதென்ன ரொபி எண்டு நினைச்சியே சாப்பிட? சும்மா அலம்பாமல் படத்தைப் பாத்துக் கீறு.

மாணவர்2: ரீச்சர், சோதனைக் குழாய் எண்டால் இரண்டு கோடோ?

ஆசிரியை1: ஓம் இரண்டு கோடுதான். அடியிலை வளைச்சு விட்டால் சரி.

மாணவர்3: பிறின்சிப்பல் வாறார்!

ஆசிரியை1: (வகுப்புக்கு வரும் அதிபரிடம்) சேர், இந்த வகுப்புச் சரியான குழப்படி. ஒருத்தரும் ஹோம் வேக்கும் செய்யிறேல்லை. ஒண்டுமில்லை.

மாணவர்4: (தமக்குள்)நாங்கள் செய்து கொணந்த 'ஹோம் வேக்' பாக்கேல்லை.பிரின்சிப்பலுக்குச் சொல்லுற பொய்யைப் பாரன். (மணி அடிக்கும் சத்தம்)

ஆசிரியை1: சரி, நான் போட்டு வாறன். நாளைக்கு எல்லாரும் ஹோம் வேக் செய்து கொண்டு வாங்கோ.

மாணவர்5: ஹோம் வேக் தந்தா லெல்லோ செய்ய?

மாணவர்6: போனாக் காணும்.





சர்வா: தாங்க் யூ ரீச்சர்.

பாடகர்: வெள்ளி மலர் விரிந்து வான வெளியெங்கும்
இரவிரவாய் மலர் குவியும்
அள்ள முடியாமல் வாயு சலித்திருக்கும்
கடல் கதறும் சேவல் அழும்
கதிரோன் துயில் கலையும்
(இப்பாடலின் போது நடிகர்கள் கலைந்து சர்வாவின் வீடு அமைதல்.)

சர்வா: அம்மா, இந்தப் பேச்சு எழுத்தித்தாறீங்களோ?

அம்மா: நான் படிக்கேல்லைப் பிள்ளை (அம்மா அரிசி பிடைத்துக் கொண்டிருக்கிறா)

சர்வா: (பசுவில் பால் இழுக்கும் அப்பாவிடம் போய்) அப்பா இந்த இங்கிலிஸ் போயம் சொல்லித் தாறியளோ?

அப்பா: நான் விறகு கொத்த வேணும் பிள்ளை.

சர்வா: (வீட்டின் ஒரு மூலையில் நின்று கூப்பிட்டு) பக்கத்து வீட்டுக் கமலா ரீச்சர், இந்தப் பேச்சு ஒருக்கா எழுதித் தாறீங்களோ?

கமலா: (வேலிக்கு மேல் எட்டிப் பார்த்து) ஏன் உங்கடை பள்ளிக்கூட வாத்திமார் என்ன நித்திரையே கொள்ளினம்? போய் அவையைக கேளும் பிள்ளை.

சர்வா: கடவுளே! கடவுளே!
(மேடையில் சிறிய பாடசாலை ஒன்றின் குறியீடு அமைதல். மாணவர் பச்சை நிற டையுடன் காணப்படுதல்.இப்பாடசாலையின்

ஆசிரியர் ஒருவர் நடந்து பாடசாலைக்கு வருதல்.)

**உரைஞர்1:** இந்த ஆசிரியர் அழகாய் இருக்கிறார்.

**உரைஞர்2:** உடலிலா?

**உரைஞர்1:** குஞ்சி அழகும் கொடுந்தானைக்
கோட்டழகும், மஞ்சள் அழகும் அழகல்ல.

**உரைஞர்2:** அப்படியானால் அவர் உள்ளத்தில் அழகாய் இருக்கிறார்.

**ஆசிரியை2:** (சபையைப் பார்த்து DC யில் நின்று)
அச்சுறுத்தும் முடிவுக்கு வந்தேன்
வகுப்பறையின் இயக்கம் நானேயாவேன்
எனது அணுகு முறைகளே
வகுப்பறையை மலர்விக்கும் கவி நிலைகள்
எனது மனோ நிலையே
அன்றைய நாளின் வானிலையாகும்
ஓர் ஆசிரியன் என்ற வகையில்
மாணவன் வளம் பெறுவதிலும்
வழி தவறுதலிலும்
எனது ஆளுகையே அதீதமாகின்றது
எனது செயல்கள் மாணவனுக்கு மகிழ்ச்சி தரலாம்
மனச் சோர்வு தரலாம்
நோய் தரலாம். நோய் அகற்றலாம்
எந் நிலையிலும் எனது துலங்கலே
பூதாகாரமாகத் தலை தூக்கும்
எனது துலங்கலால் நெருக்கடிகள் எழலாம் அல்லது விழலாம்





மாணவன் உலகம் வியக்கும் மானுடனாகலாம்
அல்லது எதிர் மானுடனாகலாம்.
(ஆசிரியர் வகுப்புக்கு வருகிறார். பின்வரும் பாடலுக்கு மாணவருடன் சேர்ந்து ஆடுகிறார். மாணவர் பின்பற்றாத போது மட்டும் வழி காட்டுகிறார். வகுப்பு மிக உற்சாகமாக நடைபெறுகிறது)

**பாடகர்:** கறுப்பு நிறத்தில் வெள்ளை மறையன்
எங்கள் வீட்டு நாய்
கலைத்துப் பிடிக்கும் கோழி முயல்கள்
எங்கள் வீட்டு நாய்
வீமன் என்று நாமழைக்கும் எங்கள் வீட்டு நாய்
வீரம் அதிகம் உடையதாகும் எங்கள் வீட்டு நாய்
வேற்று மனிதர் தம்மைக் கண்டால் எங்கள வீட்டு நாய்
வள் வள் என்று சத்தமிடும் எங்கள் வீட்டு நாய்
நாம் கொடுக்கும் உணவுக்காக எங்கள் வீட்டு நாய்
நன்றியுடன் வாலை ஆட்டும் எங்கள் வீட்டு நாய்

**ஆசிரியை2:** கௌந்தி அச்சாப்பிள்ளை. இண்டைக்கு
நல்ல வடிவா ஆடியிருக்கிறா.
நாளைக்கு நாங்கள் மிச்சம் படிப்பம்.
(ஆசிரியை1 சர்வாவுடனும், ஆசிரியர்2 கௌந்தியுடனும் ஆடுதல். இரண்டாவது ஆட்டத்தில் ஒத்திசைவு காணப்படும். முதலாவது ஆட்டத்தில் முரண்பாடும்

இயைந்து போகமுடியாத குழப்பமும் காணப்படும்)

**பாடகர்:** கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி
நல்வித்தை யாவும் தருவாளடி
பல்விதமாக நாம் பாடுவோம் வாணியைப்
பாதம் பணிந்திடுவோம் வாருங்கடி.

(தெரு ஒன்று அமைகிறது. அதில் எதிர் எதிரே வரும் ஆசிரியை2 உம், கௌந்தியும் சந்தித்துக் கொள்கின்றனர்.)

**ஆசிரியை2:** கௌந்தி, எப்பிடி? இந்த முறை உம்மடை மாக்ஸ் எல்லாம் எப்பிடி?

**கௌந்தி:** மற்ஸ்55, சயன்ஸ்50, சமூகக்கல்வி65, ரீச்சர்.

**ஆசிரியை2:** சந்தோஷம். நீர் வரேக்கை எல்லாப்பாடமும் குறையத்தானே எடுத்தனீர். கௌந்திட்டைக் கனக்க முட்டை கிடக்கு. நல்லாப் பொரிச்சுச் சாப்பிடலாம் எண்டு மற்றப் பிள்ளையள் எல்லாம் பகிடி பண்ணினவை.. என்ன? இப்ப நல்ல முன்னேற்றம்...(முதுகில் தடவி உற்சாகப்படுத்தல்) அடுத்த முறை என்ன மாக்ஸ் வரும்?

**கௌந்தி:** எல்லாம் டிஸ்ரிங்சன் வரும் ரீச்சர்.

**ஆசிரியை2:** Fine. நான் போட்டு வாறன்.

**கௌந்தி:** நல்லதோர் ஆசிரியர் கற்பித்தால், தாங்க முடியாத மகிழ்ச்சியில் பூக்கள் தலையாட்டும் வேர்கள் பூமிக்கடியில் புல்லாங்குழல் வாசிக்கும்.



(மீண்டும் பெரிய பாடசாலை அமைகிறது. மாணவர் ஊதா நிற ரையுடனும், கொம்பு வைத்த தலையுடனும் காணப்படுவர். பின்னணியில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருக்கக் கீழ் மேடையில் ஆசிரியர்1 உம், சர்வாவும் சந்திப்பர்.)

**ஆசிரியை1:** என்ன சர்வா, காணாத மாதிரிப் போறீர்?

**சர்வா:** இல்லை ரீச்சர்.

**ஆசிரியை1:** என்ன இல்லை ரீச்சரும் ஓம் ரீச்சரும். நேற்றுத் தமிழ்த்தினப் போட்டி என்னமாதிரி? கோட்டமட்டத்திலை பெஸ்ற்(First) தானே?

**சர்வா:** இல்லை ரீச்சர்.... எனக்குக் கிடைக்கேல்லை.

**ஆசிரியை1:** என்ன? கிடைக்கேல்லையோ? வெட்கமில்லாமல் கிடைக்கேல்லை எண்டு சொல்லுறீரோ? (இன்னும் குரலை உயர்த்தி) எவ்வளவு பிள்ளையள் தங்களைப் போடச் சொல்லிக் கேட்கக் கேட்க நீர் முதலாவதா வருவீர் எண்டு நம்பியெல்லே உம்மைப் போட்டது. என்ன ஆட்டம் ஆடிப் போட்டு வந்திருக்கிறீர் கேக்கிறன்?

**சர்வா:** (மிகுந்த கவலையுடன்) எனக்கு ஒருத்தரும் சொல்லித் தரேல்லை ரீச்சர்.

**ஆசிரியை1:** என்ன பேய்க் கதை உது? உமக்கு கெட்டிக்காறி எண்ட தலைக்கனம். வேறை ஒண்டுமில்லை. யாரிட்டையும் போய்க் கேட்டுப் பழகி இருக்கலாம் தானே!

நந்தினி ரீச்சரிட்டை வீட்டை போய்க் கேட்டுப் பழகச் சொல்லி எல்லே சொன்னனான். என்ன செய்தனீர்? நித்திரையே கொண்டனீர்? தோல் உரிக்க வேணும் உமக்கு. இப்ப பிரின்சிப்பல் கேட்டால் என்ன சொல்லுறது? அவர் நான் அனுப்பிற எந்த நிகழ்ச்சியும் பிறைஸ் எடுக்கும் எண்டு நம்பியெல்லே இருக்கிறார். அவர் இப்ப என்னை எல்லோ பேசப்போறார். இந்தப் பிள்ளை கொஞ்சமும் அக்கறை இல்லாததெண்டு அவருக்குத் தெரியுமே?

**சர்வா:** நீங்கள் போட்டிக்கு வரேல்லை. ஆனால் நான் நல்லாத்தான் செய்தனான் ரீச்சர்.

**ஆசிரியை1:** நான் வரேல்லை எண்டு நீ எனக்குச் சொல்லுறியோ? என்ரை வேலை எனக்குத் தெரியும். உனக்குப் பின்னாலை திரியிறதே என்ரை வேலை.நல்லாச் செய்தால் முதலாமிடம் வந்திருக்குந்தானே! வெக்கம் கெட்ட வேலை செய்து போட்டுப் பிறகு அலட்டிக் கொண்டு நிக்கிறாய். இனிமேல் என்ரை முகத்திலை முழிக்க வேண்டாம். போ...
(முதுகில் கையால் அடிக்கிறா)

(சர்வா விம்மி விம்மி அழுது கொண்டு போகிறாள்.)
(மேடையில் உள்ள நடிகர் அனைவரும் சோக உறை நிலைக்கு வருகின்றனர். சர்வா விக்கி விக்கி அழுது கொண்டு அவர்களுக்கூடே நடந்து வருகிறாள்.)





**பாடகர்:** ஆற்றினிலே கால் ஊன்றி நின்றதொரு நிழல் வாகை
கால் முறிந்து கரையோரம் சேற்றினிலே சரிந்திருக்க
தூர அலைகளிடைத் தலை நீட்டும் கிளை ஒன்று
அதி விரைவாய் ஆறோடும்
அதி விரைவாய் ஆறோடும்
ஓ.........ஓ..........ஓ............ஓ..........ஓ.........
(நடந்து வந்த சர்வா மேடையின் DC க்கு முன்னே உள்ள படியில் அமர்கிறா. அழுகிறா, பின்னர் பாடகருடன் சேர்ந்து தானும் பாடுகிறா.......... மிக மெதுவாக.. முகாரி இராகத்தில்.......)
(சர்வா அப்பிடியே அமர்ந்திருக்கப் பின்னணியில் நடிகர்கள் சர்வாவின் வீட்டை அமைப்பர்)
(அம்மா ஓடி வந்து சர்வாவைத் தொட்டு)

**அம்மா:** என்ன பிள்ளை? ஏன் அழுகிறாய்?
(சர்வா ஏதும் பேசவில்லை. வெறித்த படி இருக்கிறாள்)

**அம்மா:** என்ன பிள்ளை, ஏன் அழுகிறாய் எண்டு சொல்லிப் போட்டு அழனம்மா,

**சர்வா:** (தாயின் கையைத்தட்டி) போ, அம்மா.

**அம்மா:** (கௌந்தியிடம் திரும்பி) கௌந்தி ஏன் இவள் அழுகிறாள்? பள்ளிக்கூடத்திலை ஏதும் நடந்ததோ?

**கௌந்தி:** (அனுதாபத்துடன் அருகில் வந்து) எனக்குத் தெரியாது. எனக்கு ஒன்றும் சொல்லேல்லை.

**அம்மா:** என்ன ரகசியம் எண்டாலும் அம்மாக்குச் சொல்லலாந்தானே பிள்ளை? எனக்கு மனமெல்லாம் பதறுது. பொம்பிளைப் பிள்ளை... ஒண்டும் சொல்லாமல் அழுகிறதெண்டால்....? சொல்லு பிள்ளை என்ன நடந்தது?
(தோளைப் பிடித்து உலுக்குகிறாள்)

**சர்வா:** (கோபத்துடனும், அழுகையுடனும்) நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டன். அதுதான் இரகசியம் போ!
(நாடகம் தொடங்கும் போது - மேடையில் இரு பக்கங்களிலும் இரு ஏணி இருக்கும். ஒரு ஏணியில் வெள்ளை உடையில் ஊதா நிற ரையுடன் ஒருவர் உச்சியில் இருப்பார். மற்ற ஏணியில் ஒருவர் பச்சை நிற ரையுடன் அடியில் இருப்பார். நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஊதா நிற ரையுள்ளவர் ஏணியில் படிப்படியாக இறங்கி வருவார். பச்சை ரையுள்ளவர் படிப்படியாக ஏறிப்போவார். "எல்லாம் டிஸ்ரிங்சன் வரும்" என்ற வசனத்தைக் கௌந்தி சொல்லும்போது அவர் திடீரென்று ஏறி உச்சியில் குந்திக் கொள்வார். நாடகத்தின் இறுதியில் சர்வா, "நான் இனிமேல் பள்ளிக்கூடம் போக மாட்டன்" என்ற வசனத்தைச் சொல்லும் போது, ஊதா ரையுள்ளவர் திடீரென்று படபடவென்று இறங்கி ஏணியின் அடியில் குந்திக் கொள்வார்.)





**உரைஞர்1:** ஆசிரியர் ஒரு ஞான விளக்கு

**உரைஞர்2:** ஆசிரியர் ஊருணி நீர்

**உரைஞர்1:** ஆசிரியர் சந்தனம்
(எல்லோரது பார்வையும் ஒரு கணம் சர்வா மீது பதியும் - ஒரு நிமிடம் மேடையில் முழுமையான அமைதி நிலவும்)
(பாடகரும் நடிகரும் இணைந்து பின்வரும் பாடலுக்கு ஆடிப்பாடுவர்.)

**பாடகர்:**
அம்புவியில் மாணவர்கள் வென்றி பெறக்
காரணமே
ஆசிரிய வாண்மை என்று சொல்லு - அவர்
அடிபணிந்து வாழ்த்துக் கூறி நில்லு -பிள்ளை
வெம்பி நிற்கும் வேளையிலே
அன்பு மிகக் கொண்டணைத்து
வெற்றி பெறச் செய்யும் நல்ல ஆசான்-அவன்
விரட்டுவது துன்பமெனும் மாசாம்.
நாளைய சமூகத்தினர் வாழவழிசெய்திடுவோன்
நல்ல ஆசிரியன் என்ப துண்மை -அவன்
நாட்டுவது பிள்ளை உளவன்மை - வரும்
காலம் ஒளி பெற்றிடவே
வேலை மிகச் செய்து நல்ல
கல்வி விளக் கேற்றுகிற வாண்மை - அது
களத்திலாடும் வீர மொத்த ஆண்மை-
அம்புவியில்

(இப்பாடலுக்குரிய ஆட்டத்தை ஆடியபடியே வணக்கம் கூறி நடிகர் மேடையை விட்டு நீங்குவர்)
(இந் நாடகத்தில் வரும் பாடல்களை இயற்றியவர்கள் விழிசைச் சிவம். ம.பிரவீணன். றொஸ். சி. சிவசேகரம்

# பாரதி மீண்டும் வருகிறான்

முதல் மேடையேற்றம்:-

24.06.1983 – மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நிறுவியவர் நினைவு நாள் விழா.
(1969 இல் எழுதப்பட்டது)





## .பாரதி மீண்டும் வருகிறான்.

(25 நிமிட றோமான்ரிக் நாடகம்)

(திருக்கைலாய மலையில் சிவபெருமான் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் காட்சி, மேடையில் மங்கிய ஒளி. ஓமம் வளர்த்தலைக் காட்டும்படி மெல்லிய புகை மேடையில் பரவி இருக்கிறது. வேத ஹோஷம் பாடகரால் இசைக்கப்படுகிறது.)

(பாடகர் மேடையின் பிறபக்கத்தில் நிற்பர். தமிழ் மகளாக உடையணிந்த ஒருவர் கம்பீரமாக DC க்கு வருகிறார்.)

**தமிழ் மகள்:** வணக்கம். நான்தான் தமிழ் மகள். முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களிலும் செல்லமாக வளர்க்கப்பட்ட நான் பாவலர்க்குச் சாரதியாம் பாரதியினால் புதுப் பொலிவு பெற்றேன். விண்ணுலகில் மற்றவர் விதந்துரைக்க வாழ்கின்ற பாரதி தனது நூற்றாண்டு விழா பூமியில் கொண்டாடப்படுவதை அறிந்து அதைப் பார்க்க விரும்புகிறான்.
(தமிழ் மகள் விலகிச் செல்ல உமாதேவி இறைவனிடம் வருகிறாள்)

**உமா:** சர்வ லோக நாதா!

**சிவன்:** மௌனம்.

**உமா:** சர்வ லோக நாதா!!
(அண்மையில் வந்து சிவன் காலடியில் அமர்ந்து)

நான் எப்பொழுது கூப்பிட்டாலும், உங்கள் திருச் செவிகளில் விழுவதில்லை. என்னைப் பற்றி அக்கறையுமில்லை. அவருடைய நிஷ்டையும் அவரும்..........(சிணுங்குகிறாள்)

**சிவன்:** (கண் விழித்துப் பலமாகச் சிரித்து) ஹா.......ஹா.........யாரது? உமாவா? எப்பொழுது வந்தாய்? எனது சக்தியாகிய உன்னைப் பற்றியான் கவலைப்படாதிருந்தால் உலகம் எப்படி இயங்கும்? அது சரி, என்ன காரியமாக வந்தாய்?

**உமா:** காரியம் ஒன்றும் இல்லாவிட்டால் வரக்கூடாதாக்கும். உங்களுடன் பூவுலகப் புதினங்களைக் கதைத்துப் பொழுது போக்கலாம் என்று வந்தால்.........

**சிவன்:** ஓ! அப்படியா? சரி, சரி, சொல்லு. பூவுலகிலே என்ன புதினங்கள்? முக்கியமாகத் தமிழ் பேசும் நாடுகளிலே என்ன செய்திகள்?

**உமா:** தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பாரதி நூற்றாண்டு விழாத் தடல்புடலாகக் கொண்டாடப்படுகிறதாமே! ம்...(எட்டிப் பார்த்து) அதோ, பாரதியே வருகிறான். (பாடல் ஒலி கேட்கிறது)

**பாடகர்:** (உள்ளிருந்து)
தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்





எங்கள் தாய்........ எங்கள் தாய்........
யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்
பாருள் எந்நாளுமோர் கன்னிகை என்னப்
பயின்றிடுவாள் எங்கள் தாய்
எங்கள் தாய் எங்கள் தாய்!
முப்பது கோடி முக முடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் - இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள் - (தொன்று)
(பாடலைப் பாடிக் கொண்டு மேடைக்கு வந்த பாரதி சிவனை வணங்குகிறான்)

**சிவன்:** என்ன பாரதியாரே, நலந்தானா? பூவுலகிலே எல்லா இடமும் உமக்கு விழா எடுக்கிறார்களாமே! இப்போதெல்லாம் எம்மை யாரும் நினைத்துக் கொள்வதில்லை. உம்மிடம் எமக்குப் பொறாமையாக இருக்கிறது.

**பாரதி:** அபச்சாரம் சுவாமி. அபச்சாரம். உங்களை நினைப்பதும் என்னை நினைப்பதும் சமமாகுமா? தாங்கள் அவ்வாறு கூறக்கூடாது சுவாமி.

**சிவன்:** சரி. அது நிற்க. நீர் என்ன விடயமாக இவ்விடம் வந்தீர்?

**பாரதி:** சுவாமி, மீண்டும் ஒரு முறை பூவுலகம் சென்று, எனது சிந்தனைகள் எவ்வளவு தூரம் செயற்படுகின்றன என்று பார்த்து வர ஆவலாக இருக்கிறது. பெண்ணடிமைத்தனம்

முற்றாக ஒழிக்கப்பட்டுப் பெண்கள் ஆண்களுடன் எல்லாத் துறைகளிலும் சரி நிகர் சமானமாக வாழ்கிறார்கள் என்று சமீபத்திலே பூமியில் இருந்து வந்தவர்கள் சொல்கிறார்கள். அதைப் பார்க்க விரும்புகிறேன். இறைவா!

**உமா:** மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் இறப்பவர்களின் உயிரைக் கவர யமதர்மராஜன் செல்லும் போது, அவனுடன் பாரதியையும் அனுப்பி விடுங்கள் சுவாமி. பாவம் பாரதி!

**பாரதி:** அதோ, யமதேவனே வருகிறார் சுவாமி!

**யமன்:** (சிவனை வணங்குகிறான்.)

**சிவன்:** யமதேவா, அடுத்த முறை நீர் ஈழநாட்டிற்குச் செல்லும் போது, பாரதியாரையும் உமது எருமைக் கடாவில் அழைத்துச் செல்லும். சரிதானே!

**யமன்:** எருமையில் 'டபிள்' போக முடியாது பிரபு! இருந்தாலும் தங்கள் கட்டளை அப்படியாயின் முயற்சி செய்கிறேன்.
(பாரதியைப் பார்த்து)
வாரும் பூவுலகம் செல்வோம். ஈழநாட்டின் வடபுல யாழ்ப்பாணத்திலே உள்ள தெல்லிப்பழைச் சந்தியில் இன்று மோட்டார் சைக்கிள் விபத்தில் ஓர் உயிர் போகும். அங்கே செல்லும்போது உம்மையும் கூட்டிச் செல்வேன். வாரும்.





(இருவரும் எருமையில் ஏறும் ஊமம்)
கவனமாக இரும். விபத்தில் பிரியும் உயிரை எடுக்கப்போகும் நாமே விபத்தில் சிக்கி விடக்கூடாது.

**தமிழ்மகள்:** (DC யில்)
நாட்டின் நடப்பைப் பார்ப்பதற்குத் தெல்லிப்பழைச் சந்தி நல்லதோர் இடம். பாரதியும் காலனும் அங்கே மறைந்திருந்து நடப்பவற்றைப் பார்க்கிறார்கள்.
(யமனும் பாரதியும் எருமையில்இருந்து இறங்கும் ஊமம். ஒரு இடத்தில் மறைந்திருந்து பார்க்கும் ஊமம்.)

**யமன்:** இதுதான் தெல்லிப்பழைச் சந்தி, அதோ அந்த மதகில் இருந்து ஒருவர் பத்திரிகை படிக்கிறார். கேட்போம். வாரும்.

**ஒருவர்:** என்ன.. என்ன தலைப்புப் போட்டிருக்கிறான் என்று பாப்பம்.
(பேப்பரை விரித்துப் படிக்கும் ஊமம்)
' அப்பலோ 20 ' என்ற விண்வெளிக்கப்பல், சந்திரத்தரையில் இறங்கியுள்ளது. இதில் பயணம் செய்த அமெரிக்கக் குழு தமது நாட்டுக் கொடியை அங்கேநாட்டியுள்ளது.....
.ஓ....நல்ல வடிவான படமும்போட்டிருக்கிறான்.

**யமன்:** நீர் முன்பு பாடியது சரியாக நடந்திருக்கிறது. உமக்கு மிகவும் சந்தோஷம். என்ன?
(பாடகர் பின்வரும் பாடலைப்பாட நடிகர் அனைவரும் அசைவர்)

பாடகர்: மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்
(வெள்ளிப்பனி)

யமன்: அதோ, அங்கே இரண்டு ஆங்கிலேயர் வருகிறார்கள். பாரும்.

**English lady:** Every second, your span of life is being shortened, the moment that has gone is no longer yours, the moment that is coming may not be yours at all. So, start at this very moment to earn eternal joy.

**Other lady:** Yes. Thats true. But our people lack will. They don't lack strength.

பாரதி: இப்போது நமது தமிழ் மக்களில் இருவர் வருகிறார்கள்.

ஒருவர்: ஏதோ ஒரு காரணம் பற்றி ஒருத்தரோடை ஒருத்தர் பழகிறதும், அந்தக் காரணம் தீர்ந்த பின் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிஞ்சு கவலையில்லாமல் போறதும் இயற்கையாய்ப் போய்விட்டது. உள்ளன்புடன் வாழ்வில் கலந்து பழகி உணர்வால் ஒன்றுபடுகிற நட்பு அரிதாகிப் போய்விட்டது. நட்பு வகையிலை நடந்திட்ட இந்த மாறுதல்தான் காதல் வாழ்க்கையிலையும் நேர்ந்திட்டுது. சீ....சீ.......





மற்றவர்: ஆமாம். யந்திர நாகரிகமும் பொருட் கவலையும் கணவன் மனைவிக்கிடையில் கூட ஒரு மேற்போக்கான அன்பைத்தான் வளர்த்திருக்கின்றன. காதல் என்கிற ஆழ்ந்த உணர்வு உள்ளத்திலே வளர்வது அரிதாகி விட்டது.

யமன்: இலங்கையின் ஆட்சி மொழி வருது. கேளும்.

பெண்1: அனே, ஒயாட பிசு!

பெண்2: ஆ... ஏகதமாய்.....
(அவர்கள் தொடர்ந்து கதைத்துச் சென்று மறைவர்)

பாரதி: அதோ இரண்டு ஜேர்மனியர்
(அவர்கள் ஜேர்மன் மொழி கதைத்துச் சென்று மறைவர்)

யமன்: எப்படி இருந்தாலும், எத்தனை மொழிகளைக் கேட்டாலும், நீர் அன்று பாடியது போல, தமிழ்மொழி தான் இன்னும் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.

பாடகர்: யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமெமது தமிழ ரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்,
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

(DC இல் இருந்து DR க்கு ஒரு பெண் சைக்கிள் ஓடிக்கொண்டு செல்கிறாள்)

**பாரதி:** ஆ........ பெண்களெல்லாம் ஆண்களுடன் சமமாகச் சைக்கிள் ஓடுகிறார்கள். நான் பாடிய சமத்துவம் உண்மையாகவே வந்துவிட்டது போலத்தான் இருக்கிறது.

**யமன்:** ஊஹூம். அப்படி விரைவில் முடிவு செய்யக் கூடாது. ஒரு வீட்டினுள் நுழைந்து பார்த்தால்தான் உண்மை தெரியும். வாரும் காட்டுகிறேன்.
(இருவரும் போகிறார்கள்)

**தமிழ்மகள்:** சிவபெருமானின் தலையில் இருப்பதால் எட்ட முடியாது என நினைத்திருந்த அம்புலித் தரையில் மனிதன் காலடி வைத்து விட்டான். மூன்று நாலு மொழிகளை மட்டும் அறிந்திருந்த பாரதி அன்று என்னைவிட அழகியவள் இல்லை என்று பாடினான். இன்று பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றுத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கும் வித்திட்ட தனிநாயகம் அடிகளார் போன்றவர்களும் ஒப்பீட்டு ஆராய்ச்சிகள் மூலம் அதையே கண்டு பிடித்திருக்கின்றனர். பெண்கள் கல்வி, தொழில் நுட்பம், அரசியல் துறைகளில் துரித முன்னேற்றம் கண்டு ஆண்களோடு சரி நிகர் சமானமாகப் போட்டியிடுகிறார்கள். இவற்றைக் கண்டு பெரிய குதூகலம் கொள்கிறான் பாரதி. ஆனால்............





**யமன்:** இப்படி ஒளித்து நில்லும்

**பாரதி:** உங்கள் பெரிய உருவந்தான் தெரியப் போகிறது. வடிவாக மறைந்து நில்லுங்கள்.
(வீட்டிலே வேலையில் இருந்து திரும்பி வந்த கணவர் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கிறார்)

**கணவன்:** பாமா.......... பாமா.........

**மனைவி:** (உள்ளிருந்து வந்து) என்ன, கூப்பிட்டீங்களோ?

**கணவன்:** கூப்பிட்டனீங்களோ, கூப்பிடேல்லையோ எண்டு கேட்டுக் கொண்டு நிக்காமல் தேத்தண்ணியைக் கொண்டாவன் கெதியா.

**மனைவி:** நானும் உங்களைப் போல வேலையாலை தானே வந்தனான். எனக்கும் களைப்பு இருக்குந்தானே. கெதியாக் கொண்டா எண்டு நிண்டால், நான் என்ன செய்யிறது?

**கணவன்:** ஐயோ, ஐயோ, உன்னோடை பெரிய இழவாப்போச்சுது. உன்னை உத்தியோகத்துக்குப் போகச் சொல்லி நானே அனுப்பினனான். கலியாணத்துக்கு முந்திச் சீதனம் சேர்க்க வேணுமெண்டு உன்ரை கொப்பன் தானே உன்னை வேலைக்கு அனுப்பினவர்?

**மனைவி:** நீங்கள் எப்பிடியும் பேசுங்கோ....... ஆனா........ இஞ்சாருங்கோ......என்ரை அப்பாவைப் பற்றித் தேவையில்லாமல் கதைச்சால் எனக்குக் கோபம் வரும்... ஓம்....... சொல்லிப்போட்டன்.

**கணவன்:** உன்ரை அப்பன் என்ன பெரிய கொம்போடி?

**மனைவி:** ஓம். கொம்புதான். உங்கடை அப்பா மாதிரி இல்லை. நினைச்சுக் கொள்ளுங்கோ.

**கணவன்:** என்னடி சொன்னாய்........ நாயே..... கழுதை....... (அவளைப் பிடித்து இழுத்து அடித்து, உதைக்கிறான்)

**மனைவி:** ஐயோ....... ஐயோ........ என்னைக் காப்பாத்த ஒருத்தரும் இல்லையோ.
(தலையில் இரத்தம் வழிந்தோட, அவள் மயங்கி விழுகிறாள்)
(பாரதியின் முகத்திலும் வேதனை தோன்றுகிறது. தலையைக் குனிந்து கொள்கிறான்.)

**பாடகர்:**
மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்.
வையை வாழ்வு தன்னில் எந்த வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே.
(வீதி வழியே இருவர் கதைத்துச் செல்வதைப் பார்க்கிறார்கள்)

**ஒருவர்:** அவங்களைக் கோயிலுக்குள்ளை விடச் சொல்லி ஆரடா சொன்னது?



**மற்றவர்:** ஒருத்தரும் சொல்லேல்லை. அவங்கள் தாங்களாத்தான் போயிட்டாங்கள்.

**ஒருவர்:** அப்பிடியே,அப்ப இதுக்கு ஒரு முடிவு காணத்தான் வேணும். எவ்வளவு திமிர் அவங்களுக்கு!

**பாடகர்:**
ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே,
வாழி கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே.
(பாரதியார் மயங்கி வீழ்கிறார்)

**யமன்:** என்ன பாரதியாரே, பெண்ணடிமை, சாதி எல்லாம் அப்படி அப்படியே இருக்கிறது. நீர் பாடிப்பாடி ஒரு பயனும் இல்லையே.

**பாரதி:** ம்........ ம்........ (முனகியபடி விம்முகிறார். பின்னர் கண்ணை மூடிக் கொள்கிறார்.)

**தமிழ் மகள்:** வெளித் தோற்ற நிலைகண்டு மயங்கி நின்றபாரதி உள் நுழைந்து பார்க்கும் போது துடித்துப் போகிறான். பெண்ணடிமைத்தனம் பெரிதாக எங்கும் விடுவிக்கப்படவில்லை என்பது அவனுக்குப் புரிகிறது. சாதி ஒழிப்புப் பெருங் கூச்சலோடு நடைபெற்றும், மனித மனங்களில் இன்னும் சாதிக்குச் சாவு மணி அடிக்கப்படவில்லை என்பது அவனுக்குத்

தெரிகிறது.அதிர்ச்சியில் அவன் மீண்டும் மரணிக்கிறான்.

**யமன்:** (பாரதியைத் தோளில் பிடித்துத் தூக்கி) எழும்பும் பாரதியாரே, இப்போது நீர் இறப்பதென்றால், உம்மை இழுக்க நான் பாசக் கயிறு கொண்டு வர வேண்டும். விதியை மறந்து நினைத்தபடி இறக்கவும், எழும்பவும் முடியாது. எழுந்து நடந்து வாரும். எருமையில் ஏறித் திருக்கைலாயம் செல்வோம்.

(திரும்பவும் இருவரும் நடந்து எருமையில் ஏறும் ஊமம். மேடையில் மீண்டும் திருக்கைலாயம் அமைகிறது. இருவரும் எருமையில் இருந்து இறங்கும் ஊமம். பாரதி ஓடிச் சென்று சிவபெருமானுக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுகிறார்)

**சிவன்:** என்ன, பாரதியாரே, என்ன நடந்தது?

**பாரதி** இறைவா, நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்..... இறைவா?

(நடிகர்கள் அனைவரும் கூடி இறைவனை வணங்கும் ஊமத்தில் நிற்க மீண்டும் வேத கோஷம் ஒலிக்கும். திரை மூடிக் கொள்ளும்)











PDF Reducer Demo